விலை சதம் 25

# சுதந்திரன்
## SUTANTIRAN




திருவள்ளுவர் ஆண்டு 1999, கார்த்திகை 23 உ (9-12-67) சனி ரம்ழான் 6 — புத்தகம் 22 இதழ் 16

# 9020 மலையகத் தமிழருக்கு
# உடன் பிரசாவுரிமை வழங்குக!



கிறிஸ்மஸ் தாத்தாவின் நத்தார் "பரிசு"

## பிரதம மந்திரிக்கு நாகநாதன் கடிதம்

"இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தின் கீழ் நாடற்றவர் என்று கூறப்படும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் 9020 பேருக்கு உடனடியாக இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க நடவடிக்கை எடுங்கள்" இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன், பிரதமருக்கு எழுதியுள்ள ஒரு அவசரக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாரென்று தெரிகிறது.

இக்கடிதத்தில் டாக்டர் நாகநாதன் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறாரென்று அறியப்படுகிறது.

"1964-ம் ஆண்டு சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் ஒப்பந்தத்தின் கீழ் 1967-ம் ஆண்டு நவம்பர் 30-ம் தேதி வரை இந்தியத் தூதுவரகம் 15,790 பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கியிருப்பதாக அறிவித்துள்ளது. ஆகவே ஒப்பந்தத்தை இந்தியத் தூதுவரகம் ஓரளவு அமுல் நடத்திவருகிறது.

'ஆனால் இலங்கை இன்னும் அதை அமுல்நடத்த ஆரம்பிக்கவில்லையென்பது விசனிக்கத்தக்கது. இலங்கை அவ்வொப்பந்தத்தை அமுல் நடத்தத் தொடங்கியிருந்தால், இதுவரை நாடற்ற 9020 இந்திய வம்சாவளியினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கியிருக்க வேண்டும்.

'ஆகவே தாமதமின்றி 9020 இந்திய வம்சாவளி மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க உடன் நடவடிக்கையெடுக்கும்படி வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்."

மேற்கண்டவாறு டாக்டர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் என்று தெரிகிறது. "நாடற்ற" மக்களில் ஏழு பேர் இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்தால், நான்கு பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க வேண்டுமென்று சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.



## சுதந்திரன் செய்தியின் எதிரொலி; பிரதமரின் துரித நடவடிக்கை

திருமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் அங்கு நடைபெற்றுவரும் தமிழ் துவேஷ நடவடிக்கைகளைப் பற்றி சென்ற வாரம் சுதந்திரன் அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து அது பற்றி ஆராய உடனடியாக ஒரு தமிழ் அதிகாரியை திருமலைக்கு பிரதமர் அனுப்பி வைத்துள்ளாரென்று தெரிகிறது.

சுதந்திரனில் வெளிவந்த இச்செய்தியுடன், டாக்டர் இ. மு. வி. நாகநாதன், திரு. சு. ம. மாணிக்கராசா அமைச்சர் திருச்செல்வம் ஆகியோரும் இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலரும் பிரதமரைப் பேட்டி கண்டு இது பற்றி புகார் செய்ததுடன், சுதந்திரனில் வெளிவந்த செய்தியை மொழி பெயர்த்து பிரதமரிடம் கையளித்தனரென்று தெரிகிறது.

தமிழரசுத்தலைவர் திரு. செல்வநாயகமும் பிரதமருக்கு இது பற்றி ஒரு ஆட்சேபக் கடிதம் எழுதியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி ஆராய்ந்து தமக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கும்படி ஒரு தமிழ் அதிகாரியை உடனடியாக திருமலைக்கு பிரதமர் அனுப்பிவைத்துள்ளார்.

## பொ. கட்சி பின்வாங்கியது!

கிளிநொச்சிப் பட்டின சபையின் முதலாவது தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 4-ந் திகதி தாக்கல் செய்யப்பட்டன. பட்டின சபையின் 7 வட்டாரங்களிலும் தமிழரசு வேட்பாளர்கள் கட்சி ரீதியில் போட்டியிடுகிறார்கள்.

இத்தேர்தலில் ஏழு வட்டாரங்களுக்கும் கட்சி ரீதியாக போட்டியிடப்போவதாக கூறித்திரிந்த தமிழ் காங்கிரஸ் கட்சியினர் கடைசிநேரத்தில் போட்டியிலிருந்து பின்வாங்கினர். இதற்குக் காரணம், கிளிநொச்சியில் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுவதற்கு யாரும் முன்வராததே யென்று தெரிகிறது.

கிளிநொச்சிக்கு பட்டின சபை அந்தஸ்து கிடைப்பதை சதிசெய்து முறியடிக்க முயற்சித்த பொ. கட்சியினர், தாம் கட்சி ரீதியில் தேர்தலில் போட்டியிட்டால் கிளிநொச்சி மக்கள் என்று அஞ்சியே கடைசி நேரத்தில் தேர்தல் களத்திலிருந்து பின்வாங்கினர் என்று தெரிகிறது.

எனினும் சமசமாஜக் கட்சியிலிருந்து தமிழ் காங்கிரசுக்கு அண்மையில் மாறியுள்ள திரு. ஆனந்தசங்கரி இத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்.

தமிழரசு வேட்பாளர்களை ஆதரித்து இம்மாதம் 18-ந் திகதி பரந்தனில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும் என்று தெரிகிறது.

## சிங்கள எம். பி. கள் ஆச்சரியம்


தமிழ்ப் பிள்ளைகளுக்கு தாய் மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டுமென்பதில் தமிழரசுக்கட்சியின் உறுதியான நிலையை ஏற்று, தமிழரசாரின் பின்னால் தமிழ் காங்கிரஸ், இ. தொ. காங்கிரஸ் இரண்டும் பக்கபலமாக நிற்பது அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த பல சிங்கள எம். பிக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டதென்று தெரிகிறது.

இவ்வாரம் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில், குறித்த 3 கட்சிகளும் இப்பிரச்சினையில் ஐக்கியப்பட்டு நிற்பதை சிங்கள உறுப்பினர்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




சொல்லுதல் வேண்டும்
பிறி தோர் சொல் அச் சொல்லை
வெல்லும் சொல்லின்மை அறிந்து

# தமிழ் தொகையிலே

## நவம்

உலோகம்: தமனியம் இரும்பு, தாமிரம், ஈயம், வெள்ளி, பதுகம், இரதி, நாகம், கஞ்சம்.

கிரகம்: ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகஸ்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது.

கிரகசமித்து: எருக்கு, முருக்கு, கருங்காலி, நாயுருவி, அரசு, அத்தி, வன்னி, அறுகு, தருப்பை.

கிரக தானியம்: கோதுமை, பச்சரிசி, துவரை, பச்சைப் பயறு, கடலை, மொச்சை, எள், உளுந்து, கொள்ளு.

மணி: கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து வைரம், வைடூரியம்.

வாயில்கள்: கண்கள், காதுகள், மூக்கு வாயில்கள், வாய், குதம், குய்யம்.

கிரகபுட்பங்கள்: செந்தாமரை, வெள்ளாம்பல், சண்பகம், வெண்காந்தள், முல்லை, வெண்டாமரை, கருங்குவளை, மந்தாரை, செவ்வாம்பல்.

கிரகரத்தினம்: சூரியன் — மாணிக்கம், செவ்வாய் — பவளம், குரு — புட்பராகம், சனி — நீலரத்தினம், கேது — வைடூரியம், மதி — முத்து, புதன் — பச்சை, வெள்ளி — வைரம், இராகு — கோமேதகம்.

கிரக வாகனம்: மயில், முத்து விமானம், அன்னம், குதிரை, யானை, கருடன், காகம், ஆடு, சிங்கம்.

கிரக லோகம்: தம்பாக்கு, ஈயம், செம்பு, பித்தளை, பொன், வெள்ளி, இரும்பு, கருங்கல், துருக்கல்.

கிரக அங்கம்: ஏகு - மார்பு, மதி தோள், செவ்வாய் - தலை, புதன் - கழுத்து, குரு - வயிறு, சுக்கிரன் - முகம், சனி - தொடை, இராகு - முழங்கால், கேது - உள்ளங்கால்.

கிரக ஆசனம்: வட்டம், சதுரம், திரிகோணம், அம்பு, நீள்சதுரம் ஐங்கோணம், வில், கொடி, முச்சில்.

தொகுப்பு: பி. க. மித்திரா, தையிட்டி.

அன்புள்ள தம்பி தங்கைகளே,

வணக்கம். எங்கேயண்ணு இவ்வளவு காலமாக போயிருந்நீர்கள் என்று நீங்கள் கோபத்துடன் சிணுங்குவது எனக்கு தெரிகிறது. மன்னியுங்கள். இனி உங்களை வாராவாரம் சந்திக்கிறேன்.

இப்பொழுது பரீட்சைகள் எல்லாம் முடிந்து பாடசாலை விடுமுறைதானே! விடுமுறையை வீணுக்காதீர்கள்! நிறைய எழுதுங்கள்!

விடுமுறையை எப்படிக் கழிக்கிறீர்கள்? அது பற்றி அண்ணுவுக்கு சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். வெளியிடுவேன்.

மாணவர் அரங்கு உங்கள் பக்கம். அதை அழகுபடுத்துவது உங்கள் கடமை.

கிறிஸ்மஸ் வருகிறதல்லவா? கிறிஸ்மஸ் பற்றி மாணவக் கவிஞர்கள் அளுக்கு இரண்டு கவிதைக்கு மேற்படாமல் எழுதியனுப்புங்கள்.

உம், தூக்குங்கள் பேனவை! அடுத்தவாரம் சந்திப் போமே.

அன்புள்ள
கோபு அண்ணு

## பாடசாலை வாழ்வினிலே.....!

அன்று வகுப்பேற்றப் பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது கலைப்பகுதி ஆரம்ப வகுப்பு படிக்கிறேன். அதே பரீட்சை தினத்தில் நானும் பரீட்சையெல்லாம் எழுதி முடித்துவிட்டு இருக்கையில் எனது வகுப்பு நண்பர்கள் சிலர் கடற்கரைத் தோட்டத்திலே இளனி குடிப்போம் என்று திட்டம்போட்டார்கள். நானும் அதற்கு சம்மதம் தெரிவித்தேன். நானே கடற்கரையில் இருக்கும் தென்னந்தோட்டம் என்னுடன் வந்த நண்பர்களில் ஒருவருடைய தோட்டமாக இருக்கலாம் என்றுதான் நினைத்திருந்தேன். ஆனல் அங்கு நடந்ததென்ன தெரியுமா?...

இளனி குடித்துக்கொண்டிருக்கையில் ஒரு அறுபது வயது மதிக்கத்தக்க கிழவர் ஒருவர் வெயில் நேரமாகையினுல் ஒரு குடையின் கீழ் வந்துகொண்டிருந்தார். இவரை நாங்கள் யாருமே பொருட்படுத்தவில்லை. இதற்கிடையில் கிழவர் இன்னர் என்று அறிந்துகொண்ட நண்பன் 'ரமேஷ்' அடே... தோட்டத்தின் குத்தகைக்காரக் கிழவன் வாருண்டோ! அவன் பொறுப்பான கிழவன்டோ, இருந்தாப்போல் இரும்புத் தடியால் அடித்து விடுவான். எல்லோரும் ஓடவதற்குத் தயாராக இருங்கடோ என்று தென்னை மரத்தில் இருந்த ரமேஷின் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தோம் கிழவன் வந்துகொண்டிருந்தான்.

அப்போதுதான் இங்கு இளனி திருடிக் குடிக்க வந்திருக்கின்றோம் என்று உணர்ந்தேன். என்ன செய்வோம்? வெளியே போவதற்கு ஒரே ஒரு வழிப் பாதைதான். அவ்வழியால் கிழவன் இரும்புத் தடியோடு வந்துகொண்டிருந்தான். இதற்கிடையில் வாடகைச் சைக்கிள் இரண்டு இரவல் சைக்கிள் ஒன்று. இது இப்படியிருக்க எனது சைக்கிள் புத்தம் புதியது. எடுத்து மூன்றே நாள் தான். அது கிழவனின் இரும்புத்தடிக்கு இரையாகிவிடுமோ என்று பயம் ஒருபக்கம் ஏற்பட்டது. இந்த இக்கட்டான நிலையில் இருந்து எப்படியோ அவ்விடத்தை விட்டு வெளியேறிவிட்டோம். ஆனல் மரத்தில் இருந்த நண்பன் "ரமேஷின்" இரவல் சைக்கிள் கிழவனின் இரும்புத் தடிக்கு இரையாகிவிட்டது. கிழவன் தன்னுடைய கோபத்தையெல்லாம் அந்த சைக்கிள் மேல் காட்டி விட்டான்.

சிறிது நேரம் போக கிழவர் இல்லாத சமயம் பார்த்து அச் சைக்கிளை வெளியே கொண்டு சேர்த்தோம். பின்பு அதற்குத் தேவையான சாமான்களையெல்லாம் வாங்கிப் போட்டுத் திருத்தி சைக்கிள் உரிமையாளரிடம் விஷயத்தைக் கூறிக் கொடுத்தோம். நல்ல வேளை எனது புதிய சைக்கிள் கிழவனிடம் அகப்படவில்லை. இந் நிகழ்ச்சியை மறுநாள் காலையில் வகுப்பு மாணவர்களிடம் சொல்லிச் சிரித்தோம். அன்று நடந்த இந்த வேடிக்கையான நிகழ்ச்சியை இன்று நினைத்தாலும் சிரிப்புத்தான் வருகிறது.

— சிங்கனவாடி மூர்த்தி,
மட்டுநகர்.

## தம்பிக்கு

— வெளிமடை மனோரஞ்சிதம் —

இறைவனை வணங்கிடு தம்பி—உன்,
இன்னல்கள் தொலைந்திடும் தம்பி
குறைகளைப் போக்கிடு தம்பி—உன்
குணத்தை வளர்த்திடு தம்பி

பெற்றோரைப் பேணிடு தம்பி—உன்
பெருமை பெருகிடும் தம்பி
நற்றமிழ் கற்றிடு தம்பி—உன்
நாடு செழித்திடும் தம்பி

அன்புடன் வாழ்ந்திடு—தம்பி நல்ல
அறிவையும் பெற்றிடு தம்பி
பண்புடன் நடந்திடு தம்பி—நல்ல
பழக்கத்தைக் கொண்டிடு தம்பி

பெரியோரை மதித்திடு தம்பி பெரும்
புகழையும் பெற்றிடு தம்பி
அறிஞரைக் கண்டிடு தம்பி—உந்தன்
அறிவைப் பெருக்கிடு தம்பி

மாணவர் சிறுகதை:

## கருணையின் விளைவு

ஒரு வயது போன கிழவன் தள்ளாடிய படி நடந்து கொண்டிருந்தான். அவன் தலையில் ஒரு கூடை. கூடை நிறைய மாம்பழம். விற்பதற்குப் போலும் பாவம்! வேலனுக்கு உறவினரே கிடையாதா? யாருக்குத் தெரியும்.

நடந்துக்கொண்டிருந்தவன் திடீரென நின்றான், வேலனுக்கு கண்ணையிருட்டிய மாதிரியிருந்தது. அதற்குள் கூடை கவிழ்ந்தது. அவன் அப்படியே பாதையோரத்தில் விழுந்து விட்டான்.

சாயங்காலம் நாலுமணி. பள்ளிக்கூட மணி கண கணவென்று அடித்தது. கூய்...... என்று புற்றீசல்கள் கிளம்பியது போல மாணவர் பட்டாளம் வெளிபட்டது. எல்லா மாணவர்களும் நாலுகால் பாய்ச்சலில் வீட்டிற்கு பறந்து கொண்டிருந்தார்கள்.

குமாரும் அவனது வகுப்பு மாணவர் சிலரும் ஒன்றாகபாடசாலையிலிருந்து வெளிப்பட்டார்கள். சற்று தூரம் வந்தவுடன், 'டேய் அதாபாரடா' குமார் கத்தினன், ஆ! மாம்பழம் என்றான இன்னெருவன் அதைச் சொல்லவில்லையடா. அந்த தாத்தாவைப் யாரு. மயங்கிப் போய் கிடக்கிறாரு என்றான்.

அவன் கூறியதை ஒருவரும் லட்சியம் செய்யவில்லை அன்றொரு நாள — குமாருடைய தங்கை மேசையிலிருந்து குதித்து விளையாடிய பொழுது கால தவறி நிலத்தில் விழுந்து மயங்கிப் போய் விட, அவனுடைய தயார், தங்கைக்கு தண்ணீர் தெளித்த சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து தங்கை எழுந்ததெல்லாம் மின்னல் வேகத்தில் குமாருடைய ஞாபகத்தில் வந்தது. அவன் தனது சக மாணவர்களை லட்சியம் செய்யவில்லை. நேரே தண்ணீர்க் குழாயடிக்கு சென்று தனது கைக்குட்டையைநனைத்தான். ஓரே ஓட்டத்தில் வேலன் இருக்குமிடம் வந்து நனைத்த கைக்குட்டையால் வேலனின் முகத்தை துடைத்தான். அசைவையே காணும்.

கைக்குட்டையை பிழிந்து தண்ணீரை உடம்பெல்லாம் தெளித்தான், மூக்கருகே கையை வைத்துப்பார்த்தான், மூச்சு வந்துக் கொண்டிருந்தது சிறிது நம்பிக்கையுடன் யோசித்தான். ஏதாவது தண்ணீர் குடிப்பதற்கு கொடுத்துப் பார்ப்போம் என்று எண்ணியதுதான் தாமதம், சட்டைப்பையை துழாவினன். பதினைந்து சதம் கிடைத்தது. நேரே ஓடினன் பாடசாலையின் உள்ள கடையை நோக்கி, சுடச்சுட தேனீர் வாங்கிக் கொண்டுவந்தான். அதற்குள் வேலன மயக்கம்சிறிது தெளிய தள்ளாடிய படி எழுந்து சுற்று முற்றும் பார்த்தான.

அவன் கூடை வெறுமையாக கிடந்து அவனைப்பார்த்து சிரித்தது. தூரத்தே சில பையன்கள் மாம்பழம் புசித்துக்கொண்டு செல்வதைக் கண்டான். அவன் உள்ளம் துடித்தது. தனது பேரப்பிள்ளை சாந்தி ஆசையாகக் கேட்ட கேட்ட பழம். அவன் முகம் கண்முன் வர ஒருபையன் ஓடி வந்தான். தாத்தா எழுந்திட்டியா? இந்த தேநீரை குடியுங்கோ என்றுவேலன் கையில் கொடுத்து விட்டு வேலன் குடிப்பதை பார்த்துக்கொண்டிருந்தான. வேலன் முழுவதையும் குடித்து விட்டு நன்றி நிறைந்த பார்வையோடு குமாரை பார்த்தான். தாத்தா குடித்து முடிந்ததா? தாங்கோ என்று கிண்ணத்தை வாங்கி கடையில் ஒப்படைத்து விட்டு வந்தான்.

தேனீர் வயிற்றை நிரப்பியவுடன் வேலன் சிறிதுதெம்படைந்தான். குமாரைப் பார்த்து, தம்பி! மறு பையன்கள் எல்லோரும் மாம்பழத்தை எடுத்துண்ண முற்பட்ட பொழுது நீஎன் மயக்கத்தைத் தீர்க்க முற்பட்டாய் யாரப்பா நீ? என வினவினன். குமார் தான் இருக்கும் இடத்தைக் கூறினன். சரி தம்பி நாளை உன் வீட்டிற்கு வருகிறேன் எனக் கூறி வேலன் எழுந்து நடந்தான.

மறுநாள் பாடசாலை விடுமுறை நாள் ஆனபடியால் குமார் தங்கையோடு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். முதல் நாள கூறிய படியே வேலன் கையில் கூடையோடு வந்தான். வேலனைப் பார்த்தவுடன் குமார் ஓடிச் சென்று, தாத்தா வாங்கோ! என்று வரவேற்றான். வேலன் கூடையை நிலத்தில் வைத்து திறந்தான். கூடை நிறைய மாம்பழம். தம்பி ஆசை வைக்காது நீ செய்த நன்றிக்கு நான் கொடுக்கும் பரிசு எல்லாம் உனக்குத்தான் கொண்டு வந்தேன் என்றான். அப்போது பேச்சுக்குரல் கேட்டு குமாருடைய தாயாரும் அவ்விடம் வந்தாள். வேலன் முதல் நாள் நிகழ்ச்சியை கூறினன் தன் மகனது செயலை அறிந்த தாயார் மிகவும் பெருமையடைந்தாள். ஒரு பழத்தை விரும்பாத குமாருக்கு ஒரு கூடை பழம் கிடைத்தது. குமார் மிகவும் சந்தோஷப்பட்டான்.

செல்விபாப்பா சரவணமுத்து

உபதேசகதைகள் 2

## காவல் முதல்வன்

நபிகள் நாயகம் ஒருநாள் தனியாகப் போய்க்கொண்டிருக்கும்போது யூத வீரனெருவன் அவரைத் தாக்குவதற்கு வாளை உருவிக்கொண்டு ஓடி வந்தான். நபிகள் நாயகம் கலங்கவில்லை. அஞ்சா நெஞ்சத்துடன் நிமிர்ந்து நின்ற அவரைக் கண்டு திகைத்த யூதன், உமக்கு அச்சமே கிடையாதா? இப்போது நான் உம்மைக் கொலைப்போகின்றேன். உம்மைக் காப்பது யார்? என்று கேட்டான். பெருமானர், என்ன கேள்வி கேட்டாய்? ஆண்டவன் காப்பாற்றுவான் என்றார். இடி முழக்கக் குரலில் — நபிகளின் நம்பிக்கைக் குரலைக் கேட்டதும் யூதனின் கைவாள் தடுமாறிக் கீழே விழுந்தது. அப்போது பெருமானர் சரேலென்று அந்த வாளை எடுத்துக்கொண்டு "இப்போது

(16-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அழகு,
ஆரையம்பதி.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளோ என் உற்ற நண்பனுடன் இரவில் கள்ளக் காதல் புரிகிறாள். இக் காதலை முறிக்க என்ன செய்யலாம்?

ப: உங்களின் காதலை முறித்துக் கொள்ளுங்கள் அவர்களின் காதலை முறிக்க முயற்சி செய்யவேண்டாம்.

ஃ

டீ. எம். என். டீன்,
பொகவந்தலாவ.

கே: ஐந்தறிவு உள்ள நாய்க் கிருக்கும் நன்றி ஏன் ஆறறிவுள்ள மானிடர்க்கில்லை?

ப: காரணம் மனிதனிடம் கூடுதலாக இருக்கும் ஓர் அறிவு நன்றி கொல்லும் அறிவாக இருப்பதே!

ஃ

ஆர். கண்ணன்,
நீர்கொழும்பு.

கே: வெற்றியின் இரகசியம் என்ன?

ப: தோல்வி.

கே: ஆண்டவன் படைப்பைப் பற்றி உங்களின் கருத்து என்ன?

ப: ஆண்டவன் கருத்தே அப்படியிருக்கும் போது நான் என்ன சொல்ல முடியும்.

ஃ

சுந்தர்,
ஆரையம்பதி.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளோ என்னை ஓரக்கண்ணால் பார்க்கிறாள். இதன் மர்மம் என்ன?

ப: அவள் உங்களைக் காதலிக்கவில்லை. நீங்கள் காதலிக்கத் தகுந்தவரா என்பதை இன்னும் எடைபோட்டுக் கொண்டிருக்கிறாள்.

ஃ

கே. நவரத்தினம்,
நெடுங்கேணி.

கே: ரூபாவின் பெறுமதியை அரசாங்கம் குறைத்தது எதற்காக?

ப: வெள்ளைக்காரனின் பவுண் பித்தளையாக மாறிய தற்காக.

கே: பிடிக்காத அரசாங்க ஊழியர்களை இடமாற்றம் செய்யும் எங்கள் வன்னியூர் சிவா பிடிக்காத ஊர் மக்களை என்ன செய்யப் போகின்றார்?

ப: அடுத்த தேர்தலில் தனக்கு வாக்களிக்க வேண்டாமென்று அவர்களைக் கேட்டுக் கொள்வாராம்.

ஃ

அரு வாசகன்,
யாழ்ப்பாணம்.

கே: அடுத்தவருடக் கலண்டரில் ஒரு அழகிய வர்ணங்கள் கொண்ட தந்தை செல்வாவின் படத்தை அச்சிட்டு ஒவ்வொரு 'சுதந்திரன்' இதழுடனும் தருவீர்களா?

ப: சிறந்த யோசனை.

கே: தமிழரசுக்கட்சி எம். பி.மார் ஒவ்வொருவரும் 'சுதந்திரனை'ப் படிக்கிறார்களா?

ப: படிக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் தமிழ் காங்கிரஸ் எம். பிகளும், ஐ. தே. கட்சியின் தமிழ், முஸ்லிம் எம். பிகளும் நிச்சயம் படிக்கிறார்கள்.

ஃ

ஐ. நடேசன்,
நெல்லியூர்.

கே: நாணயம் பெறுமதி 20% குறைப்பால் என்ன நன்மை?

ப: சிக்கனப்பழக்கம் ஏற்படுவதே நன்மை. உணவு, உடை எல்லாவற்றிலுமே இனி 20% குறைந்துவிடுமல்லவா?

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: ஐக்கிய தேசியக்கட்சியின் வருங்காலம் எப்படியிருக்கும்?

ப: ரூபாயின் மதிப்பு போன்று இருக்கும்?

ஃ

'தமிழரசி',
உடுப்பிட்டி.

கே: போதனுமொழி மசோதாவில் தமிழரசுக்கட்சியின் மூன்று அம்சத் திட்டமும் இடம் பெற்றுள்ளதை ஜீ. ஜீ. ஆதரிப்பாரா?

ப: ஆதரித்தாலென்ன, ஆதரிக்காவிட்டாலென்ன? அவரிடம் மூன்றே மூன்றுதானே உண்டு வாக்குகள்!

கே: மாவட்டசபை மசோதா ஜனவரியில் பாராளுமன்றத்துக்கு வரும் என்பதைப் பிரதமர் கூறிய பின்னும், மா. ச. சபையை எதிர்க்கும் ஜீ. ஜீ. அரசாங்கத்தில் ஒட்டியிருப்பது ஏன்?

ப: வந்த பிறகும் ஒட்டிக் கொண்டுதான் இருப்பார்! 1954ல் சர். ஜோன் செய்ததைச் செய்யும்வரை ஒட்டிக் கொண்டுதான் இருப்பார்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

கே: இந்து கலாச்சார பல்கலைக்கழகக் கோரிக்கையைத் திரு. பொன்னம்பலம் கைவிடப் போவதாக சொல்லப்படுகின்றதே! அப்படியான மாற்றம் அவருக்கு ஏற்பட்டது ஏன்?

ப: அது காலஞ்சென்ற நடேசனின் சரக்கு—பிறரின் சரக்கில் கைவைத்தால் என்றாவது ஒருநாள் கையை எடுக்கத்தானே வேணடும்.

ஃ

எஸ். செல்வராசா,
நெடுங்கேணி.

கே: எங்கள் வவுனியா எம். பி. யின் யாழ் அகற்றிச்சங்கம் இருந்த இடத்தைக்கூடக் காணவில்லையே?

ப: இப்பொழுது அது அரசாங்க ஊழியர் இடமாற்றச் சங்கம் என்று பெயர் மாற்றப் பட்டுள்ளதாம்!

ஃ

பாகவதர்,
பெல்மதுளை.

கே: எனது நண்பரொருவர் நான் செய்த ஒரு சிறு குற்றத்திற்காக ஒருமாத காலமாக இன்னும் பேசாமலிருக்கிறார். பேசுவதற்கு என்ன செய்யலாம்?

ப: ஒரேவழி செய்த குற்றத்துக்கு அவரிடம் மன்னிப்பு கேட்பதுதான்.

ஃ

சந்தர்,
தெல்லிப்பழை.

கே: எனது கேள்விக்குப்பதில் எழுதுவதற்குப் பணம் கேட்பீர்களா? பதிலுக்காக எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும்? யாரிடம் கொடுக்கவேண்டும்?

ப: எனது 'ரேட்' மிகமிகக் குறைவு—வாரம் 25 சதம் மட்டுமே! அதை 'சுதந்திரன்' விற்பனை ஏஜண்டிடம் கொடுங்கள். அவர் சுதந்திரன் ஒன்று கொடுப்பார். அதில் மூன்றும் பக்கத்தில் பதிலை வாசியுங்கள். எனவே உங்களுக்கு இரு கட்டணங்கள்! ஒன்று 25 சதம் கொடுப்பது—மற்றது சுதந்திரனை வாசிப்பது.

ஃ

'மார்கழி மைந்தன்',
பதுளை.

கே: இருப்பவர்களைப் பராமரிக்க முடியாத அரசுகள், பிறக்கப்போகிறவர்களைக் கட்டுப்படுத்துவதைப்போல, இறக்கப்போகிறவர்களையும (நோயாளிகள் முதலியோர் (அனுமதிக்காமல் தடுப்பதேன்?

ப: மனிதாபிமானமே காரணம்! பிறந்த மனிதன்மீது அபிமானம் இருக்க முடியுமே தவிர பிறக்காத மனிதன்மீது அபிமானம் இருக்கமுடியாதல்லவா?

ஃ

எம். ஐ. நாதன்,
முள்ளியவளை.

கே: பொ. கட்சிக் கிடையில் ஏதோ பிளவு ஏற்பட்டிருக்கிறதாமே அது உண்மையா?

ப: அப்படி ஒரு பேச்சு அடிபடுகிறது. அக் கட்சியில் ஏற்படும் எந்தப் பிளவும் கொள்கையின் அடிப்படையில் ஏற்பட முடியாது. காரணம் அக் கட்சிக்குக் கொள்கை ஒன்று இல்லாதிருப்பதே!

ஃ

எஸ். ஆர். சுப்பிரமணியம்,
பலாங்கொடை.

கே: ஆசிரியர்கள் அடிக்கடி 'லீவு' எடுப்பதின் மர்மம்?

ப: கல்வி அறிவற்ற ஒரு பிள்ளைக்கு கல்வி அறிவூட்டுவதுதான் உலகிலே மிக மிகக் கடினமான வேலை. ஆகவே அவர்களுக்கு அடிக்கடி லீவு தேவைபபடுகிறது.

ஃ

என். ஏ. பி. தாஸ்,
அட்டகலம்பன்ன.

கே: தவறு செய்பவர்களை மன்னிப்பது தெய்வ குணம் என்று சொன்ன ஒருவரே, ஒருவர் தவறு செய்தபோது மன்னிப்பு கேட்டும் மன்னிக்காது கோபித்துக் கொண்டிருக்கிறார். இவரின் குணம் எபபடிப்பட்டதாக இருக்கும்?

ப: மனித குணமாக இருக்கும்.

ஃ

கே. ஆர். மணி,
மாதகல்.

கே: திரு. பொன்னம்பலத்துக்கு ஏதும் மந்திரி பதவி கிடைக்குமா?

ப: எட்டாத கனிக்கு எத்தனை கொட்டாவிகள் விட்டும் பயனென்ன? தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறினால் அந்தக் கனி தனக்குக் கிடைக்குமென்று அவர் நினைக்கிறாராம்.

ஃ

ச. சபாநேசன்,
காரைநகர்.

கே: இலங்கையிலுள்ள இடதுசாரிகளின் கொள்கையினை எடுத்து உரைப்பீரா குயுக்தியாரே! பேசும்?

ப: அவர்களுக்குள்ள ஒரே பொதுக் கொள்கை தேசிய அரசை எதிர்ப்பதே. மற்றப்படி அவர்களின் ஒவ்வொரு கொள்கை வேறுபாடு உண்டு. [illegible] அவர்களிடம் கிடையாது.

மெய்கண்டான் வழங்கும்
ரூ-1000·00
பெறுமதியான 168 பரிசுகள்

சித்திர கலா — என்ற சொல்லில் சித்திரமும் கலையும் பிணைந்திருக்கின்றன. அத்தோடு மெய்கண்டான் வெளியிடும் மற்றொரு புதிய கலண்டரான சித்திரகலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும் இது குறிக்கும்.

குருபரன் — என்ற பதத்தில் லீலா விநோதனான பரனுக்குக் குருவாகிய குமரன் என்ற பொருள் பொதிந்திருக்கிறது. அத்தோடு மெய்கண்டான் வெளியிடும் மற்றுமொரு சிறிய சைஸ் பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும் இது குறிக்கும்.

தமிழுலகில் முதன் முதல் சித்திர சகிதமான திருக்குறட் கலண்டர்களை வெளியிட்டு வெற்றிகரமாக விற்பனை செய்து வருபவர்கள் மெய்கண்டான் ஸ்தாபனத்தார்.

மெய்கண்டான் திருக்குறட் கலண்டரில் சமய ஞானிகள், உத்தமப் பெரியார்கள் தெய்வப் புலவர்கள், தேசத் தியாகிகள் போன்றோரின் சித்திரங்களே இடம்பெற்று வருகின்றன. அறிஞர்களின், பெரியோர்களின், பிரமுகர்களின் தரத்திற் கேற்பவே மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்களில் படங்கள் பொறிக்கப்படுகின்றன.

இது தவிர

முழுக்க முழுக்க, பக்கத்துக்குப் பக்கம், சித்திரங்களைக் கொண்ட (நம்பர் 2, நம்பர் 3) தனிச் சித்திரக் கலண்டர்களாக மலிவு விலையில், இரண்டு புதிய கலண்டர்களையும இவ்வாண்டு முதல் வெளியிடுகிறார்கள் மெய்கண்டான் ஸ்தாபனத்தார்.

விபரங்களைத் தெரிந்துகொண்டீர்கள் அல்லவா? இப்போது இங்கு தரப்படும் வினாவுக்கு ஏற்ற விடையைத் தெரிந்தனுப்பி பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.

வினா: "சித்திர கலா" — "குருபரன்" என்ற அழகிய சொற்களை மெய்கண்டான் ஸ்தாபனத்தார் பிரயோகித்தால் அவை எதைக் குறிக்கும்?

கீழே தரப்பட்டிருக்கும் 6 விடைகளில் பொருத்தமான 2 விடைகளை ஒரு போஸ்கார்ட்டில் எழுதி அனுப்பிவையுங்கள்.

விடை 1. சித்திர கலா — ஒரு நடிகையின் பெயர்.

விடை 2. சித்திர கலா — ஒரு நடன மன்றத்தின் பெயர்.

விடை 3. சித்திர கலா — மெய்கண்டான் ஸ்தாபனம் வெளியிடும் சித்திரங்களும் கலையம்சங்களும் நிறைந்த ஒரு புதிய பெரிய 'சைஸ்' கலண்டரின் பெயர்.

விடை 4. குருபரன் — பழனி முருகனின் திருப்பெயர்.

விடை 5. குருபரன் — ஒரு தமிழ்ப் பத்திரிகையின் பெயர்.

விடை 6. குருபரன் — மெய்கண்டான் ஸ்தாபனம் வெளியிடும் சித்திரங்களும் கலையம்சங்களும் நிறைந்த ஒரு புதிய சிறிய 'சைஸ்' மலிவு விலைக் கலண்டரின் பெயர்.

பரிசு விவரங்கள்

1-ம் பரிசு ரூ. 100-00 ரொக்கம்
2-ம் பரிசு ரூ. 50-00 ரொக்கம்
3-ம் பரிசு ரூ. 25-00 ரொக்கம்

மற்றும் 165 பரிசுகள் ஒவ்வொன்றும் ரூபா 5/- பெறுமதியான பொருட்கள்

சரியான விடை அனுப்புபவர்களின் பெயர்கள் குலுக்கி எடுத்துப் பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறுபவர் விபரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

மெய்கண்டான் பிரஸ் லிமிட்
161, செட்டியார் தெரு,
தொலைபேசி: 79141 கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே விண்ணப்பித்தவர்கள். ● இலங்கையரை மணந்தவர்கள். ● இரண்டு தலைமுறைகளாக இலங்கையில் பிறந்தவர்கள். ● இலங்கையரான தாய்க்கும் இந்தியரான தந்தைக்கும் பிறந்தவர்கள். ● இந்திய வம்சாவளியினரான பெற்றோர்க்கு இலங்கையில் 1948க்கு முன் பிறந்தவர்கள் ● 1948க்கு முன்பிருந்து தொடர்ச்சியாக இலங்கையில் வாழ்பவர்கள்;

# இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதில் முதலிடம் யாருக்கு? விபரம் இதோ!

## பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி!

இலங்கை இந்திய ஒப்பந்த சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பிப்பவர்களுக்கு அவ்வுரிமையை வழங்குவதற்கு வேண்டிய பூர்வாங்க ஏற்பாடுகளை பிரதமரது பொறுப்பிலிருக்கும் வெளிவிவகார அமைச்சு ஏற்பாடு செய்து வருகிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தச் சட்டத்தை அமுல் செய்வதற்கென குடிவரவு குடியகல்வு இலாக்கா அலுவலகத்தின் இரண்டாவது மாடியில் தனியொரு பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பகுதிக்கு மேலதிக உதவிச் செயலாளராக குடிவரவு கண்ட்ரோலர் திரு. டபிள்யூ. ரி. ஜெயசிங்க நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இலங்கைக் குடியுரிமைத் திணைக்களமும் இலங்கை இந்திய சட்ட அமுலுக்கென தொடங்கப்பட்டுள்ள இப்புதிய பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இலங்கைக் குடியுரிமைத் திணைக்கள ஆணையாளரான திரு. டி. பி. எம் எக்கநாயக்காவும் இப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலதிக நிரந்தர செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. டபிள்யூ. ரி. ஜெயசிங்க கூட்டரசாங்கத்தின் நட்சுப்பல்லாக்காக விளங்கிய திரு. என். கியூ. டயசின் நெருங்கிய நண்பராக விளங்கிய போதிலும் ஓர் வகுப்புவாதியல்லவென்று கூறப்படுகிறது.

திரு ஜெயசிங்கா எப்படிப்பட்டவர்? மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையை நல்லமுறையில் அணுகுவாரா என்பது பற்றி நமது நிருபர் டாக்டர் நாகநாதனிடம் விசாரித்த போது, திரு. ஜெயசிங்காவின் நேர்மையையும் வகுப்புவாதமற்ற நடுநிலைக் கொள்கையையும் டாக்டர் வானளாவப் புகழ்ந்தார்.

இனவேறுபாடோ, பாரபட்சமோ திரு. ஜெயசிங்காவிடம் துளியும் கிடையாதென்றும், தனது கடமையை ஒழுங்காகச் செய்யக்கூடியவர் என்றும், நமது நிருபரிடம் டாக்டர் மேலும் தெரிவித்தார். இதே கருத்தை பட்டிருப்பு பா. உ. திரு. சி. மூ. இராசமாணிக்கமும் தெரிவித்தார்.

இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதற்கு வேண்டிய பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் முடிந்து விட்டனவென்றும் அதற்கான விதிகள் இன்னும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாததால் மேற்கொண்டு எதுவும் செய்ய முடியவில்லையென்றும் ஓர் அதிகாரி நமது நிருபரிடம் கூறினார்.

பின்வரும் முறைப்படி இலங்கைப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பிப்பவர்களுக்கு, அவ்வுரிமை வழங்கப்படுமென்று அறியப்படுகிறது.

1. இந்திய, பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச்சட்டத்தின்கீழ் ஏற்கெனவே இலங்கைப் பிரஜாவுரிமை கோரி முன்பு விண்ணப்பித்தவர்களின் இடாப்புகள் யாவும் இப்பொழுது நிரைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதென்று தெரிகிறது.

இச்சட்டத்தின் கீழ் விண்ணப்பித்திருந்தவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படும் போது முதலிடம் அளிக்கப்படும்.

2. இரண்டாவது வகையினர் இலங்கையரை மணந்த இந்திய வம்சாவளியினர். இலங்கையரை மணந்தவர்களுக்கு இப்போதுள்ள இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழேயே இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க வசதியிருக்கிறது. எனினும், அரசாங்கக் கொள்கைப்படி அவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் அவ்வுரிமையை வழங்காமல் விடவும் முடியும். இப்படிப்பட்டவர்கள் இரண்டாவது வகையினராக கணிக்கப்படுவர்.

3. இரண்டு தலைமுறைகள் இலங்கையில் பிறந்தவர்கள்— — இரண்டு தலைமுறைகளாக இருந்தும், அதை நிரூபிக்க முடியாததால் இலங்கைப் பிரஜாவுரிமை பெறும் வாய்ப்பை இழந்தவர்கள் மூன்றாவது குழுவினராக கணிக்கப்பட்டு அவர்களது விண்ணப்பங்கள் ஆலோசிக்கப்படும்.

4. இலங்கையின் வம்சாவழிப் பிரஜையான ஒரு தாய்க்கும், இந்தியவம்சாவழியினரான தந்தைக்கும் பிறந்த இலங்கையில் குறித்த காலம் தங்கியிருந்ததை அத்தாட்சிப்படுத்த முடியாமல் சிலர் இலங்கை பிரஜா உரிமைச் சட்டத்தின் கீழ் குடியுரிமை பெற முடியாது இருந்தனர். இவர்களது விண்ணப்பங்கள் நான்காவதாகக் கவனிக்கப்படும்.

5. தாய் தந்தையர் இலங்கையில் பிறக்காவிடினும் விண்ணப்பதாரர் 1948ம் ஆண்டு நவம்பர் 15ந் திகதிக்கு முன்னர் இலங்கையில் பிறந்திருந்தால் அத்தகைய விண்ணப்பங்கள் ஐந்தாவதாக கவனிக்கப்படும்.

6. விண்ணப்பதாரர் இந்தியாவில் பிறந்திருந்தாலும், 15-11-48க்கு முன்பிருந்து தொடர்ச்சியாக இலங்கையில் வாழ்ந்து வருபவர்களாக இருந்தால், அவர்களின் விண்ணப்பம் ஆறுவதாக கவனிக்கப்படும்.

(தொடரும்)

---

சங்கப் பலகை

## கமத்தொழில் விளக்கம்

தீபாவளி இதழ். விலை: சதம் 30.

இலங்கை கமத்தொழிற் பகுதியினரால் வெளியிடப்படும் விவசாயிகளின் தனிப்பெரும் முத்திங்கள் வெளியீட்டின் ஐப்பசி, மார்கழி 1967-ன் இதழ் கிடைக்கப் பெற்றோம். இதழாசிரியரின் கருத்துரையுடன் விவசாய ஆராய்ச்சிகள் பற்றிய விரிவான கட்டுரைகள் இதனில் இடம்பெற்றுள்ளன. விவசாயப் பகுதியினர் சிபார்சு செய்யும் பயிரின வருக்கங்களும், அவைகளைப் பராமரிக்கும் வழிமுறைகளும், தென்னையைப் பாதிக்கும் ஜெந்துக்கள், நோய்கள் அவைகளைத் தடுக்கும் முறைகளும், விவசாய விஞ்ஞானிகளைப் பற்றிய கட்டுரைகளும், வரிச்சலுகைகள். விவசாயத்தில் பரிசுபெற்ற மட்டக்களப்பு விவசாயிகளின் படங்கள், விளக்கங்கள் முதலியனவற்றுடன் நல்ல பல ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்டிருக்கிறது கமத்தொழில் விளக்கம்.

மாதர்மன்றத்தில், உணவு உற்பத்திபற்றியும், உணவுகளைத் தயாரிக்கும்முறைகளைப் பற்றியும் விவரிக்கப்பட்டிருக்கிறது. சமையல் பாகங்கள், விளையாட்டுச் சாமான்கள் செய்யும் முறைகள் மாதர் பகுதியில் காணப்படுகின்றன. சிறுவர் உலகில் என்ற பகுதியும், மாணவர்சோலை என்ற பகுதியும் பல அரிய விடயங்களைத் தருகின்றன. தோட்டம் செய்தல், பயிர் நடுதல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல் பற்றிய கட்டுரை விளக்கங்கள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்தரக் கூடியன.

—ச.பா.






## இன்று எதிர்ப்போர் அன்று மௌனம் சாதித்த தேன்?

—டாக்டர் இ.மு.வி.

யாழ் எல்லை விஸ்தரிப்பு, வட்டார புனரமைப்பு ஆகியன பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவென மார்ட்டின் கமிஷன் நியமிக்கப்பட்ட போது அதை எதிர்த்து தமிழ் காங்கிரஸ் கட்சியின் எந்த ஒரு உறுப்பினராவது மூச்சு விடவில்லை. மார்ட்டின் கமிஷன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபின்னர் கூட ஏறத்தாழ ஆறு மாதங்கள் வரை அதை எதிர்த்து ஒரு வார்த்தை கூறவில்லை. ஆனால் இப்பொழுது மட்டும் தமிழ் காங்கிரசினர் அதை எதிர்ப்பதற்கு காரணம் என்ன? இவ்வாறு நல்லூர் பா. உ. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் நமது நிருபருக்கு அளித்த ஒரு பேட்டியில் வினவினார்.

டாக்டர் இதுபற்றி மேலும் கூறுகையில்:

"15 வட்டாரங்களைக் கொண்டதாக இருந்த யாழ். மாநகரத்தை 17 வட்டாரங்களாகப் பிரித்தது தப்பும் தவறுமாக நடந்துமுடிந்த ஒரு எல்லை புனரமைப்பு இதைக் கண்டித்தும், புதிய முறையில் வட்டாரப் பிரிவினை செய்யப்படவேண்டுமென்று கோரியும் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஒரு பிரேரணை முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது. அப்பிரேரணையில் திருவாளர்கள் டட்லி சேனநாயக்கா, லெஸ்லி குணவர்த்தன, டி. பி. ஆர். குணவர்த்தன, ஜே. ஆர். ஜெயவர்த்தன, கே. எம். பி. ராஜரத்தின, ஷெல்டன் ஜெயசிங்க, எஸ். ஜே. வி. செல்வநாயகம், அ. சிவசுந்தரம், டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, எம். சிவசிதம்பரம் (உடுப்பிட்டி பா. உ.), எஸ். ஏ. விக்கிரமசிங்கா, டபிள்யூ. தஹநாயகா, நான் ஆகியோர் கையெழுத்திட்டிருந்தோம்.

"ஆனால் இத்தீர்மானம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவில்லை. எனினும் அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் உடன் நடவடிக்கை மேற்கொண்டார். இதன் பயனாக மார்ட்டின் கமிஷன் நியமிக்கப்பட்டது.

"மார்ட்டின் கமிஷன் நியமிக்கப்பட்ட நேரத்தில் அதை எதிர்த்துத் தமிழ் காங்கிரசிலிருக்கும் எவராவது மூச்சுக் கூட விடவில்லை. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மார்ட்டின் கமிஷன் முன்பு சாட்சியமளித்தனர்.

நான் கூட, மார்ட்டின் கமிஷனின் சில சிபார்சுகளை அப்போது எதிர்த்தேன். ஆனால் காங்கிரசார் எத்தகைய எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

"மார்ட்டின் கமிஷன் அறிக்கை மந்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் கூட எவரும் வாய் திறக்கவில்லை.

"இதெல்லாம் முடிந்து, தேர்தலின் பின் 6 மாதங்கள் கழித்தே மார்ட்டின் கமிஷன் அறிக்கையை எதிர்க்க வேண்டுமென்ற ஞானோதயம் தமிழ் காங்கிரசினருக்கு — குறிப்பாக திரு. பொன்னம்பலத்துக்குப் பிறந்திருக்கிறது.

"இதற்குக் காரணம், திரு. பொன்னம்பலத்தை திரு. மார்ட்டின் தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்டார் என்பதைத் தவிர வேறு என்ன என்ன இருக்க முடியும்?

"அரசியலில் சிறுபிள்ளைவிளையாட்டு வேண்டாம்; உண்மையாக பெருந்தன்மையுடன், நடக்கப் பழகிக்கொள்ளும்படி திரு. பொன்னம்பலத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேம்ஸ் பாண்ட் படங்களை மக்கள் விரும்புவது ஏன்?

## ஜெய்சங்கர் தரும் விளக்கம்

**நான்** இதுவரை 20 படங்களில நடித்து இருக்கிறேன். 10 கதாநாயகிகளுடன் நடித்த படங்களும் வெளிவந்து உள்ளன. இவைகளில் பலவித மாறுபட்ட வேடங்களில் நடித்து இருக்கிறேன். இதில் ரசிகர்கள் எதை மிகவும் விரும்புகிறார்கள் என்பது அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது.

'ஜேம்ஸ்பாண்ட்'பாணிபடம் என்பது துன்பத்துக்கு துவளாத, அஞ்சா நெஞ்சம் கொண்ட கதாநாயகனைக் வருவது. அந்தக் கதாநாயகன் நல்லதைச் செய்து முடிப்பதிலேயே கண்ணுங் கருத்து முள்ளவன். அலட்சியமாக துன்பத்தை சகிப்பவன்.

இந்த வேடம் எனக்கு மிகவும் பிடித்ததே. நமது புராண இதிகாசகால கதாநாயகர்கள் எனக்கு உற்சாகம் அளித்து வருகிறார்கள்.



எப்போதுமே இளம் உள்ளங்கள் வீரச்செயல புரியும் கதாபாத்திர படைப்பை விரும்புவது இயற்கையே. அதுதான் அந்தவித வேடம் அவர்களின் மனதில் பதிகிறது. அவர்களின் எண்ணப்படி 'ஜேம்ஸ் பாண்ட்' பாணி படங்கள் பலவற்றில் நடிக்க விரும்புகிறேன்.

சாதாரண குடும்பச் சித்திர கதாநாயகனை விட 'ஜேம்ஸ் பாண்ட்' கதாநாயகனின் உள்ளம் வலுவானது. எதிர் நோக்கி இருக்கும் ஆபத்துக்களை துச்சமாக தூக்கி எறிய துணிந்தது. ஒரு கொலைச் செய்தியை 'திடீர்' என்று கேள்விப்பட்டாலும் அவன் திகில் அடைய மாட்டான்.

'அடுத்து என்ன?' என்பது பற்றி பரபரப்பு அடையாமல் திட்டம் தீட்டி கண்மூடி கண் திறப்பதற்குள் செயலில் இறங்குவான். அதுதான் இந்த வேடம் எனக்கு மட்டும் அல்ல, லட்சக் கணக்கான துடிப்புள்ள ரசிகர்கள், ரசிகைகளுக்கும் பிடித்து இருக்கிறது என்று கருதுகிறேன். அவர்கள் ஆசையை நிறைவேற்றும் பணியில் முடிந்தவரை ஈடுபடுவேன்.



கையில் குழந்தையுடனும், கண்ணில் சோகத்துடனும் காணப் படும் விஜயகுமாரியை 'பவானியில்' சந்திக்கலாம். இப்படம், சிலோன் என்டர் டெயின்மெண்ட்ஸ்திரைகளில் இப்பொழுது இரண்டாவதுவாரமாக காட்சி தருகிறது.

# கலைவாணரின் ஆசி பலித்து விட்டது என்கிறார் பத்மினி



**எ**ங்கள் சகோதரிகளில் (லலிதா, பத்மினி, ராகினி) நானே முதன் முதலாக கலைத்துறையில் காலடி எடுத்து வைத்தவள்.

என்னுடைய பெரியம்மாவுக்கு ஆறு ஆண்பிள்ளைகள். அவர்களுக்கோ பெண் குழந்தை இல்லையே என்ற ஏக்கம் இருந்தது. ஏழாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் அந்தக் குழந்தை இறந்து விட்டது.

அந்தக் குழந்தை பிறந்த அதே சமயம் நானும் பிறந்தேன். அதனால் என்னை பெண் குழந்தை இல்லையே என்று தத்து எடுத்துக் கொண்டார்கள்.

அம்மாவின் முகத்தை விட பெரியம்மாவின் முகம் பார்த்தே வளர்ந்தவள் நான். பெற்ற தாயை சின்னம்மா என்றுதான் அழைப்பேன். பெரியம்மாதான் அம்மா என்ற அன்பு மொழிக்கு உரியவர்கள் ஆனார்கள். நான் சின்ன வயதில் கூச்சமும், பயமும் மிகுந்தவள்.

என் அண்ணன்மார்கள் ஆஜானுபாகுவாக இருப்பார்கள். அவர்கள் முரட்டுத் தனமாக அடித்து சண்டை போடுவதையும், விளையாடுவதையும் நடுங்கிக் கொண்டே பார்த்துக் கொண்டிருப்பேனும்.

இப்படி பயந்த சுபாவம் கொண்ட எனக்குத் தான் நடனப் பயிற்சி அளிக்கப்பட்டது. கோபிநாத் (தங்கமணி) எனது நடன ஆசிரியர். நடனம் ஆடும் போது நான் பட்ட அடிகளையும், வாங்கிய குட்டுகளையும் இப்போது கூட நினைப்பது உண்டு.

7 வயதில் எனது நடன அரங்கேற்றம் திருவனந்தபுரத்தில் நடந்தது.

அதற்கு தலைமை வகித்தவர் 'கலைவாணர்' என். எஸ். கே. அவர் அன்று பாராட்டியது இன்று சரியாகி விட்டது.

அவர் (என். எஸ். கிருஷ்ணன்) நீ ஒரு பிரபல நடிகை ஆகி புகழ் அடைவாய்! என்று அந்தமேடை மீதே வாழ்த்தினார்.

7 வயதில் கலைவாணர் என் நடன அரங்கேற்றத் திற்கு தலைமைத் தாங்கினார். 14 வயதில் முதன் முதலாக அவருடைய 'மணமகள்' படத்திலேயே கதாநாயகியாக நடித்தேன்.

நான் நடித்த பல மொழிப் படங்களையும் கணக்கிட்டால் 200க்கும் அதிகமாகும். ஆண்டுகளாக கதாநாயகியாக நடித்து வருகிறேன்.

# அம்முவுக்கு நாகேஷ் சொன்னது

இயற்கை அழகை ரசிக்க பழகிக் கொள்!' என்று ஜெயலலிதாவிடம் கூறினார் நாகேஷ்.

ராம்குமார் பிக்சர்சின் 'கலாட்டா கல்யாணம்' என்ற படத்தின் வெளிப்புறக் காட்சியை படம் ஆக்கபடப்பிடிப்பு குழுவினர் சென்னையில் உள்ள மைலேடீஸ் பூந்தோட்டத்துக்கு வந்தார்கள்.

சிவாஜி கணேசன், நாகேஷ், ஜெயலிதா, மனோரமா ஆகியோரும் வந்து இருந்ததால் படப்பிடிப்பு நடக்கவில்லை.



அப்போது ஜெயலலிதாவிடம் உயர்ந்த மரங்களையும் அதில் பாடிப்பறந்து கொண்டிருக்கும் பறவைகளையும் சுட்டிக் காட்டினார், நாகேஷ்.

'அம்மு, அதோ பார் குளுமையான மேகங்களைப்பார். கூவும் குயில்களைப் பார். இதோ இந்த தடாகத்தில் நீந்தும் மீன்களைப் பார். இந்த இயற்கை அழகை பார்த்து ரசிக்க தெரிந்துகொள். இதை விட்டு விட்டு இருவரும் (ஜெயலலிதா, மனோரமா) ஏதோ ரகசியம் பேசி சிரித்துக் கொண்டு இருக்கிறீர்கள். [illegible] உங்களுக்கு ரசிக்க தெரியவில்லை [illegible] வேடிக்கையாக கூறினார்.

# எனக்கு முன்னால் ஏ. வி. எம். எப்படி வந்தது?

**டி.** எஸ். துரைராஜ் அப்போது தயாரித்துக்கொண்டிருந்த 'ஆயிரம் காலத்துப் பயிர்' என்ற படத்தில் எப்படியோ நடித்தாக வேண்டும் என்கிற கால கட்டம் வந்தது.

'பணம் என்ற பக்கபலம் இனிமேல் துரைராஜ் அண்ணனுக்குதான் வரப்போகிறது. பஞ்சம் தெளிந்தது' என்று நம்பிக்கொண்டிருந்தேன். முதல் படம் அல்லவா?

எப்படியோ ஏவி. எம். பட நிறுவனத்தை அடைந்தேன். ஏ. வி. எம். ஸ்தாபனத்தின் மண் வளம் என்று சொல்ல வேண்டும், என் பஞ்சம் தெளிந்தது. ஆனல் அடிமைஆனேன். அது ஒரு கதை.

## ராஜன் சொல்கிறார்

ஏ. வி. எம்மிலிருந்து அண்ணன் துரைராஜியிடம் தொலைபேசியில் பேசினார்கள். தொலைபேசியில் அவர்கள் பேசிய சம்பாஷணையை நானும் தெரிந்து கொள்ளும்படி 'போன்' வசதி செய்யபபட்டது. அப்போது துரைராஜ் அண்ணன் ஏ. வி. எம். நிருவனத்தாருக்கு ஒன்றைச் சொன்னார்.

'ராஜன் எனக்கு அடிமை. எழுதிக் கொடுத்திருக்கிறான். இருபதாயிரம் ரூபாய் தந்தால் விடுதலை. அப்புறம் அவன் நடிக்கலாம்.'

ஏ. வி. எம். படத்தில் நடிப்பேன் என்ற பேச்சுதான். ஒப்பந்தம் எதுவும் செய்திராத நிலை. ஒரு 'ஷாட்' கூட என்னை வைத்து அவர்கள் படமாக்கவில்லை. அந்த நிலையில்...

என் அடிமைத் தளையை அறுத்தவர்கள் ஏ. வி. எம். ஸ்தாபனத்தார்.

இருபதாயிரம் கேட்டதுரை ராஜ் அண்ணனுக்கு பத்தாயிரத்தைக் கொடுத்து என் அடிமை வாழ்வை அகற்றினார்கள்.

நான் ஒரு புத்தகம். அந்தப் புத்தகத்தின் பெயர் ஏ. வி. எம். ராஜன். மற்றவர்கள் 'ஓகோ' என்று பாராட்டக் கூடிய அளவுக்கு சிறப்பான புத்தகம் என்று மற்றவர்கள் கூற மறுத்தாலும், 'பரவாயில்லை, படிக்கலாம்' என்று முன்பு மறுத்தவர்களே ஒப்புக்



கொள்ளும் அளவுக்கு என்னை வெளியிட்டவர்களே ஏ. வி. எம். ஸ்தாபனத்தார்தான்!

மனிதனில் மிருகம்-மனிதனில் மனிதன்-மனிதரில் தெய்வம் என்று மனிதர்களைப் பிரிக்கும்போது ஏ. வி. எம் ஸ்தாபனம் எனக்கு தெய்வம் போன்றது. அன்னையும் பிதாவும் தெய்வம் என்பதால் என் தெய்வமே அன்னையாகவும் பிதாவாகவும் இருக்கட்டுமே. அதனல்தான் ஏ. வி. எம். என்ற சொல் இனிக்கிறது. ஏ. வி எம். ராஜன் என்பதே பிடிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாத்தாண்டித் தொகுதிமீது ஒரு கண்ணோட்டம்

**சுதந்திரன் விசேட நிருபர்**

நாத்தாண்டித் தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் 5ந் திகதி நடைபெறுகிறது.

ஐக்கியதேசியக் கட்சியின் வேட்பாளராக திரு. ஹியூ பர்ணந்தும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக திரு. புரொஸ்டஸ் திசேராவும், மற்றொரு சுயேச்சையும் போட்டியிடுகின்றனர்.

சுயேச்சைகளைப் பற்றி இன்றைய அரசியல் நிலையில் எதுவும்கூறவேண்டியதில்லை. திரு. ஹியூ பர்ணந்து வென்னப்புவ

களாகவும் காட்சியளிக்கின்றனர். கட்டுநேரி, மூதுகட்டு, மாராவில, தொடுவாவ முதலிய கிராமங்களில் பெரும்பான்மையோர் கத்தோலிக்கர்களே.

இத்தொகுதியில் கடற்கரையிலிருந்து உட்பிரதேசத்துக்குச் செல்லச் செல்ல பௌத்தர்கள் அதிகமாக வசிப்பதைக் காணலாம்.

பெருந்தொகையான முஸ்லிம் மக்களும் இத்தொகுதியில் வசிக்கின்றனர். மானிங்கல, கொட்டராமுல்லை, தும்மோதர ஆகியவை பெரிய முஸ்லிம் கிராமங்களாகும்.

குறையாற்தான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு கிராமங்களிலும் மக்களுக்கு அத்தியாவசியமான சாமான்களை விநியோகிப்பதற்கென சிறு கடைகள் ஒன்றிரண்டு உண்டு. கூட்டுறவுக் கடையும் உண்டு. இக் கடைக்காரர்கள் மாதம் ஒரு தடவை அல்லது இருதடவை கொழும்புக்குச் சென்று எப்படியோ சில சாமான்களை வாங்கிக் கொண்டுவந்து விடுகின்றனர்.

அந்தச் சாமான்கள் இரண்டே நாட்களில் விற்றுத் தீர்ந்து விடும். அதற்குப் பிறகு மீண்

டுள்ளனர். இதனால் பல ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் தங்களின் ஆதரவை வேறு திசையில் திருப்பியுள்ளனராம்.

காலஞ்சென்ற நாத்தாண்டி எம். பி. சர், பீரிஸ் தொகுதியில் பொதுவாக எல்லோரின் ஆதரவையும் பெற்றிருந்தார். தமிழர்களும், முஸ்லிம்களும் நூற்றுக்கு நூறு அவருக்கே வாக்களித்தனர். இன்று அவர் இல்லை. எனவே அவர்களின் உள்ளம் வேறு திசைகளில் சிதறிச்செல்வதாகத் தோன்றுகிறது.

பகுதியிலுள்ள தமிழர்கள் இருவித மனதுடன் காணப்படுகின்றனர்.

இம்முறை அவர்கள் வாக்களிக்கும்போது மிகவும் கவனமாக இருப்பார்களென்றே தோன்றுகிறது.

திரு: ஹியூ பர்ணந்து ஏற்கனவே வாக்காளர்களுக்கு அறிமுகமானவர். ஒருமுறை நாத்தாண்டித் தொகுதி பிரதிநிதியாகப் பணியாற்றியவர். அவருக்குச் சொந்தச்செல்வாக்கும் இங்கு உண்டு

ஜோசப் வாஸ் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர். பின்னர் இரு முறை பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்தவர். இரு முறையும் சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

கூட்டாட்சி காலத்தில் சபா நாயகராகப் பணியாற்றினார்.

கூட்டாட்சி வீழ்ச்சியுற்று 1965ல் பொதுத்தேர்தல் நடந்தபோது திரு. பர்ணந்து போட்டியிடவில்லை. ஆனால் ஐ. தே. கட்சி வேட்பாளர்களுக்காகப் பிரசாரம் செய்தார்.

திரு. புரொஸ்டஸ் திசேரா கடந்த பொதுத் தேர்தலிலும் சர். அல்பர்ட் பீரிஸுடன் மோதி தோல்விகண்டவர். பெரிய தனவந்தரென்றும், ஆலைச் சொந்தக்காரரென்றும் கூறப்படுபவர். நாத்தாண்டித் தொகுதியைச் சேர்ந்தவர்.

### மக்கள் பிரிவு

நாத்தாண்டித் தொகுதியில் கரையோரப் பகுதியில் பெரும்பாலும் கத்தோலிக்கர்களே வசிக்கின்றனர். அவர்களிலும் அநேகர் பல்லாண்டுகளுக்கு முன்பு தமிழர்களாக இருந்து பின்னர் தனித்துவத்தை இழந்து படிப்படியாகச் சிங்களக் கலாசாரத்தைத் தழுவினவர்கள். சிங்கள நடையுடை பாவனைகளைக் கொண்ட இவர்கள் இன்று சிங்களம் பேசும் போது சிங்களவர்களாகவும் தமிழ்பேசும்போது தமிழர்

நாத்தாண்டி முதலிய இதர பகுதிகளிலும் முஸ்லிம்கள் அநேகர் பரவலாக வசிக்கின்றனர்.

இந்தத் தொகுதியில் சிங்களக் கிராமங்களில் சுமார் 200 பாரம்பரிய தமிழ் குடும்பங்கள் வசிக்கின்றனர்.

இத்தொகுதியிலுள்ள தென்னந்தோட்டங்களிலும் வம்சாவளித் தமிழர்கள்பலர் தொழிலாளர்களாக வேலைசெய்து வருகின்றனர். இத் தமிழ் குடும்பங்கள் ஒரு கிராமத்தில் குவியலாக வசிக்கவில்லை. பல கிராமங்களில் பரவலாக, சிங்கள மக்கள் மத்தியில் பல சந்ததிகளாக காணி பூமி, வீடு வாசலுடன் வசித்துவருகின்றனர். அவர்களில் அநேகர் சிங்களம் படித்தவர்கள். சிலர் சிங்களவர்களை மணமுடித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### சாதக பாதகங்கள்

அடுத்து, இவ்விரு வேட்பாளர்களும் தேர்தலில் எதிர்நோக்கும் சாதக, பாதகங்களைச் சிறிது ஆராய்தல்நன்று.

அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி ஏற்றத்தால் நாடெங்கிலும் ஏற்பட்டுள்ள அதிருப்தி நாத்தாண்டித் தொகுதியிலும் காணப்படுகிறது.

இத்தொகுதிக் கிராமங்களில் மக்கள் விலைவாசி ஏற்றத்தைவிட சாமான் பற்றாக்

டும் கடைக்காரன் கொழும்புக்குச் செல்லும்வரை கடை காலியாகக் கிடக்கும். கடைக்காரன் ஈ விரட்டிக்கொண்டிருப்பான்.

இவ்வாறு கிராமமக்கள் சாமான் தட்டுப்பாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவு அரசாங்கத்தின்மீது அதிருப்தி ஏற்படுவதுதான்.

இதற்குச் சிகரம் வைத்தால் போல ரூபாய் மதிப்பு வெட்டும் வந்து சேர்ந்தது. அதிருப்தி மேலும் அதிகரித்துள்ளது. ரூபாய் மதிப்புக்குறைவு கிராமமக்களிடையே ஒருவித குழப்ப நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

### ஆதரவாளர்கள் பல்டி

அத்துடன், சென்றபொதுத் தேர்தலின்போது ஐ. தே. கட்சிக்காகப் பாடுபட்ட பிரமுகர்கள் அநேகர் இம்முறை சுதந்திரக்கட்சிக்காகப் பாடு படுகின்றனர்.

ஐ. தே. கட்சியின் ஆதரவாளர்களான இரு பெரும் தலைகள் இம்முறை சுதந்திரக் கட்சி அபேட்சகரை முன் மொழிந்து, வழிமொழிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சில கிராமங்களில் மற்றொரு வேடிக்கையும் நடந்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் போது ஐ. தே. கட்சிக்காகப் பாடுபட்ட சுமார் 100 பேர் வரை ஆசிரியர்கள் தூரப் பிரதேசங்களுக்குத் தவறுதலாக இட மாற்றம் செய்யப்பட்

முஸ்லிம் மக்களிடையே அதிருப்தி காணப்படுவதுடன் இரு கோஷ்டிகளாகவும் பிரிந்துள்ளதாகத் தெரிகிறது. இம்முறை அவர்கள் ஒரே மனிதனைப்போல எழுந்து நின்று வாக்களிப்பார்கள் என்றுகருத முடியாது.

தமிழ் மக்களும் (சுமார் 1000 வாக்காளர்கள்) பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

### அரிசிபங்கீட்டுப் புத்தக மாற்றம்

அதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று கடந்தகாலத்தில், சர். பீரிஸ்; அவர்களின் அத்தியாவசியமான உதவிகளைக்கூட செய்யாதிருந்தது. மற்றது, அவர்களில் அநேகருடைய அரிசிப்பங்கீட்டுப் புத்தகம் அன்னிய நாட்டினருக்குரிய புத்தகமாக மாற்றப்பட்டது.

அவர்கள் அனைவரும் இந்நாட்டு மக்களுக்குரிய அரிசிப் பங்கீட்டுப் புத்தகம்தான் வைத்திருந்தனர். ஆனால் அண்மையில் அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள் மாற்றப்படும் போது, சில கிராமங்களிலுள்ள வகுப்புவாதக் கண்ணோட்டமுள்ள கிராமசேவகர்கள் அவர்களுக்கு அன்னிய நாட்டவர்களுக்கு வழங்கும் பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டனர்.

அவர்கள் ஆட்சேபித்தும் பயன் கிடைக்கவில்லை. சர். பீரிசும் 'ஏன்' என்று கேட்கவில்லை. எனவே இன்று இப்

இத்தொகுதியிலுள்ள பிரமுகர்கள் சுமார் 5 பேர் ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிட முன்வந்தனர். ஆனால் அவர்களில் ஒருவருக்குமே வாய்ப்பு கிடைக்கவில்லை. இதனால் அதிருப்தியுற்று அவர்களில் மூன்றுபேர் சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காகப் பாடுபடுகின்றனராம். மற்ற இருவரும்ஒதுங்கி நிற்கின்றனராம்.

ஆனால் இத் தொகுதியில் திரு. ஹியூ பர்ணந்து தவிர வேறு யார் போட்டியிட்டாலும் இன்றுள்ள நிலைமையில் நிச்சயம் மண் கவ்வுவார்கள் என்று அப்பகுதி மக்கள் பலர் கூறுகின்றனர்.

ஆகவே ஐ. தே. கட்சித் தலைமை சரியான வேட்பாளரையே தெரிவு செய்துள்ளதென்பதில் ஐயமில்லை.

திரு. புரொஸ்டஸ் திசேரா செல்வாக்குள்ளவர். தனவந்தர். மக்களுக்கு அறிமுகமானவர், மக்களுடன் நெருங்கிப் பழகுபவர்.

5000க்கு மேற்பட்ட வாக்குகளை அதிகப்படியாகப் பெற்று, அன்று சர். பீரிஸ் வாகைமாலை சூடினார். ஆனால் அன்று இருந்த சூழ்நிலை இன்று மாறுபட்டுள்ளது.

ஆகவே இந்த இடைத் தேர்தலில் வேட்பாளர்களில் யார் வெற்றிபெற்றாலும் மிகக் குறைந்த மேலதிக வாக்குகளாற்தான் வெற்றிபெற முடியும். அத்தொகுதி மக்களில் அநேகர் கூறுகின்றர்.

---

# நம்பி மோசம் போகாதீர்!

## —காதலி கறுப்பாயியின் கடிதம்—

பேரன்புள்ள வீரா!

நான் உங்கள் காதலி கறுப்பாயி எழுவது. இதுவரையிலும் நமது காதல் விவகாரத்தைப் பற்றியே கடிதங்கள் பறிமாறி கொண்டிருந்தோம். இன்று ஒரு புதியவிடயத்தைப் பற்றி எழுதுகிறேன் பவுத்திரமாக வாசித்து விட்டு ஒரு முடிவுக்கு வாருங்கள். இதை உபதேசம் என்று எண்ணாதீர்கள்.

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தைப் பற்றி உங்களுக்கு நன்றாக தெரியும். இலங்கையிலிருந்து செல்லும் இந்தியர்களுக்கு இந்தியாவில் புனர் ஜென்மம், புதிய வாழ்வு, புதிய பூமி, புதிய தொழில், குத்தகைக்கு நிலம், வட்டிக்குப் பணம் இன்னும் ஏட்டிலடங்கா—சொல்லிலடங்கா மற்றும் வர்ணிக்க முடியாத நல் வாழ்வு கிடைக்கப் போவதாக இலங்கைத் தமிழ் தினசரி பத்திரிகைகளும் மற்றும் நமது தோட்டத் தொழிலாளர்களுக்காக முதலைக் கண்ணீர் சிந்தும் தலை(வர்)களும் தினசரி பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இதை எல்லாம் நம்பி மோசம் போகாதீர்கள்.

இந்த யூனியன் தலைவர்களெல்லோரும் இந்த ஒன்றும் தெரியாத தொழிலாளர்களை குடிபெயர வைத்து, இந்தியாவிலும் அவர்கள் தலைவர்களாய் வர பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதேப் போல் இந்த தமிழ் பத்திரிகைகள் மலைநாட்டுத் தமிழர்களை இந்தியாவுக்கு விரட்ட ஆதரவு தேடுகிறது.

நாம் எல்லோரும் இந்தியாவிற்கு சென்றுவிட்டால், தமிழ் தினசரி பத்திரிகைகளின் உரிமையாளர்கள் என்ன செய்வார்கள்? அந்தமான் தீவிற்கு வந்து திராவிடர்களுக்காக பாடுபடும் ஒரே பத்திரிகை எங்கள்.........? தான் [illegible] முழக்கமிடுவார்களா? பத்திரிகை வம்சவாளியின் [illegible] இவ்வுலகில் எங்கேயும் புதிய வாழ்வு கிடைக்கும். நாம் எங்கே செல்வது?

மலைநாட்டுத் தமிழர்களை இந்தியாவிற்கு அனுப்பக் கூடாது. புனர் வாழ்வு பிரச்சாரம் பொய், என்று கூறி உண்மையான விஷயங்களை, 'சுதந்திரன்' மூலம் அறிகிறோம். அதை நம்புங்கள். குடியுரிமைக்கும் — மொழியுரிமைக்கும்போராடும் கட்சி தமிழரசு கட்சி.

அண்மையில் நமது சங்கத் தலைவர் ஒரு கூட்டத்தில் கொக்சைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எப்படி பேசினார் தெரியுமா? மலை நாட்டார்களே! போவோம் அந்தமான் தீவுக்கு! அந்தமானை ஒரு தமிழ் நாடாக்குவோம். என்றார். பாவம் இந்த தலைவர்! இரண்டு கோடி கூட இல்லாத இலங்கையில் மொழியுரிமையைப் பற்றி பேசியதே கிடை[illegible] ஐம்பது கோடி மக்கள் வாழும் பாரதத்தில் எப்படி மொழியுரிமை[illegible]டுவார்?

நாம் ஒவ்வொரு மாதமும் கொடுக்கும் சந்தாப் பணம் என்ன செய்கிறது? வீடாக மாறுகிறது! பங்களாக்களாக மாறுகிறது. தலைவர்கள் வெளிநாட்டிற்கு சென்று வர உதவியளிக்கின்றது. இந்த ஊழல்களை யெல்லாம் அறிந்து, சிலர் தங்களின் சந்தாப் பணத்தை கொடுக்க முன் வராததினால் இப்பொழுது தோட்ட செக்ரோலில், சம்பளத்தில் வெட்டி எடுத்துக் கொள்கிறார்கள். ஏதாவது பிரச்சினை கொண்டு போனால் மத்தியக் கமிட்டியில் நிதி இல்லை. நாங்கள் என்ன செய்வது என்று கையை விரிக்கிறார்கள்.

இந்த தலைவர்களை நம்பி இந்தியாவிற்கு சென்றால், நமக்கு கிடைக்கும் தொழில், பிச்சை எடுக்கும் தொழில் அவர்களுக்கு கிடைப்பது தலைமைப்பீடம். சில நேரங்களில், நாம் இங்கே கொடுக்காத சந்தாப்பணத்தைக் கூட இந்தியாவில் கேட்பார்கள். இறுதியில் பர்மா தமிழர்களுக்கு என்ன கதி கிடைத்ததோ, அதே கதி இங்கிருந்து செல்லும் தமிழர்களுக்கு.

ஆகவே, இறுதியாக கூறுவது. விரும்பியவர்கள் போகட்டும் நாம் இங்கேயே குடியுரிமைக்கும்—மொழியுரிமைக்கும் போராடி இறப்போம்.

நமது தமிழ்தந்தை செல்வா எவ்வழியோ அவ்வழி தான் நம் வழி.

நாளை நமக்கே!

இப்படிக்கு
காதலி
கறுப்பாயி.

---

## ஒலிபரப்புவதற்கு சிறுகதைகள்

பிரிட்டிஷ் ஒலிப்பரப்புக்கூட்டுத்தாபனம் (பீ.பீ.ஸி) தனது உலகசேவையில் ஒலிபரப்பவென சிறு கதைகள் எழுதி அனுப்புமாறு வெளிநாட்டுக் கதாசிரியர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது.

உலகின் பல பாகங்களிலிருந்து பெறப்படும் சிறுகதைகள் அடுத்த வருடம் ஜனவரி முதல் ஒலிபரப்பாகும். இக் கதைகள் யாவும் 1968, பெப்ரவரி 1ம்திகதிக்கு முன் அனுப்பப்பட வேண்டும். இவை 1,800 சொற்கள் கொண்டதாகவும், ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஆசிரியரின் சொந்தக் கற்பனையாகவும் இருத்தல் அவசியம். தேர்ந்தெடுத்த கதைகளுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த மண்

எமது சிறுகதை

## வீ. சீத்தாராமன்

"மூர்த்தி, இந்த முறை இறுதித் தேர்வில் முதன்மையாகத் தேறியிருக்கும் உனக்கு அரசாங்கம் சலுகை வழங்கியிருக்கு! மேற்படிப்புக்காக நீ வெளி நாட்டுக்குச் செல்ல வேண்டியதுதான்!" என்ற அதிபரின் வார்த்தைகளைக் கேட்டு என் சக மாணவர்கள் அனைவரும் ஏகமனத்துடன் சந்தோஷித்து, கை கொட்டி ஆரவாரித்தார்கள்! ஆனால், அதிபரின் செய்தியோ என்னைக் கலக்கமுறச் செய்தது! உயிருக்குயிரான என் அன்னையாரையும், என்னருமைத் தந்தையாரையும் விட்டுப் பிரிந்து, அயல் நாட்டுக்குப் போக வேண்டுமே—என் பழைய நினைவு கூர்ந்ததும் என் சிந்தை கலங்கியது. அதிபரின் கனிவுப்பு நிறைந்த வார்த்தைகளையும், வகுப்பாசிரியரின் வற்புறுத்தலையும் நினைத்து நினைத்து நெஞ்சு குமுறித் தவித்தேன். என்னையறியாத அச்சமும்பேரதிர்ச்சியும் தலையெடுக்க, என்னுள்ளத்தில் அளப்பறியா போராட்டமும், விழிகளில் சொல்லி மாளாத நீரோட்டமும் பெருக்கெடுத்தன! பற்பல வாறு எண்ணி ஏங்கியவனாய் இல்லம் ஏகினேன்!...

என் கலக்கத்தையும் கருக்கத்தையும் காணச் சகிக்காத என் அன்னையவளின் வதனம் விசனத்தால் சாம்பியது!...... "மகனே மூர்த்தி ஏன் விசனமாயிருக்கே?... சோதனையில பெயிலாகிட்டியா?" என்று வினவி விடுத்துக்கொண்டே என் கரங்களை ஆதரவுடன் பற்றினாள். விம்மலும் விசும்பலுமாக விஷயத்தை விளக்கினேன்!...

...இதுக்குத்தானா கவலைப் படணும்? இங்கிருந்து படிச்சது போதாதா? இன்னும் கப்பல் ஏறி கடல் தாண்டி ஊருக்கு வேறே போகணுமாக்கும்?...வாத்தியாருக்கென்ன தெரியும்? ஊருக்கு ஊரு சனைடயும் சச்சரவுமா இருக்கே, அது தெரியுதா உங்க வாத்தியாருக்கு? காலங் கெட்டு கிடைக்க இந்தியாவுக்கும் போகணும், சனுவுக்கும் போகணும்!... என்னமோ, ஆண்டவன் புண்ணியத்தால இந்தப் பொறந்த மண்ணுலேயே உனக்கொரு உத்தியோகம் கிடைச்சா போதும். பிள்ளை நீ யா வரிசை வளர்க்கலாம்!" என்றவாறே என் அம்மா நெடு மூச்செறிந்திருக்கும், என் அப்பா வீட்டு வாசலுள் அடியெடுத்து வைப்பதற்கும் சொல்லி வைத்தாற்போலிருந்தது! அப்பாவைக் கண்டதும் என் மருட்சி இரட்டிப்பாகியதே அல்லாமல் என்னைக் குறைந்தபாடில்லை!...

'டேய் மூர்த்தி, உனக்கு நல்லதொரு சான்ஸ்தான் அடிச்சிருக்கு!...வெளி நாட்டுக்குப் போய் படிச்சுப் பட்டம் பெற நீ கொடுத்து வைச்சவன் தாண்டா!... உன்னோட பெரிய வாத்தியாரை டவுனில கண்டேன்; எல்லாம் விளக்கிச் சொன்னரு!" என்று மகிழ்ச்சி மீக்கூறச் செப்பிய என் அப்பாவின் முகத்தோற்றத்தில் வெற்றிப் புன்னகையொன்றும் விரிந்தது!

'நீங்க பேசுறது பேச்சா! சின்னஞ் சிறிசுல இருந்தே நம்ம நெழலிலேயே வளர்ந்தவனாச்சே? நம்ம ரெண்டு பேரையும் விட்டுப் பிரிஞ்சு அவனால இருக்க முடியுமா?...என் புள்ளைக்கு மேல் படிப்பும் வேணும், விடுங்க கெடக்குது!...ஏட்டுப் படிப்பே இன்னதினு தெரியாதவங்களெல்லாம ருட்டோடும் கோட்டோடும் சீமானுங்க மாதிரி காலந் தள்ளலியா?... நம்ம புள்ளையாவது ஒன்பதாவது பாஸ் பண்ணிட்டானே?... போதாதா?...' என்று நீட்டி முழக்கிய என் அம்மாவின் சாயலில் வேதனை விசுவரூபமெடுத்தது!...

என் வெளியூர் பயணத்துக்கான ஏற்பாடுகளைத்தும் வெகு துரிதமாய் நடந்தேறின. என்னை ரயிலில் ஏற்றிவைக்கும் வரை என் அப்பா எள்ளளவும் நிம்மதியாய் இருந்தாரில்லை. நான் பயணம் வைக்கவேண்டிய அந்தத் தினமும் அணைத்தது! எவ்வளவோ உறுதியும் தெளிவும் நிறைந்தவராய் — உவக்க மிது வார்த்தைகள் செப்பிய என் அப்பாவுங் கூட அன்று இரயிலயிடில் கண்கள் கலங்கினாரென்றால் என் அம்மாவின் அழுகையையும் அவலத்தையும் என்னென்று இயம்புவது? வெதும்பி வெதும்பி விம்மிய வண்ணம் — 'ஓ' வென்ற என் பெற்றவளின் அலறலுடன் இரயில் வண்டியும் தொடர்ந்து ஊதியது!......

பத்து ஆண்டுகளுக்குப் பின்...

பேசித் துக்கித்தார்கள்...... அதோ! "ஏயர் சிலோன் விமானம் புறப்பட இன்னும் பத்து நிமிடங்களே இருக்கின்றன!" என்ற விமான நிலைய அதிகாரியின் பணிமொழிகள் என்னுள்ளத்தை ஒரு உலுக்கு உலுக்கின. தொடர்ந்து சந்திரனும் ஆசிர்த்தனும், ரகுபதியும் ஒருமுகமாக என்னை இறுகப் பற்றித் தழுவி, கை குலுக்கிக் கண்ணீர் மல்கினார்கள்!......

பெற்ற பாசத்தின் உந்தலால் உள்ளம் நெகிழ்ந்து உணர்ச்சி எழுச்சியால் கண்ணீர் விட்டுக் கதறி வழியனுப்பி வைத்த அன்புத் தெய்வம் - என் அன்னையவளின் இன்முகத்தைப்பார்த்து இறும்பூதெய்தப்போவதை உய்த்துணர்ந்த பொழுது! என் இதயத்தில் ஆவல் அலைமோதியது!......

[illegible] வார்த்தைகளை எடுத்தியம்பி, என்னுள்

'மூர்த்தி, உன் அம்மா, அப்பா, மங்கம்மா எல்லோரையும் அழைச்சிக்கிட்டு இங்கேயே வந்து சேர்ந்திடு!" என்ற சந்திரனின் குரலுக்கு தலையசைத்துக் கொண்டே விமானம் ஏறி[illegible]ளத்தில் உயர்ந்த நோக்கத்தையும், சிறந்த இலட்சியத்திற்குரிய நம்பிக்கையையும் பெருக்குறச் செய்த எந்தையைக் காணலாம், கண்டு களிப்புறலாம்-என்றெண்ணி என் மனம் அளவறியா வியப்புலகில் ஆழ்ந்தது!

பன்னிரண்டு வயதைத் தாண்டிக் கொண்டிருந்த பாவையவள் - என் அத்தையின் ஒரே மகளான மங்கம்மாவை நினைவு கூர்ந்ததும் என் அங்கம் முழுவதும் ஆனந்தபரவசத்தால் மலர்ந்தது. அன்றைய தினம் நான் பிரயாணத்துக்கு ஆயத்தமான பொழுது "அத்தான் ஊருல இருந்து திரும்பும் பொழுது சீக்கிரம் வெள்ளைக்காரியோட திரும்பிடாதீங்க... எத்தனை வருஷமானாலும் உங்க அத்தை மகள் காத்திருப்பேன்!" என்று குறும்பும் குமிழ்சிரிப்பும் அரும்ப

(14-ம் பக்கம் பார்க்க)

......... பெற்றதாயையும் பிறந்த பொன்னாட்டையும் காணப் பறந்தோடி வந்த நான் பேசா மௌனியாய் பித்துப் பிடித்தவன் போலானேன். என்னுள்ளம் சுக்கு நூறாய் வெடித்துச் சிதறுண்டாற்போல் துன்ப அலைகளுள் சிக்கித்தவித்த என உடம்பு நரம்புகளனைத்தும் தளர்ந்து சோர்ந்தன...!

'இந்தா பாரு லெச்சுமி, வீணா என் வாயைக் கிண்டிட்டு ரெண்டு வாங்கிக் கட்டிக்காம உன் வேலையைப் பாரு. நல்லதுக்கும் கெட்டதுக்கும் குறுக்கே பேசி, தட்டிக் கழிக்கிறதே உன் வழக்கமாப் போச்சு!... உன்மகன் படிச்சு, பட்டம் கிடைச்சு, டாக்டரா வந்துட்டா வேணாங்குதா? சேச்சே! நானும் உனக்கு எவ்வளவோ படிக்கப் படிக்கச் சொல்லியாச்சு!... இன்னும் நீ சுத்தக் காநாடகமாதான் இருக்கே!...லெச்சுமி, நீ என்ன வேணுமானாலும் சொல்லு;... ஆமா. இந்த ஒரு விஷயத்தில மாத்திரம் முன் வைச்ச காலை பின் வைக்கப் போவதில்லை நான்!... நிச்சயமா மூர்த்தியைவெளி நாட்டுக்கு அனுப்பத்தான போறேன்!' என்ற அப்பாவின் குரலில் உறுதியும் தெளிவும் தொனித்தன.

பெற்ற மனம் என்ன பாடுபட்டதோ?... [illegible] பயமும் நிறைந்தவளாய் வருந்தத் தொடர்ந்தது [illegible] என் அப்பா மேலும் தொடர்ந்தார்: 'லெச்சுமி ...நீ ஏன் வீணா வசனப்படுறே?... உன் மகன் என்ன சீமைக்காப் போறான்? நம்ம நாட்டுக்குத்தானே போவப் போறான்! ஒரு அஞ்சாறு வருஷத்துக்கு உன்னால பொறுத்திருக்க முடியாதா?... அவனுக்குப் போறவனுக்குத் தெரிந்ததும் தெய்வம் சொல்லி வழியனுப்பி வைச்சிருந்ததை விட்டுட்டு, நீ ஏன் அசட்டுத்தனமா அழுது மடியுறியோ? எனக்கொண்ணுமே விளங்கலியே?' என்று சாலக் கொண்டே அப்பா, அம்மாவை ஏக்கத்துடன் நோக்கினார்.

பெற்ற பாசத்தின் உந்துதலால் அழுது வழிந்த அன்னை, இயலாமையால் வாய் பேசாமல் அடங்கிப் போனாள். இந்த வருஷத்து மத்தியில் செயல் தறியாது [illegible]

கல்வி என்னும் ஒளி மிகுந்த கண்ணைத் திறந்து, அறிவு என்ற விழுமிய கருவியை வளரச் செய்து, டாக்டர் பட்டத்தையும் அருளிய சென்னை சர்வகலாசாலையை நன்றிப் பெருக்குடன் உற்று நோக்கிய என் விழிகளில் கண்ணீர்த் துளிகள் துளிர்த்தன! கடந்த பத்தாண்டுகளில் என் சிந்தனையில் முதிர்ந்த அறிவையும், சிறந்த கல்வி ஞானத்தையும் புகட்டி, என் இளமனத்தில் அரும் பெரும் சிறப்பியல்புகளையும் கருத்து நீர்மைகளையும் நிலைபெறச் செய்த அந்த உயர்ந்த கட்டிடத்தை அண்ணாந்து பார்த்தவாறே கரங்களிரண்டையும் குவித்தேன்!

......

நண்பர் குழாத்துடன் நான் ஏறிய டாக்ஸி, சென்னை விமான நிலையத்தை நோக்கி விரைந்தது......"

மூர்த்தி, கடந்த பத்து வருஷமா எவனோடு உயிருக்குயிராய்ப் பழகி, என்னுள்ளத்தில் தப்பு என்ற உயரிய பண்பை நிலைபெறச் செய்த உன்னை என்னால் மறக்கவே இயலாது!... இனியும் மறுபடி நேரத்தில உன் [illegible] [illegible] நீ!... அடுத்து சென்றதும் என் [illegible] வந்தோ.... என்னவோ, சந்தோசந்தான்!" என்று சொல்லிக்கொண்டே கண்ணீர் சொரிந்து, கரைந்து நின்ற சந்திரனின் ஒவ்வொரு சொல்லும் என்னுள்ளத்தைத் துளைத்தது!...

"ஐயா... சந்திரனே!... நீங்க சொல்லுறதையா மூர்த்தி கேட்கப்போறான்? மூர்த்தியோட மனங்கவர் மங்கை — மங்கம்மாவை இலங்கையில விட்டுட்டு, அவனால இங்கிருக்க முடியுமா?" என்றான் ரகுபதி, சற்றே குத்தலும் கிண்டலுமாக!

டாக்ஸி விமான நிலை[illegible]

னேன். கண்களின் பார்வைக்கு மறையும் வரை நண்பர்கள் யாவரும் கையசைத்து நின்றார்கள். வானளாவப் பறந்த விமானம் போல, என மனமும் கற்பனைச் சிறகடித்து அற்புதமாய்ப் பறக்க ஆரம்பித்தது! அடுத்தடுத்து எழுந்த எண்ணக் கோர்வைகளால் என் இதயம் எல்லையற்று இன்புற்றது! அன்று...... பத்தாண்டுக்கு முன் - நான் பயணம் வைத்த தருணத்தில் -

# பெண்களே இப்படித்தான்.........!?

'பெண் புத்தி பின் புத்தி' என்ற ஒரு பழமொழி உண்டல்லவா? எல்லா தேசப் பெண்களுக்கும் இது பொருந்தும் என்பதை நிரூபிக்கும் நிகழ்ச்சிதான் இது—

நியூயார்க் நகரப் போலீஸ் நிலையத்துக்கு ஒரு நாள் டெலிபோனிலேயே அவசரமாகப் புகார் செய்தாள் ஒரு பெண்மணி. புகாரில் அவள் கூறிய விஷயம் இதுதான்: 'நான்காவது அவென்யு ரோட்டிலிருந்து நான் பேசுகிறேன். எனது 'செவர்லெட்' காரை இங்குள்ள ஹோட்டல் ஒன்றுக்கு எதிரே நிறுத்திவிட்டு, உள்ளே சென்று உணவருந்திவிட்டு, வெளியே வந்து பார்த்தால் என் காரிலிருந்த 'ஸ்டியரிங்' கியர் பாக்ஸ்' 'டேஷ் போர்டு' ஆகியவைகளைக் காணோம். எனவே தயவு செய்து அவைகளைக் கண்டுபிடித்துத் தர முடியுமா?' என்ற அவளது புகாரைக் கேட்டதும் ஸ்டேஷனிலிருந்த இன்ஸ்பெக்டர் அசந்து போய் விட்டார்.

ஏனென்றால் கார்த்திருடர்களைத்தான் அவர் பார்த்திருக்கிறாரே தவிர காரிலிருந்து 'ஸ்டியரிங்' வைத்திருடும் திருடர்களைப்பற்றி அவர் கேள்விப்பட்டது கூட இல்லை. இருந்தபோதிலும் 'இதோ இரண்டு மூன்று நிமிடங்களில் போலீஸாரை அங்கு அனுப்பி வைக்கிறேன்' என்று போனில் பதில் கூறிவிட்டு அந்தப் பெண்மணியின் புகாரைப் பதிவு செய்ய ஆரம்பித்தார்.

ஒரு நிமிடம் கூட ஆகியிருக்காது மீண்டும் அந்த பெண்மணி அவருக்கு போன் செய்தாள். 'ஸாரி, தவறு நடந்து விட்டது. எனது காரில் எல்லா சாமான்களும் அப்படியே இருக்கின்றன. ஒன்றும் திருட்டுப் போகவில்லை. நான்தான் தவறுதலாக காரின் பின் ஸீட்டில் ஏறி அமர்ந்து ஸ்டியரிங்கைத் தேடிவிட்டேன். சிரமத்துக்கு மன்னித்துக் கொள்ளுங்கள்...' என்று அவள் கூறியதைக் கேட்ட போது இன்ஸ்பெக்டருக்கு அழுவதா சிரிப்பதா என்று விளங்கவில்லை!

பார்த்தீர்களா, 'பெண் புத்தி பின் புத்தி' என்பது எவ்வளவு சரியாக இருக்கிறது என்பதை!

— [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1967 டிசம்பர் மாதம் 9-ந் தேதி

194, ஏ. பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.
தொலை பேசி எண்:—3411 த. பெ. 1183.

# மீண்டும் பழைய ஏற்பாடுதான்

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய கல்வி மசோதா மீது அரசாங்கப் பாராளுமன்றக் குழு இவ்வாரம் நீண்ட விவாதம் நடத்தியுள்ளது.

சிங்களம் சிங்களப் பிள்ளைகளின் போதனா மொழியாகவும் தமிழ் தமிழ் பிள்ளைகளின் போதனா மொழியாகவும் இருக்க வேண்டுமென்பதைப் பாராளுமன்றக் குழு அங்கீகரித்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

புதிய கல்வி மசோதாவின் 13-வது சரத்து தோட்டப் பாடசாலைகளைத் தோட்ட முதலாளிகளின் கையில் மறுபடியும் கொடுத்துள்ளது.

தோட்ட முதலாளிகள் எப்பொழுதும் இலாபம் திரட்டுவதிலே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள். அவர்கள் அதனைக் கடமையாகக் கொண்டவர்கள். அவர்கள் தோட்டச் சிறார்களின் படிப்பில் கவனம் செலுத்துவார்களென்றோ, தீவிர அக்கறை காட்டுவார்களென்றோ கூற முடியாது. இதுவரை அவர்கள் அப்படிச் செய்யவுமில்லை. இனிமேல் செய்வார்களென்பதற்கும் உத்தரவாதம் எதுவுமில்லை.

உழைத்துக் கொடுக்கும் தோட்டத் தொழிலாளியின் உடல் நலத்தைப் பேண வேண்டுமென்பதிலேயே அக்கறை கொள்ளாத தோட்ட முதலாளிமார், அந்தத் தொழிலாளியின் பிள்ளைகளுக்குக் கல்வி அறிவூட்டுவதில் தீவிரமாக ஈடுபடுவார்கள் என்று எண்ண இடமில்லை.

அந்த முதலாளிகளின் ''கடமை'' பற்றிக் கூறுகிறது மசோதா. அந்தக் கடமை நிறைவேற்றாத தோட்ட முதலாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனையைப் பற்றியும் மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே அந்தக் ''கடமை''யை இதுவரை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றினார்களோ? அவ்வாறே இனிமேலும் நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். அதாவது: கல்வி என்ற பெயரில் கண்துடைப்பு செய்வார்கள். இக்கண்துடைப்பை நீடிப்பது மசோதாவின் நோக்கமா?

தோட்டப் பாடசாலைகளில் 7-ம் வகுப்பு வரை கல்வி போதிக்கக்கூடியதாகவும் 4-வது வகுப்புத் தொட்டு ஆங்கிலம் கற்பிக்கக் கூடியதாகவும் மசோதாவில் திருத்தங்கள் செய்ய உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இப்பொழுது 5-வது வரைதான் வகுப்புகள் இப்பாடசாலைகளில் உண்டு. பாடசாலைகள் தோட்ட முதலாளிகள் கையில் இருக்கும்வரை புதிய ஏற்பாடுகளால் எதுவித பயனும் கிடைக்க முடியாது.

இப்பொழுது 5-ம் வகுப்பு வரை செய்யப்படும் கண்கட்டு வித்தை இனி 7-ம் வகுப்பு வரை செய்யப்படும். இதனால் எத்தகைய மாறுதலும் ஏற்படப்போவதில்லை.

தோட்டப் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கும் தனது பொறுப்பை அரசாங்கம் தட்டிக்கழித்துவிட்டது என்று நாம் குற்றஞ் சாட்டுகின்றோம். அந்தப் பொறுப்பை முதலாளிகள் மீது சுமத்தியிருப்பதிலிருந்தே இவ்விடயத்தில் தேசிய அரசுக்குள்ள அக்கறை தெளிவாகிறதல்லவா?

இதிலிருந்து அரசின் இரு நோக்கங்கள் தெளிவாகின்றன. ஒன்று தோட்டப் பிள்ளைகளுக்கும் நாட்டிலுள்ள ஏனைய பிள்ளைகளுக்குமிடையே கல்வித்துறையில் பாரபட்சம் காட்டுவது. மற்றொன்று இதுவரை தோட்டப்பிள்ளைகளின் கல்விக்குப் பொறுப்பாக இருந்து அவர்கள் கல்வியில் மேம்பட இடமளிக்காது தடுத்து வைத்திருந்த தோட்ட முதலாளிகளிடம் மீண்டும் அதே பொறுப்பை ஒப்படைத்தது; இது ஒரு வெட்கக்கேடான கண்துடைப்புத் தந்திரம்.

ஒரு நாட்டின் பிள்ளைகளுக்கு கல்வி அறிவூட்டுவதில் பாரபட்சம் காட்டுவதும் உயர்வு தாழ்வு கடைப்பிடிப்பதும் சர்வதேச நீதிக்குப் புறம்பானது. ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு மாறானது — இன பேதத்துக்குத் தூபமிடுவது — தேசிய ஒற்றுமைக்கு வேட்டு வைப்பது—''தேசிய அரசு'' என்ற நற்பெயருக்கு இது ஓர் இழுக்கு.

தோட்டத்துள்ளிருக்கும் பிள்ளைகளுக்கு ஒருவித கல்வியும் தோட்டத்துக்கு வெளியே இருக்கும் பிள்ளைகளுக்கு வேறுவித கல்வியும் வழங்குதல் மன்னிக்க முடியாத மாபாதகமாகும்.

தோட்டப் பிள்ளைகள் விரும்பினால் தோட்டத்துக்கு வெளியேயுள்ள அரசாங்கப் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி பயிலுவதற்கான எதுவித வசதியும் மசோதாவில் செய்யப்படவில்லையே! அந்த வசதிகளை அவர்களுக்கு வழங்காத காரணமென்ன?

பாடசாலை என்ற பெயரால் இயங்கும் தோட்டப் பாடசாலையில் அவர்கள் படிப்பற்ற படிப்பைப் படித்து, அத்துடன் தங்களின் படிப்புக்கே முழுக்குப் போட்டுவிட்டு, தொழிலாளராக மாறிவிட வேண்டுமென்று தேசிய அரசாங்கமும் கருதுகிறதா?

இது நன்றி கொன்ற செயலாகும்; நாட்டின் உயிர்நாடியான தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளுக்குச் செய்யும் இக் கொடுமையை நாகரீக உலகமும், விழிப்படைந்த தொழிலாளர் சமுதாயமும் அனுமதிக்காதென்பது திண்ணம்.

தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் நாங்கள்தான் என்று மார்தட்டி பட்டம் பதவிகளைப் பெற்றுள்ள தொழிற்சங்கத் தலைவர்களென்போர் தோட்டச் சிறுர்களின் கல்விபற்றி சிந்திக்கவே நேரமில்லாதிருக்கின்றனர். உலகைச் சுற்றிச் சுற்றிப் பறந்து உல்லாசமாகப் பொழுதுபோக்குவதற்கே அவர்களுக்கு நேரம் போதாமலிருக்கும்போது, இதிலெல்லாம் அக்கறை செலுத்த எப்படி முடியும்?

தாங்கள் என்றென்றும் தலைவர்களாக பவனி வரவேண்டுமானால் தொழிலாளி கல்வியில் முதிர்ச்சிபெருதிருத்தல் வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

அவன் கண் திறந்து விட்டால் தலைவர்களைத் தட்டிக் கேட்கத் தொடங்குவான், பின்னர் 'தலைவர்' பட்டத்தை இழந்து ஜினிவாவுக்குத் தப்பி ஓடவேண்டிய நிலை உருவாகிவிடும். ஆகவே கல்வித் துறையில் அவனை அடக்கி ஒடுக்கி வைத்திருக்க இந்தத் தலைவர்களுக்குத் தேவைப்படுகிறது. ஆனால் என்றாவது அவன் விழிப்புற்று 'ஆகா' என்றெழுந்துவிட்டால் இந்தத் 'தலைவர்களெல்லாம்' சடசடவென்று சரிந்து விழுவார்கள் என்பது திண்ணம்.

தோட்டச் சிறுர்கள் கல்வியில் மேம்பட வேண்டுமென்ற நல்லெண்ணம் தேசிய அரசுக்கு இருக்குமானால், ஏனைய பாடசாலைகளைப் பொறுப்பேற்றதைப் போல தோட்டப் பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தவேண்டும். அத்துடன் வெளிப் பாடசாலைகளில் படிக்கவும் தோட்டப் பிள்ளைகளை அனுமதிக்கவேண்டும்.

அதற்கான சரத்து மசோதாவில் சேர்க்கப்படவேண்டும். 13வது சரத்து முற்றாக நீக்கப்படவேண்டும்.

தோட்டப் பிள்ளைகளுக்குக் கல்வி வசதி வழங்க அரசாங்கம் முன்வரும்போது தீவிர சிங்கள வகுப்புவாதிகள் நாட்டிலே ஒரு கிளர்ச்சியைத் தூண்டுவர். அதனை எண்ணி, அஞ்சி அஞ்சி சாவதிலும் பார்க்க தேசிய அரசு தனது ஜனநாயகக் கடமைகளைத் துணிவுடன் நிறைவேற்ற முன்வருவது அறிவு ஆற்றல் மிக்க ஒரு வருங்கால சந்ததியை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருக்கும்.

மலைநாட்டுத் தமிழ் பிள்ளைகளின் கல்வியைத் தேசிய அரசும் [illegible] அனுமதிக்கவே முடியாது.

# 'இரண்டாந்தரப் பிரசைகளாக தமிழர் வாழ விரும்பவில்லை'

## பிரதமரை வரவேற்று திருச்செல்வம் பேச்சு

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்கள் சிங்களமக்களிடமிருந்து வேறுபட்டு பிரிந்துவாழ விரும்பவில்லை. ஒற்றுமையாகவாழவே விரும்புகிறோம். ஆனால் இந்த ஒற்றுமையை இரு இனங்களுக்கிடையேயும் சம உரிமை நிலவச் செய்வதன் மூலமே அடைய முடியும். இரண்டாம்தரப் பிரசைகளாக வாழ்வதற்கு தமிழ்பேசும் மக்கள் ஒருபோதும் ஒருப்படமாட்டார்கள்." இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நவீன சந்தைக்கான அத்திவாரக்கல் நாட்டு விழாவில் பேசிய உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் குறிப்பிட்டார்.

ரூபா 35 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் இச்சந்தைக்கான அடிக்கல்லை பிரதமர் திரைநீக்கம் செய்துவைத்தார்.

நவீன சந்தைக்கான அத்திவாரக்கல்லை திரைநீக்கம் செய்துவைப்பதற்காக பிரதமர் இம்மாதம் 5ந் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது, யாழ்ப்பாணம் அவருக்கு குதூகல வரவேற்பு அளித்து கௌரவித்தது.

பிரதமரது விஜயத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் அமைச்சர் திரு. திருச்செல்வமே கவனித்தார். பிரதமர் பலாலியிலிருந்து, காங்கேசன்துறை வீதிவழியாக ஊர்வலமாக யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டார். வழியெங்கும், தமிழரசு மூவர்ணக் கொடிகளால், அலங்கரிக்கப்பட்டு, பூரண கும்பம் வைத்து பிரதமருக்கு பிரமாண்டமான வரவேற்பளிக்கப்பட்டது. இவ்வரவேற்புகளை தமிழரசு எம். பிகளும், ஆதரவாளர்களும், முன்னின்று அளித்தனர்.

### பொதுமக்களுக்கு ஏற்பட்ட சந்தேகம்

ஊர்வலம் யாழ்ப்பாணத் தொகுதிக்குள் வந்ததுடன் திரு. பொன்னம்பலம் பிரதமரை வரவேற்றார். ஊர்வலத்தைப் பார்க்க தெரு வீதியில் திரண்டு நின்ற மக்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. வரவேற்பு யாருக்கு? திரு. பொன்னம்பலத்துக்கா, பிரதமருக்கா என்பதுதான் அச்சந்தேகம். ஏன் தெரியுமா? திரு. டட்லி ஒரேயொரு மாலையுடன்தான் ஊர்வலத்தில் வந்தார். ஏனைய மாலைகளை கழற்றி வைத்துவிட்டார். அமைசசர் திருவோ, கழுத்தில் ஒரு மாலைகூட இன்றி வெறும் கழுத்துடன் காணப்பட்டார்.

பிரதமர்கூட 'திரு'விடம்ஒரு மாலையெனினும் சூட்டிக் கொள்ளும்படி காதோடு காது வைத்தாற்போல கூறியபோதிலும், அதற்கு திரு. திருச்செல்வம் மறுத்துவிட்டார்.

ஆனால் திரு. பொன்னம்பலம் கழுத்திலோ முகத்தை மூடும் அளவுக்கு மாலைகள். அவற்றில் ஒன்றைக்கூட கழற்ற மனமில்லாமல் வந்தார். இதனால்தான் வரவேற்பு யாருக்கு என்ற சந்தேகம் பொதுமக்களுக்கு ஏற்பட்டது.

### நாகநாதனின் பெருந் தன்மை

பிரதமர் அத்திவாரக் கல்லைத் திரை நீக்கம் செய்த பின்னர் மற்றொரு பிரச்சினை தோன்றியது. பிரதமரை யார் முதலில் வரவேற்றுப் பேசுவது என்பதுதான் அது. அந்தப் பொறுப்பை டாக்டர் நாகநாதனிடம் ஒப்படைத்தபோது, அவர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார். 'நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதால் யாழ்ப்பாணத் தொகுதியின் பிரதிநிதி திரு. பொன்னம்பலமே முதலில் வரவேற்கட்டும்' என்று பெருந்தன்மையுடன் அழுத்தமாகக் கூறிவிட்டார்.

### திருவுக்கு ஜீ. ஜீ. பாராட்டு

ஆகவே திரு. பொன்னம்பலம் பிரதமரை வரவேற்றுப் பேசினார், அவர் தமது பேச்சில் யாழ். மாநகரத்தை நிர்வகிக்கும் விசேட கமிஷனர்களை வானளாவப் புகழ்ந்தார். 15 வருடங்களுக்கு முன் போட்ட நவீன மார்க்கட் அமைக்கும் திட்டம் விசேட கமிஷனர் ஆட்சியேற்பட்ட பின்னர்தான் நிறைவேறியது என்று பாராட்டினார். இதன்மூலம் அமைச்சர் திருச்செல்வத்தை மறைமுகமாகப் புகழ்ந்தார்.

டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பேசுகையில் கூறியதாவது:

பிரதமர் இங்கு வந்திருப்பது மார்க்கட்டுக்கு அத்திவாரக் கல் நாட்டுவதற்கு மட்டும் அல்ல. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே ஒற்றுமைக்கான அடிக்கல்லை நாட்டுவதற்குதான். இது எதிர்காலத்தில் சாத்தியமாக வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் தண்ணீர் கஷ்டம் இருக்கிறது. இங்கு வசிக்கும் மக்கள் கிளிநொச்சி, மன்னார், திருமலை போன்ற இடங்களுக்கும் சென்று குடியேற வேண்டும். யாழ்ப்பாணத்தில் சனநெருக்கடியைக் குறைத்தால் நீரைப் பெருமளவு பெற்றுக் கொள்ளலாம். இதற்காக மக்கள் மற்ற இடங்களுக்கு பரந்து சென்று வாழ்வது நல்லது. யாழ்ப்பாணத்தை ஒரு நவீன நகரமாக்க வேண்டும். இது தான் எனது அவா.

உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசா சிங்களத்திலும், தமிழிலும் பேசினார்.

யாழ்ப்பாணத்தில் நவீன சந்தை அமைப்பதற்கு திரு. திருச்செல்வம் எடுத்த சீரிய முயற்சியை அவர் பாராட்டினார்.

### திருச்செல்வம் பேச்சு

அமைச்சர் திருச்செல்வம் பேசுகையில், குறித்த நவீன சந்தை ரூபா 35 லட்சம் செலவில் அமைக்கப்படவிருக்கிறதென்றும், இதற்கான பணத்தில் ரூபா 25 இலட்சத்தை அரசாங்கம் கடனாகக் கொடுத்துதவும் என்றும் குறிப்பிட்டார். இதற்கான பணம் 1967 மே மாதத்திலேயே ஒதுக்கப்பட்டுவிட்டதென்பதையும் தெரிவித்தார்.

பாராட்டுகளுக்கு பதிலளித்துப் பிரதமர் பேசுகையில் யாழ்ப்பாண மக்கள் உணவுற்பத்தியில் காட்டிவரும் ஆர்வத்தைப் பாராட்டினார்.

மொத்தத்தில் பிரதமரின் யாழ்ப்பாண விஜயம் பூரண வெற்றியென்று கூறலாம்.

---

## அடுத்த இதழில்

- இலங்கைப் பிரஜாவுரிமை கிடைப்பதற்கு நிரூபிக்க வேண்டிய விஷயங்கள் எவை?
- யாழ் நவீன சந்தை உருவாகும் வரலாறு.
- தினபதியின் சகோதரப் பத்திரிகைக்கும் விஷம்.
- முல்லைத் தீவில் எழுந்த அபஸ்வரம்.
- அரசாங்க ஆணைக்குழுத் தலைவருக்கு இரத்தினம் ஆட்சேபம்!

மற்றும் சுவையான செய்திகளுடன் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ?

அமாவாசைக் கரும் இருள், வெளி உலகை முற்று கையிட்டிருந்தது. மாசி மாதத்துப் பனி, இருளோடு ஐக்கியமாகி அதன் கருமைக்கு மெருகேற்றி குமைந்து கொண்டிருந்தது. ஊரெல்லாம் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த வேளை......

யாழ்ப்பாணத்தின் தென்கிழக்குப் பகுதியான கொழும்புத் துறையில் கிறிஸ்தவ இடுகாடு இருக்கும் வீதியில் ஓர் உருவம் நடந்து கொண்டிருந்தது' பனிக் குளிரையும் பொருட்படுத்தாது. அர்த்த ஜாமத்தில் தோளிலே எதையோ மறைத்துக் கொண்டு போகும் அந்த உருவம் யார்? யார்? யார்?

— ● —

..."டேப் பெட்டியை மூடி முன் போல மண்ணால் மூடி விடு இங்கே கண்ட காட்சியை யாரிடமும் சொல்லாதே! சொன்னால் மண்டை வெடித்து விடும்!"

இனம் பேசியது!

அவனுடைய உடல் வெட வெடவென்று நடுங்கியது!!

?

விரைவில் சுதந்திரனில்!!

# அண்ணா, எம். ஜி. ஆரை நவரத்தினம் சந்திப்பார்

## திருச்சியில் பிரமாண்டமான வரவேற்பு

"தென்னகத்திலிருந்து பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஈழம் வந்து காடாய்க் கிடந்த இலங்கைத்தீவை பொன் கொழிக்கும் பூமியாக்கிய மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு கட்டாயமாக நாடு கடத்தவும், தனிவாக்காளர் இடாப்பில் வைக்கவும் திட்டமிட்டது திருமதி சிறிமாவோவின் அரசாங்கம் இந்த அநீதியை தன்மானமுள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சி கடுமையாக எதிர்த்து நின்றது.

தமிழரசுக்கட்சியின் எதிர்ப்பின் காரணமாக, தேசிய அரசாங்கத்தால் இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தில் கட்டாய நாடு கடத்தலுக்கும் தனிவாக்காளர் பட்டியலுக்கும் துளியும் இடமில்லை. எந்த ஒரு தோட்டத் தொழிலாளியையும் அவன் விரும்பாதவரை இந்தியாவுக்கு அனுப்பி விடமுடியாது. எனவேதான் இச்சட்டத்தை ஆதரித்தோம்.

ஆனால் எந்த நேரத்திலும் இந்திய வம்சாவளியினருக்கு இலங்கை அரசாங்கம் இம்சை கொடுக்க எண்ணுமானால், அதை எதிர்த்து இறுதிவரை போராட தமிழரசுக்கட்சி தயாராகவேயுள்ளது"

இவ்வாறு வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தின் இறுதிக்கட்டமாக தமிழகத்தில் சுற்றுலா மேற்கொண்டுள்ள சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம் திருச்சியில் தமக்களிக்கப்பட்ட ஒரு வரவேற்புக்கு பதிலர் பெரி பேசுகையில் குறிப்பிட்டார். இவ்விழாவில் திராவிட கழகத்தலைவர் பெரியார் ஈ. வே. ராவும் பேசினார்.

கூட்டத்திற்கு பின்னர் திரு. நவரத்தினத்துக்கும், அவரது பாரியாருக்கும், திராவிடக்கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி தமது இல்லத்தில் ஒரு தேநீர் விருந்தளித்து கௌரவித்தார்.

வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பும் வழியில் திரு. நவரத்தினம் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்துள்ளார்.

திரு. நவரத்தினத்திற்கு வரவேற்பளித்து திருச்சியில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விசேடபேச்சாளராக பெரியார் ஈ. வே. ராவும் கலந்து கொண்டு ஈழத்தில் தமிழினத்துக்கு திரு. நவரத்தினமும், தமிழரசுக்கட்சியும் ஆற்றிவரும் பணிகளை பாராட்டிப் பேசினார்.

வரவேற்புக்கு பதிலளித்து திரு. நவரத்தினம் மேலும் பேசியதாவது:-

இன்று தமிழகத்தின் ஆட்சி மொழியாகத் தமிழ் மொழி அந்தஸ்துப் பெற்றுவிட்டதிலிருந்து, அன்று மூவேந்தர்களாலும், போற்றி, ஏற்றி வளர்க்கப்பட்ட பொற்காலம் தமிழ் மொழிக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாக எனக்குத்தோன்றுகிறது.

இப்படியான மங்கலகரமான வேளையிலே, ஈழமணித் திருநாட்டிலும், அரசகரும மொழிகளில் ஒன்றாகத் தமிழ் மொழி உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது என்று நான் பெருமையுடன் கூறும் இதே சந்தர்ப்பத்தில், இப்படியாகத் தமிழ் மொழியின் உயர்ச்சிக்காக, அயராது, சலியாது உழைத்த பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சியை மட்டுமே சாரும் என்பதை கூறுவதில் பெருமையடைகிறேன்.

### அண்ணாவுடன் சந்திப்பு

திரு. நவரத்தினம் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவையும், தி. மு. க. அமைச்சர்களில் சிலரான நாவலர் இரா. நெடுஞ்செழியன், கலைஞர் மு. கருணாநிதி ஆகியோருடனும் முரசொலி மாறன், திரு. சீனிவாசன் பேராசிரியர் திரு. க. அன்பழகன் முதலியவர்களையும் சந்தித்து உரையாடுவார். சந்தர்ப்பம் கிடைத்தால் மக்கள் திலகம் திரு எம். ஜி. இராமச்சந்திரனையும் சந்தித்துப் பேசுவாரென்று தெரிகிறது.

### சிங்களர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேரில் கண்டு வியந்தனர்.

இது பற்றி பின்னர் நமது நிருபரிடம் குறிப்பிட்ட அரசாங்க பாராளுமன்றக் குழுவைச் சேர்ந்த ஒரு சிங்கள எம். பி, "திரு. பொன்னம்பலமும் அவரது இரு எம். பீக்களும் இதே போல தமிழ் அரசுக்கட்சியின் தமிழ்ப் பல்கலைக் கழகக் கோரிக்கையும் ஏற்று ஒரணி [illegible] கழகம் அமைக்கப்பட்டிருக்கும் என்று தெரிவித்தார்.


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

போலிகளை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,

கொழும்பு-14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருட்களுக்கு நாடெங்கினும் சமவிலை வேண்டும்

அரசாங்கம், அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் இறக்குமதி செய்து பொதுமக்களுக்கு விற்கும் மண்ணெண்ணெய் சீனி போன்றபொருட்கள் யாவற்றையும் இலங்கையின் எல்லாப்பகுதியிலும் ஒரே விலையில் விற்க வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்துள்ளார் கிளிநொச்சி எம். பி. கா. பொ. இரத்தினம்.

தற்போது சீனி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்கள் கொழும்பைவிட, ஏனைய பகுதிகளில் அதிகவிலைக்கு விற்கப்பட்டு வருவது தெரிந்ததே.

திரு. இரத்தினம் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்துள்ள பிரேரணைகள் வருமாறு:—

1. பொருட்கள் சிலவற்றை நாட்டின் எப்பகுதியிலும் ஒரே விலையில் விற்றல்,— அரசாங்கமோ அரசாங்கக் கூட்டகங்களோ ஆக்கியும் இறக்குமதி செய்தும்விற்கும் சீனி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்கள் யாவற்றையும் இலங்கையின் எப்பகுதியிலும் ஒரே விலையில் விற்பதற்கு அரசாங்கம் மூன்று தினங்களுள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### தொலைபேசி வசதி

2. எல்லாத் தபால் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதிகளும், தபால் கொடுக்கும் வசதிகளும் — தொலைபேசி வசதிகளும், விடுவிடாகத் தபால் கொடுக்கும் வசதிகளும் கொடுக்கப்படாத எல்லாத் தபால் நிலையங்களுக்கும் உப தபால் நிலையங்களுக்கும் இவ்வசதிகளைக் கொடுப்பதற்கு உடனே அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து சமவாய்ப்புக்கு வழிகோலிச் சமுதாய நீதி கால்கொள்ளச் செய்யும் வரை தபால் தொலைத் தொடர்புத்துறைகளில் வேறெவ்வகை ஆக்கத்துக்கும் இந்நாட்டுப் பணத்தைச் செலவுசெய்யக் கூடாது.

### கிராமிய மக்களின் போக்கு வரத்து

3. கிராமங்களுக்குச் செல்லும் வீதிகளைச் சீர்திருத்தலும் பேணுதலும், — இலங்கையிலுள்ள பின்தங்கிய கிராமங்கள், குடியேற்றத் திட்டங்கள் கடற்கரையை அடுத்துள்ள ஊர்கள் என்பவற்றில் வாழ்வதால் போதிய வீதி வசதியின்றிப் பல்லாண்டுகளாக அல்லற்படும் மக்களின் துயர்துடைப்பதற்கு இவ்விடங்கள் யாவற்றுக்கும் செல்லும் வீதிகளை ஆண்டு முழுவதும் எவ்வித தடையுமின்றி வசு, கார் முதலியன ஓடத்தக்கதாக மூன்று ஆண்டுகளுக்குள் செப்பனிட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### ஆங்கில உதவி ஆசிரியர்

முன்னேற்றம் அடையாத பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு ஆங்கில ஆசிரியர்களும் ஆசிரியைகளும். — இலங்கையில் முன்னேற்றம் அடையாத பகுதிகளிலுள்ள பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் மாணவர்களின் தொகையைக் கருதாமல், ஓர் ஆங்கில உதவி ஆசிரியரும் ஓர் ஆசிரியையும் உடனே நியமிக்கப்படல் வேண்டும்.

# வவுனியா எம். பி. முகத்தில் கரி

## இடமாற்ற சேவை எண் 6

முல்லைத்தீவு மாவித்தியாலய அதிபரின் சொற் கேட்டு அங்கு கடமை புரிந்த திரு. திருச்செல்வம் என்னும் ஆசிரியரை இடமாற்றம் செய்ய வவுனியா எம். பி. தனது செல்வாக்கைப் பாவித்தார். என்று கூறப்படுகிறது இதனால் முல்லைத்தீவுப் பொது மக்கள் கிளர்ந்தெழுந்து அதிபரையே அங்கிருந்து இடமாற்றுமாறு கல்விப்பகுதியைக் கோரினர். அதனால் குறித்த அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டார். இச்செயல் மூலம் வவுனியா எம். பியின் முகத்தில் கரி பூசினர் முல்லைத்தீவு மக்கள்.' இவ்வாறு வவுனியா எம். பியின் இடமாற்ற சேவை எண்- 6ஐ நமது நிருபரிடம் விபரித்த முல்லைத்தீவுப் பிரமுகர் குறிப்பிட்டார்.

அவர்மேலும் கூறியதாவது:

'திரு திருச்செல்வம் அவர்கள் முல்லைத்தீவு மகாவித்தியாலய ஆசிரியர். தனது சொந்த ஊர் பாடசாலை தரத்திலும் புகழிலும் மேம்பட வேண்டும் என விரும்பினர். தனது ஊரின் பிள்ளைகளும் கல்வியில் முன்னேற வேண்டும் என்று எண்ணினர்.

கணிதத்திலும் பூமிசாஸ்திரத்திலும் திறமைவாய்ந்தவரான இவரின் படிப்பித்தலில் பிள்ளைக

(14-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் பெண்களை பாதிக்காது

'இலங்கை அரசாங்கம் நாணய மதிப்பை எவ்வளவு குறைத்தாலும் தமிழ்ப்பெண்களை அது அதிகதூரம் பாதிக்கமாட்டாது.' இவ்வாறு சுதந்திரன் நிருபரிடம் அபிப்பிராயம் தெரிவித்தார் பொருளாதாரத் துறையில் பட்டம் பெற்ற தமிழ் பெண்மணி யொருவர்.

இலங்கை அரசாங்கத்தின் நாணய மதிப்புக்குறைப்பு தமிழ்ப்பெண்களை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை நமது நிருபர் மேற்கண்ட தமிழ்ப்பெண்மணியிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறிவிட்டு தொடர்ந்து கூறியதாவது:—

அன்றாட வாழ்க்கையில் விலையேற்றத்தால் ஏனையவர்களுக்கு ஏற்படும் அதே கஷ்டங்கள் தமிழ் மக்களுக்கும் ஏற்படும் என்பது உண்மையே. நான் இங்கு குறிப்பிட்டது அதுவல்ல.

சேமிப்பு பணத்தைப்பற்றியே குறிப்பிடுகிறேன்—தமிழர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்து மக்கள்— பணத்தை வங்கியிலோ, வேறு சேமிப்பு நிதிகளிலோ போட்டு வைப்பது அரிதாகும்.

அரசாங்கத்தின் முடிவுப்படி, நாணய மதிப்புக்குறைக்கப்பட்டு விட்டதால், வங்கியிலும் சேமிப்பு நிதிகளிலும் பணம் போட்டு வைத்தவர்களின் நிதியின் பெறுமதி இப்போது குறைந்துவிட்டது.

ஆனால் யாழ்ப்பாணத்து மக்கள், பெரும்பாலும் பணத்தை தங்கத்தில் முதலீடுசெய்பவர்கள்.

அதாவது தங்க நகைகள் வாங்குவதன் மூலம் பணத்தை சேமிப்பவர்கள். எனவே பணத்தை பணமாக வைத்திருப்பவர்களே நாணயமதிப்பு குறைப்பால் பாதிக்கப்படுவார்களே தவிர தங்கநகைகளாகவைத்திருப்பவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்.

தமிழ்ப்பெண்கள் பணத்தை நகைகளில் முடக்குவதின் பின்னாலுள்ள பொருளாதார தத்துவத்தை இன்றுதான் நாங்கு புரிந்துகொள்ளலாம்.

# முஸ்லிம்கள் வயிற்றிலடித்தபோது அகமது எங்கே போயிருந்தார்

'கிழக்கு மாகாணத்து முஸ்லிம் மக்கள் பெரும்பாலும் விவசாயிகள். குத்தகை நிலத்தில் விவசாயம் செய்பவர்கள். இந்தமக்களுக்கு குத்தகைநிலம் கிடைக்காதவாறுசெய்து அவர்களின் வயிற்றிலடிக்கக்கூடிய முறையில் நெற்காணிச் சட்டத்துக்கு திருத்தமொன்றை 1964ம் ஆண்டுசுதந்திரக்கட்சி அரசாங்க காலத்தில் திரு. கே. பி. ராஜரத்தினம் கொண்டுவந்தார். அந்த அநியாயத்தை தமிழரசுத் தலைவர் டாக்டர் நாகநாதன், ஜனப் மாக்கான் மாக்கார் போன்றவர்கள் கண்டித்துப்பேசியதுடன் எதிர்த்தும் வாக்களித்தனர்.

ஆனால், முஸ்லிம் மக்களுக்காக பாடுபடுவதாகக் கூறிக்கொண்டிருந்த அப்போதைய சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் செல்லப்பிள்ளையாக விளங்கிய ஜனப் அகமது இது நடந்தசமயம் பாராளுமன்றப்பக்கமே தலைகாட்டவில்லை, முஸ்லிம் விவசாயிகளின் வயிற்றலடிக்கும் சட்டத் திருத்தம் வந்தபோது ஜனப் அகமது எங்கே போயிருந்தார்?

இவ்வாறு கல்முனையைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர் நமது நிருபரிடம் ஆக்ரோஷத்துடன் கேட்டார்.

இச்சம்பவம்பற்றி அவர் மேலும் கூறியதாவது:-

'முஸ்லிம் மக்களின் வயிற்றிலடிக்கக்கூடிய முறையில் நெற்காணிச் சட்டத் திருத்தமொன்று 1964ம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இலங்கைப் பிரஜையென்று நிரூபிப்பவருக்கே காணி குத்தகைக்கு வழங்கப்பட வேண்டுமென்பதே திருத்தத்தின் சாரம். திருத்தத்தை கொண்டுவந்தவர் அப்போதைய வெலிமடை எம். பி. திரு. கே. எம் பி. ராஜரத்தினு.

'இத் திருத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கைமுஸ்லிம்களும், இலங்கை தமிழர்களும்தான். இலங்கைமுஸ்லிம் ஒருவருடைய தகப்பன், பேரன், பூட்டன் இவர்களின் பிறப்புச்சாட்சிப் பத்திரத்தை கேட்டால் அதற்கு எங்கே போவான் ஏழைமுஸ்லிம்?

இந்தச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து ஜனப் மாக்கான் மாக்கார் (அப்போதைய மட்டக்களப்பு 2வது எம். பி.) உரத்து குரல் எழுப்பினர்.

'இலங்கை முஸ்லிம்களும், தமிழர்களையும் இது மிகவும் பாதிக்கும். அவர்களால் செய்ய முடியாத ஒரு காரியத்தை செய்யும்படி கேட்கிறீர்கள். இது அநியாயம், அக்கிரமம். இந்தத் திருத்தம் நிறைவேறினுல், அதைச் சாட்டாக கொண்டு, முஸ்லிம் விவசாயிகளுக்கு குத்தகைக்கு நிலம் கொடுக்க நிலச் சுவாந்தார்கள் அஞ்சுவார்கள். இதனால் அவர்கள் வயிற்றில் அடிக்கிறீர்கள்' என்று வாதாடினர் ஜனப் மாக்கான் மாக்கார்.

தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் நாகநாதன் பல வாதங்களை எடுத்துக்காட்டி இத்திருத்தத்துக்கு எதிராக போர்க்குரல் எழுப்பினர். அப்போது டாக்டர் பின்வருமாறு சொன்னர்.

'இந்தத் திருத்தம் வருமானல், நிலச்சுவான்தார்கள், தங்கள் குத்தகை நிலங்களில் வேலைசெய்யும் முஸ்லிம், தமிழ் விவசாயிகளை இலங்கைப் பிரஜையென்று நிரூபிக்கும்படி வற்புறுத்துவார்கள் அப்படி நிரூபிக்கவில்லையேல், அவர்கள் இலங்கைப் பிரஜையல்லவென்று குற்றஞ்சுமத்துவதுடன், இன்னும் கொடுமைப்படுத்துவார்கள் சிலர் தாங்கள் ... வென்று நிரூபிக்க ... 99 வீதம் பேர் அப்படி நிரூபிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

ஆனால், ஒருவன், இலங்கைப் பிரஜையொருவரை 'நீ இலங்கைப் பிரஜையல்ல' வென்று கூறினுல், குறித்தநபர் தான் இலங்கைப் பிரஜை என்பதை நிரூபிக்கும்வரை அவர் இலங்கைப் பிரஜையாக கருதப்படமாட்டாரென்று கூறுவது அநியாயமானது.

இந்த மசோதா இலங்கை முஸ்லிம்களையும், தமிழரையும் அழித்தொழித்துவிடும்; இதனுல், குத்தகைக்கு ஆளையில்லையென்று கூறிவிட்டுநிலச்சுவான்தார்கள் முழு நிலத்தையும் சொந்தமாகப் பாவிக்கவும் வாய்ப்பு ஏற்படும்.'

இப்படிப் பேசிய டாக்டர் நாகநாதன், திரு கே. எம். பி. ராஜரத்தினுகூட அவரது

(14-ம் பக்கம் பார்க்க)

# ஒரு சதம்கூட வரி வழங்க மறுத்த கொடை வள்ளல்

## இரவல்சரக்குமீது உரிமைகொண்டாடுகிறார்

'தமிழ் பேசும் மக்களுக்கு தனியொரு தமிழ் பல்கலைக்கழகம் தேவை யென்பதை 1955ம் ஆண்டே உணர்ந்ததமிழ் அறிஞர்களும், பிரமுகர்களும், கல்விமான்களும் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் ஒன்றை கட்சிசார்பின்றி ஆரம்பித்தனர். இந்த இயக்கத்தினர், இயக்க நிதிக்கு உதவிகோரி தமிழ் பேசும் மக்களிடையேயுள்ள செல்வந்தர்களையும், வர்த்தகர்களையும், மற்றும் வசதி வாய்ப்பு படைத்தோரையும்நாடினர் தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தினருக்கு நிதி அளிப்பதில் தமிழ் பிரமுகர்கள் போட்டி போட்டு முன்வந்தனர். ஆனல் ஒரே யொருவர் — பெரும் பணக்காரர் என்று கூறப்படுபவர் — ஒரு சதம்தானும் நிதி உதவிதர மறுத்துவிட்டனர். அந்தப் புண்ணியவானாவது வேறு யாருமல்ல, திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தான்'

இவ்வாறு சுதந்திரன் நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் குறிப்பிட்டார்.

திரு. மு. திருச்செல்வம் மேலும் கூறியதாவது:—

'இன்று திரு. பொன்னம்பலம் இந்து பல்கலைக்கழகத்தைப் பற்றி பெரிதாக பேசுகிருர். அதுவும் அவரது சொந்தச்சரக்கல்ல: இரவல்சரக்கே.

இந்துப் பல்கலைக்கழகத்தைப் பற்றி முதன்முதல் பேசியவர் காலஞ்சென்ற திரு. சு. நடேசன். தமிழ் பல்கலைக்கழகத்

(14-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களே! கவனம் புற்று நோய் வரலாம்!

புற்று நோய்க்கு மங்கையர் மீதுமாருதகாதல். மங்கையரை அது பற்றிக்கொண்டால், மரணத்தைதழுவுவதைத் தவிர வேறுவழி இல்லை. கண்ணுடியை அடிக்கடி பாருங்கள் புற்று நோயின் சின்னம் தென்படுகிறதா என்று உன்னிப்பாக சோதனை செய்யுங்கள். தொடக்கக் கட்டத்தில் தக்க சிகிச்சை செய்து கொண்டால், மரணத்தின் பிடியிலிருந்து தப்பலாம்என்று விஞ்ஞானிகள் யோசனை கூறியிருக்கிறார்கள்.

கண்ணுடி முன்பு பெண்கள் மணிக்கணக்காக அலங்கரித்துக் கொள்கிறார்கள். 'அப்படியும் இப்படியும் தலையை திருப்பி திருப்பி அழகு பார்த்துக கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு அம்சத்தைப் பார்க்கத் தவறுவதால், மரணத்தின் பிடியில் சிக்க நேருகிறது.

ஒவ்வொரு ஐந்து பேர்களில் ஒருவர், புற்று நோய்க்கு பலியாகின்றனர். 50 வயதுக்கு மேற்பட்டவர்களில் மூவருக்கு ஒருவர் விதம், புற்றுநோய்க்கு இரையாகிறார். ஜெர்மன் புற்று நோய் கட்டுப்பாட்டு ஆராய்ச்சிக் கழகத்தினர் இந்த திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளனர். புற்று நோயை குணபபடுத்துவதற்கு பல புதுமையான முறைகள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும்,அதுஉலகில் மனிதனுக்கு மரணம் விளைவிக்கும் நோய்களில் இரண்டாவது இடம் பெறுகிறது.

பெண்களின் மீது புற்று நோய்க்கு ஒரே மையல். பெணகளில் மார்பகங்களில் புற்று நோய் கண்டிருப்பதை அறிந்து கொண்டால் சிகிச்சை அளிப்பது எளிது. எந்த வயதுப் பெண்களுக்கு புற்று நோய் பிடிக்கிறது என்பதை திட்டவட்டமாக வரையறுத்துக்கூற முடியாது.

40 முதல் 50 வயது வரம்பிலுள்ள பெண்களிடையேதான் அதிகம்காணப்படுகிறதுஆனால் இளம் மங்கையரையும் புற்று நோய் விட்டு விடுவதில்லை. கர்ப்பம் தரித்திருக்கும் காலத்திலும், சிசுவை வளர்க்கும் காலத்திலும், இளம் மங்கையரையும் இக்கொடிய நோய் தொற்றிக் கொள்கிறது.

புற்று நோய்வராமல் தடுக்க முன் ஏற்பாடுகள் ஏதேனும் உண்டா என்றால், இல்லை என்று ஜெர்மன் மார்பர்க் மருத்துவ பல்கலைக் கழக டைரக்டர் மாக்ஸ் ஸ்வாகர் கூறுகிறார்.

பெண்களின் மார்பகத்தில் ஏதேனும் வீக்கம் ஏற்பட்டிருந்தால், ஆரம்பத்திலேயே புற்று நோயின் அறிகுறி எனத் தெரிந்து கொள்ளலாம். மார்பகம் திடீரென்று கனமாகவும் திரள் திரளாகவும் இருப்பது போல தோன்றினாலும், கவனமாக இருக்க வேண்டும். சில சமயங்களில் இவ்வித மாறுதல்கள் எவ்வித வேதனையும் தராமலும் இருக்கலாம். எனினும் டாக்டரிடம் காட்டுவது நல்லது.

பெண்கள் மாதத்திற்கு ஒரு முறையாவது கண்ணுடியில் திறந்த மார்பகத்தை உன்னிப்பாகக் கவனித்து ஏதேனும் மாறுதல் தென்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். 25 வயதுக்குமேற்பட்ட பெண்கள், அவ்வப்போது டாக்டரை கலந்தாலோசித்து வர வேண்டும்.

பெண்களின் மார்பகத்தில் புற்றுநோய் கண்டால், குணப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மார்பகத்தின் மற்றப் பகுதிகளுக்குப் பரவினால் தான் ஆபத்து அதிகம். ஆரம்பத்திலேயே புற்று நோயைக் கண்டுபிடித்து விட்டாலும் குணப்படுத்துவது எளிது.

# தேனைத் தெரியுமா உங்களுக்கு?

தேனீக்கள் பூக்கள் தோறும் பறந்து திரிந்து மகரந்தங்களில் உள்ள தேனைச் சேகரித்துக் கூடுகட்டி அலற்றில் சேமித்து வைக்கின்றன. அப்படிச் சேகரித்து வைக்கப்பட்டுள்ள தேனும் அதன் கூடும் பற்பல வகையில் மக்களினத்திற்குப் பெரிதும் பயன்படுவது எப்படி என்பதனைச் சிறிதாராய்வோம்.

விஞ்ஞான ரீதியில் ஆய்ந்து பார்த்தால் இரும்பு, செம்பு, மங்கனீசு, குளோரின், கால்சியம், பொட்டாசியம் சோடியம், பாஸ்பரஸ், அலுமினியம் முதலியவைகள் தேனில் திரண்டிருப்பதனைக் காணலாம்.அவைகள பூமியில் புதைபுண்டு பின்பு மகரந்தங்களின் வழியாய் தேனென்னும் உருவெடுத்து தேனீக்களால் திரட்டப்படுகிறது.மற்ற காய்கறி தானிய வகைகளிலும், உலோக சத்துக்கள் இருப்பினும் அவை வேக வைப்பதாலும், பல மணி நேரம் வெய்யிலில் காய்வதாலும், சத்து குறைந்து விடுகிறது.தேன் அப்படிப்பட்டதில்லை.

## விட்டமின் "சி"

அதே போன்று கீரை வகைகள் இன்னிய இருபத்திநான்கு மணிநேரத்தில் தன துவைட்டமின் 'சி' சத்தில் சுமார் நூற்றில் ஐம்பது பாகம் இழந்து விடுகின்றன. பழவகைகளும் அப்படியே குறிப்பிடத் தகுந்த அளவு வைட்டமின்'சி'சத்தை இழக்கின்றன. ஆனால் தேன் அதில் அடங்கியுள்ள அதிகப் படியான சத்தான வைட்டமின் 'சி' யை எளிதில் இழப்பது கிடையாது.

மனிதனுக்குச் சில உலோகச்சத்துகள் அவசியம்.ஏனெனில் உலோகச் சத்துக் குறைந்து காணப்படும் மனிதன் தெம்பின்றி, தெளிவின்றி உடல் மெலிந்து காணப்படுவான். அக்குறையினைப்போக்க தேனைத் தினமும் உணவுக்குப் பின் இரண்டு தேக்கரண்டி அருந்தி வந்தால் உடல் வளமடைவது உறுதி. காரணம் தேனில் பெரும்பாலானஉலோகச் சத்துக்கள் உள்ளன.

## குறைவை நிறைவாக்கும்

நாம் பெரும்பாலும் கலப்புணவு என்னும் பெயரில் உண்டு வந்தாலும் எல்லா விதமான சத்துக்களும் அளவோடு கலந்து நிறைவு செய்வது கிடையாது. இப்பெருங்குறையினைப் போக்கத் தேனைக்குறிப்பிட்ட அளவு மிகக் குறைவாகக் கூறினல் ஒரு தேக்கரண்டியாவது அருந்திஞல் நல்லது. அது உணவில் ஏற்படும் குறையுள்ள சத்தை நிறை செய்து நலம் பயக்கும். இப்படி உண்ணும் போது உண்டாகும் குறைகளைப் போக்கும் அமுதமாம் தீஞ்சுவைத்தேன் மாநில மாந்தர்க்கு மாமருந்தாய் எம்படிப் பயன்படுகிறது என்பதனையும் சிறிது காண்போம்.

நாட்டு வைத்தியர்கள் பெரும்பாலும தாங்கள் அளிக்கும் மருந்தைத் தேனில் குழைத்துச்சாப்பிடும்படிதான் கூறுவார்கள். அதற்குக் காரணங்கள் ஒன்று: அவர்கள் அளிக்கும் கசக்கும் கடுமையான மருந்துக்களின் குமட்டலைப் போக்க. இரண்டு: அம் மருந்தினூடே உட்செல்லும் தேன் அம்மருந்தை சீரண உறுப்புக்களுக்கு விரைவில் கொண்டு சென்று செரிக்கச் செய்து நோயை சடுதியில் அகற்றப் பேருதவி புரிகின்றது என்பது இரண்டாவது காரணம்.

## இருமல் அகல

அதே போன்று உஷ்ணம் அதிகரித்து இருமல் [illegible] இருப்பின் தேனை அருந்த இருமல் நிற்கும். அப்படியும் இருமல் நின்ற பாடில்லையாயின் தேன் அடை(கூடு)யை அறுத்து நாள் ஒன்றுக்கு 15 நிமிடம் மென்று வந்தால் இருமல் இருக்கும் இடம் தெரியாது பறந்து போகும். தீஞ்சுவைத் தெள்ளமுதமாம் தேனில் பொட்டாசியம் நிறைந்திருப்பதனுல் அதனைப் பாக்டீரியா அணுக முடியாது.

## தூக்கம் வர

தேனை அருந்தும் மாந்தரிடம் பாக்டீரியா சிறுகச் சிறுகச் செத்துமடியும் என்பது உறுதி. உறக்கம் வராமல் திண்டாடும் பலர் தூக்க மாத்திரைகளை விழுங்கிப் பழகி நரம்புகளைப் பலவீனப் படுத்திக் கொள்வதைவிட அவர்கள் சாதாரணமாய் இரண்டுத் தேக்கரண்டிதேனை இரவில்,உண்டபின் குடித்து வந்தால் உறக்கம் தானே வரும். உடல் வனப்பும் வன்மையும் கெடாது.

## தீப்புண் ஆற

தீப்புண்ணுக்கு மேலே தேனைத் தடவி வந்தால் அது காற்றை விட வேகமாய் தீப்புண்ணை ஆற்றி சதைபற்றுக் கொள்ளச் செய்யும் என்பதோடு புண் எரிச்சலுமின்றி இதமாயும் இருக்கும். குழந்தைகளுக்கு வயதிற்கேற்ப அரை அல்லது ஒரு தேக்கரண்டி விதம் தேனைக் கொடுத்து வந்தால் குழந்தை மினுமினுப்பாயும், சுறுசுறுப்பாயும் விளங்குவதோடு,மலச் சிக்கல் நீங்கி தாராளமாய் வெளிக்கும் போகும். விரைவில் குழந்தையை நோய் அணுகாது.

பண்டு முதல் இன்று வரை அருமருந்தாய பயன்படுத்தப் பட்டு வரும் தேன் மூச்சுக் [illegible]

செய்து சுவாசத்தை எளிதாக்குகிறது. மூக்கல் மூச்சி விட முடியாது தவிப்பவர்கள் தேன் அடையை பத்து பதினைந்து நிமிடம் மென்றுவரின் நலன் பயக்கும். கூடு கிடைப்பது அரிதானுல் தேனைப்பருகினுல் அதுவே போதும்.

## உடல் வனப்பு பெற

இன்புளுயன்சா மற்றும் நாட்பட்ட விஷசுரம் கண்டவர்கள் தேன் கூட்டினை நன்ருய் மென்று வந்தால் அது விரைவில் அக்கொடிய சுரங்களைப் போக்கும். ஆனால் சுரம் நீங்கிய பின்னும் சில நாட்கள் நாம் அதனைத் தொடர்ந்து சாப்பிடுதல் வேண்டும்.

அப்போது தான் போன ஜுரம் திரும்பவேதிரும்பாது. தூக்கத்தில் குறட்டை விடுபவரும், அடிக்கடி தும்முகின்றவரும் தேன் கூட்டை மென்றுவரின் சரியாகும். அல்லது தொடர்ச்சியாய் சில நாட்கள் தேனைப் பருகுதல் வேண்டும். அது அவர்கள் மூக்கினைச் சுத்தம் செய்து சுவாசத்தை எளிமையாக்கி இனிமையாக்குகிறது.

# திரைவாணன் பதில்கள்

மூர்த்தி,
மட்டுநகர்.

கே: சிவாஜியின் படங்கள் எம். ஜி. ஆரின் படங்களின் வசூலை இதுவரை வெற்றி பெற்றது உண்டா?

ப: சிறந்த நடிப்புக்கும் வசூலுக்கும் சம்பந்தமில்லையே!

ஃ

பி. எஸ். மார்க்கண்டு,
களுதாவளை.

கே: தங்கை படத்தைப்போல் சண்டை உள்ள படங்களில் நடிகர் திலகம் நடிக்கிறாரா?

ப: ஸ்ரீதரின் 'புரட்சிக்காரவில்' நடிக்கிறார்!

ஃ

சி. த. பொன்னுத்துரை,
ஆரையம்பதி.

கே: சிவாஜி கணேசனும் கே. ஆர். விஜயாவும் சேர்ந்து இதுவரை எத்தனை படங்களில் ஜோடியாக நடித்திருக்கிறார்கள்?

ப: 6 படங்களில்!

ஃ

செ. தியாகராசா,
சம்பூர்.

கே: எங்க வீட்டுப் பிள்ளையா திருவிளையாடலா சென்னையில் கூடிய நாட்கள் ஓடியது?

ப: எங்க வீட்டுப் பிள்ளை!

கே: கண்ணன் என் காதலன் என்ற படம் யாருடையது? எஸ். எஸ். ஆர். உடையதா? எம். ஜி. ஆர். உடையதா? வீரப்பன் உடையதா?

ப: வீரப்பனுக்குச் சொந்தமான சத்தியா மூவிஸ் தயாரிக்கும் இப்படத்தில் எம். ஜி. ஆர். கதாநாயகனக நடிக்கிறார்.

கே: எம். ஜி. ஆருடைய முகவரியை தயவுசெய்து வெளியிடுக!

ப: எம். ஜி. ஆர். தோட்டம், ராமாவரம், சென்னை 17

ஃ

ஏ. எஸ். சந்திரபவான்,
நொச்சிமோட்டை.

கே: இந்தியாவில் தங்கப் பதக்கம் பெற்ற தமிழ்ப்படங்கள் எவை?

ப: இனிமேல்தான் அந்தப் பேறு தமிழ்ப் படத்துக்குக் கிடைக்கவேண்டும்.

கே: ஜெய்சங்கரா ரவியா சண்டைக்காட்சியில் திறமையாக நடிக்கிறார்?

ப: ஜெய்சங்கர்!

எஸ். கே. கே.,
அச்சுவேலி.

கே: இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படங்களில் எவையாவது இந்தியாவில் திரையிடப்பட்டனவா?

ப: இல்லை!

ஃ

கே. நவரத்தினம்,
நெடுங்கேணி.

கே: சரஸ்வதி சபதம் தென்னகத்திலே எத்தனை நாட்கள் ஓடியது?

ப: 20 வாரங்கள்.

ஃ

சிவாஜிப் பிரியன்,
புலோலி கிழக்கு.

கே: நடிக மன்னன் சிவாஜி கணேசன் நடித்த ஊட்டி வரை உறவு படம் தரத்தில் வெற்றி பெற வாய்ப்புண்டா?

ப: ஸ்ரீதரின் படங்களுள் ஊட்டி வரை உறவு ஒரு புது மாதிரியான கதையைக் கொண்டது. நடிகர் திலகம் இதில் ஏற்றிருப்பது இதுவரை ஏற்காத ஓர் புதுமைப் பாகம். ஆகவே இப்படம் நிச்சயம் வெற்றி பெறும்.

ஃ

செங்கலடி நண்பர்கள்,
கொம்மாதுறை.

கே: எம். ஜி. ஆர்., சிவாஜி கணேசன், ஜெய்சங்கர், ஜெமினி கணேசன், ரவிச்சந்திரன் இவர்களில் சிறந்த நடிகர்களை முறைப்படி தருக.

ப: சிவாஜி கணேசன், எம். ஜி. ஆர்., ஜெமினி கணேசன், ரவிச்சந்திரன். சரிதானே!

ஃ

இ. தர்மபாலன்,
நெடுங்கேணி.

கே: ஈழ நாட்டிலே புகழ் மங்கிவரும் மூன்று எம். பி. களை நடிகர்களாக வைத்து மூவர் நாம் என்னும் படத்தைத் தயாரித்தால்...

ப: சீ சீ என்று மக்கள் காறி உமிழ்வார்கள்.

கே: ஒரு படத்தின் வெற்றிக்குக் காரணம் கதாநாயகனு? சிரிப்பு நடிகனு?

ப: இருவருமல்ல டைரக்டர்தான்!

ஃ

ஆர். கண்ணன்,
நீர்கொழும்பு.

கே: "மிஸ் மதராஸ்" என்ற படம் தமிழில் தயாராகிறதாமே?

ப: உண்மைதான்!

கே: ராஜஸ்ரீக்கு எந்த மொழிப் படங்களில் ஏகப்பட்ட கிராக்கி?

ப: தெலுங்குப் படங்களில்

ஃ

சி. பூபாலபிள்ளை,
ஆரையம்பதி 3.

கே: எம். ஜி. ஆர். நடிக்கும் கலர்ப்படங்கள் என்ன என்ன?

ப: குடியிருந்த கோவில்!, அடிமைப்பெண், ரகசியப் பொலீஸ் 115, மறுபிறவி முதலியன.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: 'காட்டுராணி' படத்தில் முகமூடி அணிந்து சண்டை செய்வது உண்மையிலேயே அசோகனும், பாலாஜியுந்தானு? அல்லது சியாம்சுந்தரின் குழுவில் உள்ளவர்களா?

ப: அசோகனும், பாலாஜியும்தான்!

கே: சிவாஜி நடித்து அடுத்து வெளிவரவிருக்கும் படமெது?

ப: கலாட்டா கல்யாணமாக இருக்கலாம்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடிமைத்தளையறுத்து விடுதலையடைந்த புதிய நாடு

'**நாம்** அடைந்துள்ள சுதந்திரம், பிரிட்டிஷ் அரசாங்கம் எமக்கு தந்த ஒரு பரிசுப் பொருளல்ல; இரத்தமும் வேர்வையும் கொட்டி, உயிர்ப்பலிகள் கொடுத்து பெரும் போராட்டத்தின் பின்பே எமது விடுதலையை அடைந்துள்ளோம்' இவ்வாறு இவ்வாரம் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற ஏடனின் சுதந்திரத்துக்குப்போராடியதேசிய விடுதலை முன்னணித் தலைவர் முகமட் அல்சாபி கூறியுள்ளார்.

மத்திய கிழக்கில் பிரிட்டனுக்கிருந்த ஒரேயொரு காலனி நாடான ஏடன் நவம்பர் மாதம் 30ம் திகதி சுதந்திரமடைந்ததுடன், மத்திய கிழக்கிலிருந்து பிரிட்டனின் ஆட்சியுரிமை பூரணமாக மறைந்தது.

சுதந்திரத்துக்காக ஏடன் மக்கள் பல ஆண்டுகளாக பெரும் போராட்டங்களை நடத்திய பின்னரே விடுதலையின் ஒளிபட்டு அடிமை இருள் அகன்று சென்றது.

ஏறத்தாழ 129 ஆண்டுகள் பிரிட்டனின் ஆட்சிக்குள் ஏடன் இருந்து வந்தது. அன்னிய ஆட்சியை எதிர்த்து ஏடன் மக்கள் கிளர்ந்தெழுந்து தொடர்ச்சியாகப் போராடி வந்தனர்.

ஏடனின் சுதந்திரத்துக்காக முதன் முதலாக இயக்கத்தை ஆரம்பித்து போராட்டங்களை நடத்தியது புலோசி இயக்கம். இந்த இயக்கத்துக்கு ஜனாதிபதி நாசரின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்து வந்தது.

புலோசி இயக்கத்தின் தலைவர் மக்ஹாவி. இவர் பலாத்காரப் போராட்டங்களில் நம்பிக்கையற்றவர். இதனால் புலோசி இயக்கத்தில் கருத்து வேறுபாடு எழுந்தது. இதனால் முகமெட் அல்சாபி புலோசி இயக்கத்திலிருந்து 1963ம் ஆண்டு பிரிந்து தனி இயக்கம் ஆரம்பித்தார். இந்த இயக்கத்தின் பெயர்தான் தேசிய விடுதலை முன்னணி.

ஏடனின் விடுதலைப் போரில் தேசிய முன்னணி குதித்ததும், பிரிட்டிஷாருக்கு எதிராக வன்முறைப் போராட்டங்கள் பெருமளவில் பரவின. தேசிய விடுதலை முன்னணியின் தீவிர நடவடிக்கை வாலிபர்களைக் கவர்ந்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஏடன் இளைஞர்கள் திரண்டனர். கொரில்லாத் தாக்குதல்களில் ஈடுபட்டனர். பிரிட்டிஷ் ஆட்சி தத்தளித்தது.

அவசரகாலச் சட்டம் பாய்ந்தது. அச்சட்டம் விடுதலை உணர்ச்சியுடன் வீறு கொண்டெழுந்துவிட்ட வாலிபர்களை என்ன செய்யும்? இதன் முடிவாக ஏடனைவிட்டு ஓட வேண்டிய நிலை வெள்ளைக்காரர்களுக்கு இன்று ஏற்பட்டுவிட்டது.

ஏடனின் முதலாவது ஜனாதிபதியாக தேசிய விடுதலை முன்னணித் தலைவர் முகமட் அல்சாபியே பொறுப் பேற்றுள்ளார்.

ஆனால் ஏடனில், புலோசி இயக்கத்தினருக்கும், தேசிய விடுதலை முன்னணியினருக்குமிடையே அதிகாரப் போட்டிகள் ஏற்பட்டுள்ளது ஏடனின் துரதிருஷ்டம் என்றே கூறவேண்டும்.

எனினும் இரு இயக்கங்களிடையே சுமுக உறவையேற்படுத்த ஜனாதிபதி நாசர் எடுக்கும் முயற்சி வெற்றிபெற்றால், ஏடன் முன்னேற நல்ல வாய்ப்புண்டு.

உலகின் சிறந்த துறைமுகங்களில் ஒன்றாக விளங்கும் ஏடன் துறைமுகத்துக்கு சூயஸ்கால்வாய் திறக்கப்பட்டபின்னர் பெரும் செல்வாக்கு ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

ஏடன் அடைந்துள்ள சுதந்திரம், சுதந்திரத்துக்காகப் போராடும் சகலருக்கும் புதிய சக்தியையும் நம்பிக்கையையும் அளிக்கிறது.

## மக்கள் குரல்

### போதனா மொழி வெற்றி; தமிழரசாருக்கு பாராட்டு

**மா**ணவர்களுக்கு அவர்களின் தாய் மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்தது. நாட்டின் இப்போதைய நிலைபரத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு செய்த ஒரு பெருநன்மையே இது.

தமிழ் மொழியை அழிந்து விடாமல் பாதுகாக்கக்கூடிய ஒரு திட்டவட்டமான நடவடிக்கை இது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தமிழ் மொழியைப் பாதுகாப்பதே, தமிழ் பேசும் மக்களதும், அவர்களின் அரசியல் கட்சிகளினதும், பாராளுமன்ற உறுப்பினர்களினதும் நீங்காக் கடமை.

தமிழை அழிந்துவிடாமல் காப்பதற்குரிய தமிழ் உரிமையை அளித்ததற்காக, பிரதமருக்கும், அரசாங்கத்துக்கும், தமிழ் பிரதிநிதிகளுக்கும் தமிழ் பேசும் மக்கள் நன்றி கூறவேண்டும்.

தமிழ் மொழியே தமிழ் பேசும் குழந்தைகளின் போதனா மொழியென்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது இன்னுமொன்றையும் உணர்த்துகிறது. அதுதான் கூடியவரை ஐ. தே. கட்சியுடன் ஒத்துழைப்பதன் மூலமே உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற உண்மையே அது.

தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்திருந்ததாலேயே போதனா மொழி விஷயத்தில் தமிழ் மக்கள் விரும்பியதைப் பெற முடிந்தது. விலகியிருந்தால் இவ்வுரிமை கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே.

அரசாங்கத்திலிருந்து விலகுவதில்லையென தமிழரசுத் தலைமைப்பீடம் தீர்மானித்திருப்பது ராஜதந்திரமும், விவேகமுமுடைய ஒரு நடவடிக்கையாகும்.

எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு நன்மைகள் ஏற்படவும் இதுபோன்ற விவேகமான நடவடிக்கைகளே வேண்டும்.

எஸ். சிவசுப்பிரமணியம்

கொழும்பு-12

(2)

தாய் மொழியே போதனா மொழியாகிவிட்டது. இது தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களுக்கு பெற்றுக்கொடுத்த ஒரு மாபெரும் உரிமையென்பதை எவரும் மறுக்க முடியாது.

பெற்றோர் விரும்பும் மொழியே போதனா மொழி. இதை மாற்றவே மாட்டேன் என்று அடம் பிடித்த திரு. இரியகொல்லையையே மனம் மாற வைத்த தமிழரசாரின் உறுதி, ஏனைய உரிமைகளையும் தமிழ் பேசும் மக்களுக்கு நிச்சயம் பெற்றுத்தரும்.

எம். கந்தசாமி

மட்டக்களப்பு

(3)

போதனா மொழிப் பிரச்சினையில் தமிழரசுக் கட்சியுடன் தமிழ் காங்கிரஸ் ஒத்துழைத்தது இதனால் தமிழ் பேசும் மக்களின் உரிமை காக்கப்பட்டுவிட்டது. இதேபோல் மாவட்ட சபை போன்ற விஷயங்களிலும், தமிழ் காங்கிரஸ் தமிழரசுடன் ஒத்துழைத்தால், தமிழினத்தின் உரிமைகள் விரைவில் கிடைத்துவிடும்.

ந. பொன்னம்பலம்

பருத்தித்துறை

(4)

போதனா மொழிப் பிரச்சினை பூதாகார உருவெடுத்து தமிழ் பேசும் மக்களை விழுங்க வந்தபோது, தமிழரசுத் தலைவர்கள் எடுத்த உறுதியான நடவடிக்கை தமிழினத்தைக் காத்துவிட்டது. இந்த முயற்சியில் கட்சியுடன் சேர்ந்து போர்க்குரலெழுப்பிய சுதந்திரனுக்கும் தமிழ் பேசும் மக்கள் கடமைப்பட்டவர்கள்.

கே. இராமநாதன்

யாழ்ப்பாணம்

(5)

தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்தில் சேர்ந்து எதைச் சாதித்துவிட்டது என்று கேட்பவர்களுக்கு பதில் தாய் மொழியே போதனா மொழி என்று கூறலாம்.

சி. கெங்காதரன்

சுண்ணாகம்

(6)

ஈழத்தில் தமிழ் இனத்தை அழியாது காக்கக்கூடியது தாய் மொழியை போதனா மொழியாக்கிய செயல். இதனால் தமிழ் தாய் தன் மைந்தர்களான தமிழரசுத் தலைவர்களை வாழ்த்துகிறாள்.

வி. நடராசா

மூதூர்

(7)

போதனா மொழிப் போரில் வெற்றிதான். ஆனால் தோட்டப் பாடசாலைகளைப் பொறுப்பேற்பதை திரு. இரியகொல்லை தட்டிக்கழித்து விட்டதைக் கண்டு மலையகத் தமிழ் மக்கள் குமுறுகிறார்கள்.

எம். சரசுவதி

புண்டுலோயா

## வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் புதிய பாதை

### மாணிக்கராசா முயற்சி வெற்றி

**வ**டக்கையும், கிழக்கையும் போக்கு வரத்துக்கு இணைக்கக்கூடிய வகையில் புதிய பாதையொன்று உருவாக்கப்படவிருக்கிறது. சலப்பையாறு திட்டமென்று அழைக்கப்படும் இத்திட்டத்துக்கு பொதுவேலைத் திணைக்களத்தால் இரண்டு லட்சத்து எண்பத்தையாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருமலைப் பா. உ. திரு. மாணிக்கராசாவின் விடாமுயற்சியால், இத்திட்டம் நிறைவேற்றப் படவிருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.



வடக்குக்கும் கிழக்குக்கும் நேரடிப் போக்குவரத்துக்கு வழி செய்யக்கூடிய சலப்பையாற்றுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பல ஆண்டுகளாக திரு. மாணிக்கராசா எடுத்துவந்த பெருமுயற்சி இப்பொழுதுதான் வெற்றியடைந்திருக்கிறது.

இத்திட்டத்துக்கென பொதுவேலைத் திணைக்களம் ரூபா 2,85,000 ஒதுக்கியுள்ளது.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதும், முல்லைத்தீவு வழியாகத் திருமலைக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படும். தமிழ்ப் பிரதேசங்கள் ஒன்றுடன் ஒன்று இன்னும் அதிகமாகத் தொடர்பு கொண்டு உறவைப் பெருக்கிக்கொள்ள இதனால் வழியேற்படுகிறது.

## பிரதமர் கூறியதை நடைமுறைப்படுத்துக!

### இரியகொல்லையிடம் இரத்தினம் வற்புறுத்து

**பா**டசாலைகளைத் தரம் பிரிக்கும் பிரச்சினையில் பிரதமர் தெரிவித்த கருத்துக்களை கல்வியமைச்சர் தவறாது நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதை இம்மாதம் 3ந் திகதி நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வற்புறுத்தினாரென்று தெரிகிறது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நீண்ட நேர விவாதத்தின் பின்னர், பெற்றோர் ஆசிரியர் சங்கமும், அப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும், எதிர்ப்பு தெரிவித்தால், எந்தப் பாடசாலையையும் தரம் குறைப்பதில்லையெனவும், பாடசாலைகளைத் தரப்படுத்தும் இறுதித் திட்டத்தை ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களது பார்வைக்கும் அனுப்ப வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமரையடுத்துப் பேசிய கிளிநொச்சிப் பா. உ. திரு. இரத்தினம், பிரதமர் தெரிவித்த இரண்டு முடிவுகளையும் கல்வியமைச்சர் ஏற்று முற்று முழுதாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தினார்.

## உதவி அமைச்சரின் பெருந்தன்மை

பாராளுமன்றத்தில் கிளிநொச்சி எம். பி. யின் கேள்வியொன்றுக்கு தேசியமய சேவை உதவியமைச்சர் திரு. வெலகெதரை சிங்களத்தில் பதிலிறுத்தார். திரு. இரத்தினம் இதைச் சுட்டிக்காட்டியபோது, தனது தவறை ஒப்புக்கொண்டு பின்னர் ஆங்கிலத்தில் பதிலிறுத்தார் உதவியமைச்சர். இந்தச் சம்பவம் 4-12-67ல் நடைபெற்றது.

திரு. இரத்தினம் இ. போ. ச. பற்றி எழுப்பிய சில வினாக்களுக்கு திரு. வெலகெதர சிங்களத்தில் பதிலை வாசித்து விட்டு உட்கார்ந்ததும் திரு. இரத்தினம் எழுந்தார்.

'இச் சபையில் இதுவரை கேள்வி கேட்பவருக்கு புரியும் மொழியில் பதிலளிக்கப்பட்டு வந்தது. இன்று உதவியமைச்சர் எனக்கு விளங்காத மொழியில் பதிலளித்தார். ஆகவே நான் அவருக்கு விளங்காத எனது தாய் மொழியில் கேள்வி கேட்க சபாநாயகரிடம் அனுமதி கேட்கிறேன்' என்று கூறினார்

உடனே திரு. வெலகெதர எழுந்து, தான் தவறுதலாக சிங்களத்தில் வாசித்து விட்டதாகக் கூறி பதிலை மீண்டும் ஆங்கிலத்தில் வாசித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைநாடுகளில் உலக நிர்வாண இயக்கம் வெகு வேகமாக பரவி வருகிறது. இன்று உலகெங்கிலும் மொத்தம் 142 நிர்வாண முகாம்கள் செயற்படுகின்றன. இந்த இயக்கம் பற்றியும் நிர்வாண முகாம்கள் பற்றியும் சில சுவையான தகவல்கள் கீழே இடம் பெறுகின்றன.

# மேலைநாடுகளில் பரவி வரும் முழு நிர்வாண இயக்கம்

ஆண்களும், பெண்களும் உடை ஏதுமின்றி, பிறந்த மேனியுடன் திரிவது அநாகரிகம் என்பதுடன் சட்டப்படி குற்றமுமாகும். ஆனால் இன்று உலகெங்கிலும் ஆண்களும் பெண்களுமாக ஏறக்குறைய ஒரு லட்சம் பேர்கள் சட்டத்தின் அனுமதியுடன் முழு நிர்வாணமாக வாழ்ந்து வருகின்றனர்.

இத்தனைக்கும் அவர்கள் அடர்ந்த காடுகளிலே வாழும் ஆதிவாசிகளல்ல. நாகரிகத்தின் வாசனை அறியாத காட்டுமிராண்டிகளுமல்ல. மாறாக அவர்கள் அனைவரும் படித்தவர்கள் பட்டமும் பெற்றவர்கள். அத்துடன் நாகரீக நாடுகள் எனக் கூறப்படும் மேலை நாடுகளைச் சேர்ந்தவர்கள் தான் அந்த ஒரு லட்சம் பேர்களும்!

ஆனால் ஒன்று இவர்களனைவரும் ஆண்—பெண் என வேறுபாடின்றி ஒன்றாக இணைந்தே வாழ்ந்து வந்த போதிலும் உடையணியும் பிறமக்களிடமிருந்து பிரிந்து விலகியேதான் தனித்து வாழ்ந்து வருகின்றனர். அதாவது தங்களுக்கென தனித்தனி முகாம்களை அமைத்துக் கொண்டு உடை அணியும் மனிதர்களது கண்களில் படாத வண்ணம் அத்தகைய முகாம்களில் மட்டுமே வாழ்ந்து வருகின்றனர்.

## 142 நிர்வாண முகாம்கள்

இன்று உலகெங்கிலும் மொத்தம் நூற்றி நாற்பத்திரண்டு நிர்வாண முகாம்கள் உள்ளன. அவைகள் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்டிரியா, சுவிட்ஸர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளில் அமைந்துள்ளன.

இத்தகைய முகாம்களில் இருப்பவர்கள் அனைவரும் உலக நிர்வாண இயக்கத்தில் தங்களது பெயர்களை அங்கத்தினர்களாகப் பதிவு செய்துள்ளனர். இந்த இயக்கம் நிர்வாணத்திலுள்ள பெருமையைப் பல வழிகளில் பறைசாற்றி வருகிறது.

இந்த இயக்கத்தை ஆதரிப்பதற்கென நாற்பது பத்திரிகைகள் உள்ளன. அவைகளில் அமெரிக்காவிலிருந்து மட்டும் இருபத்திமூன்று பத்திரிகைகள் வெளிவருகின்றன. அப்பத்திரிகைகள் அனைத்திலும் 'நிர்வாணம்' பற்றிய கட்டுரைகளும் புகைப்படங்களும் (நிர்வாணமாகத்தான்) இடம் பெற்றிருக்கும்.

## இயக்கத்தினரின் கேள்வி

கவர்ச்சிகரமாகத் தோற்றமளிப்பதற்குள்ள ஒரே வழி உடலில் உடைஏதும் அணியாமலிருப்பதுதான் என்று இந்த இயக்கம் கூறுகிறது. அது மட்டுமல்ல மனித உடலை ஆபாசம் எனக் குறிப்பிடுவதே தவறு என அது வாதிக்கிறது. நாம் நிர்வாணமாகப் பிறந்தோம்—நிர்வாணமாக (குழந்தைப் பருவத்தில்) வளர்ந்தோம்—அதைப்போல நிர்வாணமாகவே கடைசிவரை வாழ்வதில் என்ன தவறு இருக்கிறது? என அந்த இயக்கம் பிறரைப் பார்த்துக் கேட்கிறது.

## வெறியுணர்வு விலக...

இன்று உலகெங்கிலும் பாலுணர்வுக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அது மட்டுமல்ல, சிற்றின்ப வெறி மக்களிடம் அதிக அளவில் பரவி வருகிறது. போதாக்குறைக்கு இரவு விடுதிகளும் அவைகளில் இடம்பெறும் ஆடை அவிழ்ப்பு நடனங்களும் அந்த வெறியைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கின்றன. சினிமாக்களிலும் நாடகங்களிலும் ஆண்களும் பெண்களும் அருவருக்கத்தக்க உடைகளை அணிந்து கொண்டு, ஆபாச வசனங்கள் பேசிக்கொண்டு மக்களின் உள்ளங்களைப் பெரிதும் கெடுத்து வருகின்றனர். பொதுவாக சிற்றின்பத்தின் மீது உலக மக்கள் நாளுக்கு நாள் அதிக மோகம் கொண்டு வருவதால் சமுதாயத்தில் பல சீர்கேடுகள் நிகழ்வதற்கு இடம் ஏற்பட்டு வருகிறது.

இந்த வெறியுணர்வு மக்களை விட்டு விலக வேண்டுமென்றால் அதற்குள்ள ஒரே வழி உலகெங்கிலும் நிர்வாண இயக்கம் பரவுவதுதான். அதன் மூலம் மக்கள் அனைவரும் ஆண்—பெண் இன பேதமின்றி வாழ்கின்ற ஒரு சமநிலை ஏற்படும் போது அங்கே பாலுணர்வுக்கு தனி முக்கியத்துவம் இருக்க முடியாது. அங்கே இரவு விடுதிகள் இருக்காது. ஆடை அவிழ்ப்பு நடனங்கள் நடைபெறாது.........

## மருத்துவக் கருத்து

இப்படிப் பல காரணங்களைத் தனக்குச் சாதகமாகக் கூறும் இந்த இயக்கம் மற்றுமொரு கோணத்திலிருந்தும் சில ஆதாரங்களைக் காட்டுகிறது. உடற்கூறு சாஸ்திரப்படி சூரிய ஒளி உடலின் மீது படுவதால் பல நன்மைகள் கிடைக்கின்றன என்பதை மருத்துவர்கள் அனைவரும் ஒப்புக் கொள்வர். எனவே நிர்வாணமாகவாழும் நபர்களுக்கு அத்தகைய தன்மைகள் கண்டிப்பாகக் கிடைக்கின்றன. மேலும், நரம்புத் தளர்ச்சி

# பிறந்த மேனி முகாம்கள்பற்றி சுவையான தகவல்கள்

போன்ற பல நாகரீக யுக வியாதிகள் ஏற்படாமல் இருக்க நிர்வாணமாக வாழவேண்டியது மிக அவசியம் என இந்த இயக்கம் பிரச்சாரம் செய்கிறது.

## சட்ட திட்டம்

இந்த இயக்கத்தின் பிரச்சாரத்தை நம்புபவர்கள் மேலை நாடுகளில் பெருகிக்கொண்டே வருகிறார்கள். அதே சமயம் நினைத்த நேரத்தில் யார் வேண்டுமானாலும் நிர்வாண முகாம்களுக்குள் நுழைந்து விடலாம் என எண்ணிக் கொள்ளக் கூடாது. அங்கு செல்வதற்கு சில சட்ட திட்டங்கள் உள்ளன.

முதல் சட்டம் இருபத்தொரு வயதைக் கடந்தவர்கள் மட்டுமே இத்தகைய முகாம்களுக்குச் செல்ல முடியும். வயது அதற்கும் குறைவாக இருந்தால் ஒன்று மணம் ஆகியிருக்க வேண்டும் அல்லது பெற்றோர்களும் கூட வர வேண்டும். அந்த சமயம்மணம் ஆகியிருந்தால் கண்டிப்பாகத் தம்பதிகளாக மட்டுமே வர வேண்டும்.

## இரு சோதனைகள்

முகாம்களில் உள்ள நிர்வாகிகள் புதிதாக வருபவர்களை சுலபத்தில் அனுமதித்து விடுவதில்லை. அவர்களின் ஒவ்வொரு செய்கையையும் அவர்களுக்குத் தெரியாமலேயே இரண்டு முறை சோதிக்கிறார்கள். அந்த இரு சோதனைக் கட்டத்திலும் தேறிவிட்டால் மட்டுமே அவர்கள் அந்த இயக்கத்தின் நிரந்தர அங்கத்தினராகப் பதிவு செய்யப்பட்டு உலகெங்கிலுமுள்ள எந்த ஒரு முகாமிலும் எப்போதுவேண்டுமானாலும் சென்று தங்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

அதேசமயம் சோதனைக் கட்டத்தில் புதிதாகச் செல்லும் ஒவ்வொருவரும் தங்களைப் பற்றிய நற்சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும். மேலும் அவர்களது எந்த ஒரு செயலும் அந்த முகாம்களின்சட்ட திட்டங்களை மீறுவதாக இருக்கக் கூடாது.

## இரு விதிகள்

முகாம்களின் உட்புறம் சென்றுவிட்டால் சிற்றின்ப உணர்வுக்குச் சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது என்பது முக்கியமான முதல் விதியாகும். அதற்குத் தகுந்தாற்போல போதைப் பொருட்கள் எதையும்யாரும் முகாம்களுக்குள் கொண்டு செல்லக் கூடாது.

யாரையும், யாரும் கேலி செய்யவோ, மனம் புண்படும்படி பேசவோ கூடாதென்பது இரண்டாவது விதியாகும்.

பொதுவாக அங்குள்ளவர்களனைவரும் பேதமற்ற சூழ்நிலையில் வாழ்ந்துவருவதால் பெரும்பாலும் தவறுகளே நேர்வது கிடையாது.

புதிதாகச் செல்லும் யாரையும் அங்குள்ள எவரும் ஆர்வத்துடன் பார்ப்பதில்லை. அலட்சியமாகவே இருந்து விடுகின்றனர். எனவே அங்கு சென்ற சில மணி நேரங்களிலேயே புதியவர்களின் கூச்சம் தெளிந்து விடுகிறது. ஆனால் அவர்கள் மட்டும் ஒவ்வொருவரையும் கவனமாகப் பார்க்கிறார்கள்!

## பொழுது போக்கு

ஒவ்வொரு முகாமிலும் குளிப்பதற்கு நீச்சல் குளங்கள் விளையாடுவதற்கு அரங்கங்கள் உலாவுவதற்கு சோலைகள், வெயிலை அனுபவிப்பதற்குத் திறந்த வெளிகள் என எல்லா வித வசதிகளும் உள்ளன. பகலெல்லாம் விளையாடுவதிலும், குளிப்பதிலுமாகப் பொழுதைக் கழித்தபின் இரவுநேரங்களில் பாடல்கள், இசை வாத்தியங்களை இசைத்தல்போன்ற கேளிக்கைகளில் உற்சாகமாக அனைவரும் ஈடுபடுகின்றனர்.

வாரத்திற்கொரு முறை சில முகாம்களில் பிரார்த்தனைக் கூட்டங்களும் நடைபெறுவது வழக்கம். அப்போது பாதிரியார்கூட நிர்வாணத் தோற்றத்திலேயே காட்சியளிப்பார்.

சில விசேச காலங்களில் வெளியிலிருந்து பாண்டு வாத்தியக் கோஷ்டிகளை வரவழைத்து இசை நிகழ்ச்சிகளை நடத்துவது உண்டு. அச்சந்தர்ப்பங்களில் விரும்புபவர்கள் உடையணிந்து கொள்ளலாம். அல்லது அப்படியே நிர்வாணமாகவும் இருக்கலாம்.

## தாரக மந்திரம்

விவசாயிகள் வியாபாரிகள் தொழிலாளிகள், ஆசிரியர்கள், என்ஜினியர்கள், டாக்டர்கள், பாதிரிகள், வக்கீல்கள் எனப் பலதரப்பட்டவர்கள் இந்த இயக்கத்தில் இருந்த போதிலும் ஏனைய மக்கள் இவர்களைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் எனச் சொல்வதற்கில்லை. இருந்த போதிலும் அதைப் பற்றி இவர்கள்கவலைப்படுவதுமில்லை. தங்களது பிரச்சாரத்தை நிறுத்திக்கொள்வதுமில்லை.

'நிர்வாணத்தின்மகிமையை நிர்வாணமாக இருப்பவன் தான் உணரமுடியும்' என்பது தான் இந்த இயக்கத்தினர் தம்மும் தாரகமந்திரமாகும்!

# சித்தப்பிரமை: அமெரிக்க சோவியத் விஞ்ஞானிகள் முரண்பாடு

தீவிர உளநோய்களில் ஒன்றான சித்தப் பிரமையின் காரணங்களை ஆராய்வது குறித்த ஸ்ரான்ஸ்கால்ட்டன் வரைந்த கட்டுரையொன்று அமெரிக்கப் பத்திரிகைகளில் அண்மையில் வெளியாயிற்று. மனித உடலின் 'இரசாயன அமைப்பு'க் கோளாறினால் தான் இந்நோய் ஏற்படுகிறதென்று அமெரிக்க நிபுணர்கள் கருதுவதாக அக்கட்டுரை குறிப்பிட்டது.

சித்தப்பிரமை பிரச்சினையை விளக்குவதில் கால்ட்டன் புறவியல் நோக்கையே கடைப்பிடித்துள்ளார் என்பதை நாம் குறிப்பிட்டாக வேண்டும். சோவியத் விஞ்ஞானிகளும் இந்நோய் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். நோயாளியைப் பரிசீலித்து சிகிச்சை அளிப்பம் முறையிலிருந்து, மூளைக்கூறு ஆராய்ச்சி வரை பல்வேறு மட்டங்களிலும் இது நடைபெற்று வருகின்றன.

சித்தப் பிரமை நோயாளிகள் பல்வேறு வகைப்பட்டவர்களாக உள்ளனர். நோயுக்கு கத்தில் காணப்படும் வேறுபாட்டைப் பொறுத்து, நோயின் வெளிப்பாடுகளும் மாறுபாடடைந்து காணப்படுகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு சித்தப் பிரமை நோய் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியான சித்த பிரமை (ஆபத்தானது); அப்போதைக்கப்போது ஏற்படுபவை. சன்னட விடும் தன்மை படைத்தவை.

சித்தப் பிரமையின் காரணங்களை ஆராய்வதில் அமெரிக்க விஞ்ஞானிகள் குறிப்பாக நுணுக்க அம்சங்களையே அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்றனர். ஆனால் சோவியத் ஆராய்ச்சிகளின் முடிவுகள், உயிரியல் அம்சங்களையே(மரபியல்தன்மைகள் உட்பட) அடிப்படையாகக் காட்டுகின்றன.

சித்தப்பிரமை வெளிப்பாட்டில், வயது ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

சித்தப் பிரமை நோய் பற்றி இன்னும் பெருமளவில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வந்த போதிலும், இந்நோயை வெற்றி கொள்வது வருங்காலம் ஆய்விட்டின் எதிர்நோக்குகிறது.

உங்கள் அவசிய
தேவைகளைப்
பூர்த்தி செய்து தருவேன். எழுதி அனுப்புங்கள்.
தொழில் கிடைக்க, விற்பனை, விவசாயம், நிலபுலன்கள் உயர்வடைய, விஷ ரோகங்களால் பாதிக்கப்பட்ட சரீரம் குணமடைய, பரீட்சை, போட்டி முதலியவற்றில் வெற்றி அடைய, மனம்பாடமிருக்க, சபைக் கூச்சம் நீங்க, இடதோஷம், கண்ணூறு, விஷப் பேச்சு, கிரக தோஷம் நீங்க, எந்த வகையான பெண்ணும் சொற்படி கேட்டு நடக்க, தேவையற்றவர்கள் விலகிப்போக, பிரிந்தவர் ஒன்று கூட, தேவையானவர்களைத் தேடிக் கொள்ள, திருமணம் நடைபெற, கணவன் மனைவி பிணக்குகள் நீங்க, மனக்கசப்பால் கணவனுக்கு அடங்கி சேவை செய்யாமல் இருக்கும் மனைவி கணவனுக்கு அடங்கி சேவை செய்ய, நிலம் சம்பந்தமாக துரோகம் செய்யும் சத்துருக்களுக்கு தெய்வ தண்டனை கிடைக்கச் செய்ய, உடல் மெலிதல் போன்ற சகல நோய்களையும் போக்கி சந்தோஷமான வாழ்வு கிடைக்க, தனிமை தோஷம் என்பவற்றிற்கும் மற்றும் எல்லா விதமான பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன். இரகசியங்கள் வெளியிடப் படமாட்டாது. எழுதுங்கள்.
அரசாங்க பதிவு பெற்ற மனோ வைத்திய மகா மந்திரசாஸ்திரி
நான்கு தேவாலயங்களின் தர்மகர்த்தா நம்பியார்.
தொலைபேசி: 454.
இனை;
103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மருதானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 350ஐ ரூ. 903 ஆக மாற்றிய இ. தொ. கழகத்தின் சாதனை

நாரங்காலைப் பகுதியைச் சேர்ந்த டக்குவாரி குரூப் லுனுகலைடிவிசன் தோட்டத் தொழிலாளர்கள் இ. தொ. காங்கிரசில் அங்கம்வகித்துக்கொண்டிருந்தபோது தோ. தொழிலாளர்கள் திரு. கூ. பின்னந்தன், திரு. வி. முத்துவீரன், திரு. ச. கந்தசாமி ஆகியோருக்கு 35 வருட சேவை காலத்திற்கு முறையே ரூபா 350, 375, 400 சேவை காலப் பணமாக (பென்சன்) தோட்ட நிர்வாகம் வழங்கியது.

மேற்படி தோட்டத் தொழிலாளர்கள் பன்விலை மாவட்ட இ. தொ. கழகத்தில் சேர்ந்த நான்கு மாதத்திற்குள் பன்விலை மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். முத்தையா இவ்விஷயத்தில் முயற்சி எடுத்தார்.

அதன் பயனாக மேற்படி தொழிலாளர்களுக்கு 35 வருட சேவைகாலமும் சேர்க்கப்பட்டு திரு. கூ. பின்னந்தனுக்கு ரூபா902-85 சதமும், திரு. வி. முத்துவீரனுக்கு ரூபா 824-20 சதமும், திரு. ச. கந்தசாமிக்கு ரூபா 858-60 சதமும் தோட்ட நிர்வாகம் அண்மையில் வழங்கியது.

இது பன்விலை மாவட்ட இ. தொ. கழகத்திற்கு மாபெரும் வெற்றியாகும்.

அத்தோடு, பன்விலையைச் சேர்ந்த ராசாவத்தை தோட்டத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த தொழிலாளர் திரு. ராஜரட்ணம் அவர்களுக்குத் தோட்ட நிர்வாகம் நடத்திய பேச்சுவார்த்தை மூலம் மீண்டும் வேலை வாங்கித் தந்துள்ளார், பன்விலை இ. தொ. கழக மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். முத்தையா.

## வவுனியா...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் பெற்றோரும் அதிக பற்று கொண்டனர்.

தன்னிலும் மேலான மதிப்பை பெற்றோரிடமும் மாணவரிடமும் பெற்றுக் கொண்ட குறித்த ஆசிரியரை மேற்படி பாடசாலை அதிபர் வெறுத்து வந்தார் என்று தெரிகிறது.

தனது இனத்தவர்களும் வவுனியா எம். பியின் எமன்சகாவுமான இருவரைச் சரண் அடைந்தாராம் அதிபர்.

முடிவு ஆசிரியர் திருச்செல்வம் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதைக் கண்டு கொதித்தெழுந்தனர் பெற்றோர்கள் கூட்டினர் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தை. எம். பியால் பல தருணங்களில் புகழப்பட்ட அதிபரை எம். பி. முன்னிலையிலேயே இப்பாடசாலைக்குத் தகுதியற்றவர் எனக் குற்றம் சாட்டினர்.

அவரை இடமாற்றம் செய்து வேறு அதிபர் வேண்டும் என்று கல்வி இலாகா அதிகாரிகளைக் கோரி வெற்றியும் கண்டனர்!"

## முஸ்லிம்கள்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தகப்பனாரின் பிறப்பத்தாட்சிப் பத்திரத்தைக் காட்டும்படி கேட்டால் திணறுவாரென்றும் அவரது முற்சந்ததியைக் கிளறிப் பார்த்தால் அவர் ஒரு கோனார் என்பது விளங்கும் என்றும் கூறிமுடித்தார்.

எனினும் சட்டத்திருத்தம் நிறைவேறியது. அதை எதிர்த்து வாக்களித்தன தமிழரசுக்கட்சி, ஐ. தே. கட்சி இரண்டும்.


ஆனால் இந்த முக்கியமான பிரச்சினை விவாதிக்கப்பட்டு வாக்கெடுக்கப்பட்ட போது சுதந்திரக்கட்சியின் அரசாங்கத்தின் செல்லப்பிள்ளையாக இருந்த ஜனாப் அசமது எங்கே போயிருந்தார்? முஸ்லிம் விவசாயிகளின் பிழைப்புக்கே ஆபத்து வரக்கூடிய பிரச்சினை விவாதிக்கப்பட்டபோது அசமது அங்கிருந்திருக்க வேண்டாமோ?

சுதந்திரக்கட்சி முஸ்லிம் மக்களுக்கு இழைத்த கொடுமையை அக்கட்சியின் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதற்காக அன்று எதிர்க்க திராணியற்றிருந்தார் ஜனாப் அசமது" என்று மேற்படி முஸ்லிம் பிரமுகர் கூறிமுடித்தார்.


கலப்பற்ற உயர்தர அலுமினியம்

மங்காத பிரகாசம் * நீடித்த உழைப்பு

இவற்றிற்கு




டொலர்

அலுமினியப்பாத்திரங்கள்

டொலர் கோப்பரேசன்

14, டாம் வீதி, கொழும்பு-12.


# கூட்டு நடவடிக்கை தேவை

மிக மோசமான நிலையில் வாழ்ந்துவரும் எமது நிலையை இந்நாட்டு அரசாங்கமும், தோட்டச் சொந்தக்காரர்களும் மனிதாபிமான முறையில் அணுகி தோட்டத் தொழிலாளர்களுக்கும் நியாயமான அளவு சம்பள உயர்வு தரல் வேண்டும். தொழிலாளர்களை வாழ வைக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமே இந்நாட்டின் பொருளாதார வீக்கத்தைப் போக்கிக் கொள்ளமுடியும்.

இவ்வாறு கடந்த 1.12.67ல் பசுமலையைச் சேர்ந்த சின்னத் தோட்டத்தில் நடைபெற்ற தோட்டத் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் இணைப் பொருளாளர்களில் ஒருவராகிய திரு. மு. எல்லாளன் கூறினார்.

பசுமலை மாவட்டப் பிரதிநிதி திரு. எம். பி. வர்ணம் அவர்கள் கழகத்தின் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்து தலைமையுரையாற்றினார். திரு. எல்லாளன் தொடர்ந்து பேசும் போது, தொழிலாளர்கள் தனித்தனியாகப்போராட்டங்கள் செய்தோ அல்லது வேறு எவ்விதமாகவோ அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொண்டதாகவோ அல்லது அவர்களின் நல்ல நிலையைக் காப்பாற்றிக் கொண்டதாகவோ சரித்திரம் கிடையாது. ஆனால் ஒன்றுபட்ட சக்தியின் மூலமே தொழிலாளர்களின் ஜீவாதார உரிமைகளை காப்பாற்றிக் கொள்ள முடியும். இன்றுள்ள சூழ்நிலையில் தொழிலாளர்களின் ஏகோபித்த ஒரு கூட்டு நடவடிக்கையின் மூலமே சம்பள உயர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். இல்லாது போனால் நன்மையைப் பெறுவதற்குப் பதில் மாறாக முடிந்து விடலாம். என்பதை மனதிற் கொண்டு தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என வேண்டினார்.

மற்றும் மாவட்ட வாலிப முன்னணி தலைவர் திரு. நீலமேகம் உட்பட பலர் உரையாற்றினர்.

# நாயின் மோப்ப சக்தி

ஒருவரது கைவிரல் ரேகையைப் போல மற்றவரது கைவிரல் ரேகை இருக்காது என்பார்கள். நாய்களின் மூக்குகள் விஷயத்திலும் இது பொருந்தும்.

நாயின் மூக்கு, விசித்திரமானது. மோப்பம் பிடிக்கும் அபூர்வ சக்தி நாயின் மூக்குக்கு உண்டு. பத்து இலட்சத்தில் ஒரு பங்கிலிருந்து பத்துகோடி ஒரு பங்குவரை ஒரு வாசனை துளியுண்டு. இருந்தாலும் அதையும் மோப்பம் பிடித்து விடும் நாயின் மூக்கு! நாயின் மூக்கில் இலட்சக்கணக்கான நுண்ணிய மோப்பதுளைகள் இருக்கின்றது. ஆனால் எல்லா நாய்களும் ஒரேமாதிரி மோப்பம் பிடிக்கும் ஆற்றல் கொண்டவை எனச் சொல்ல முடியாது. 'சோபா' வில் சொகுசாகப் படுத்துத் தூங்கும் 'லாப்' நாய்களுக்கு மோப்ப சக்தி அளவு போதாது. டாஷ் கண்ட், பாக்ஸ்—டெர்ரியா, ஆகிய நாய்களுக்கு நல்ல மோப்ப சக்தி உண்டு. எல்லா ரக நாய்களிலும் ஜெர்மன் ஷெப்பர்ட் நாய்க்குத்தான் மோப்ப சக்தி அதிகம். அதன் மூக்கில் 22.5 [illegible]

# பிறந்த மண்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இயம்பிய என் மனங்கவர் மங்கையின் வார்த்தைகளை நினைத்ததும் என் மெய் சிலிர்த்தது!...

"என்ன மிஸ்டர் யோசிக்கிறீங்க;... இனிப்பு சாப்பிடுறீங்களா?" என்றவாறே விமானத் தாதிப் பெண், என் முன்னே இனிப்புத் தட்டை நீட்டிய வேளையில்தான், என் மனம் கனவுலகிலிருந்துவிட்டு விடுதலையானது. இனிப்பு இரண்டை எடுத்துச் சுவைத்துக் கொண்டே ஜன்னலினூடே எட்டி அவதானித்தேன், சத்தியத்தின் நிழலான பாரதத்தையும், செல்வம் கொழிக்கும் ஈழத்தையும் ஒருசேர இணைக்கும் வங்காளக் கடலன்னை, என் கண்களின் பார்வைக்கு எழில் தவழக்காட்சியளித்தாள்! கங்குகரை காணு வங்காளக் கடலன்னையை அரவணைத்துத் தழுவி முத்தமிட்டுக்கொண்டிருக்கும் அடிவானத்தின் ஈடு இணையற்ற காட்சியை எச்சொல்லால் சாற்றுவது?......

விமானம் இரத்மலானை விமான நிலையத்தை அண்மித்தது. பசுமை கொழிக்கும் லங்கா மாதா — பேரெழில் தவழும் ஈழத் தாய் — என் பிறந்த மண்ணை—உயிரூட்டி உரம் ஏற்றிய பிறந்த பொன்னாட்டைக் கிட்டியதும் எனக்குண்டான பெருமகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!......

அடுத்தநாள் பிற்பகல் இரண்டரை மணி! தலவாக்கலை ரயிலடியில் மூக்கை முனங்கிக் கொண்டு நின்றது 'உடரட்ட மெனிக்கா' பெட்டி படுக்கையுடன்—மல்லியப்பு தோட்டத்தை நோக்கி எட்டிநடந்தேன். நெஞ்சத்தில் மித மிஞ்சிய ஆவலுடன் ஓட்டமும் நடையுமாய் விரைந்த எனக்கு எதிர்பாராத ஏமாற்றமே காத்திருந்தது! பத்து வருஷங்களுக்கு முன் மல்லியப்பு தோட்டமாயிருந்த என் பிறப்பிடம், 'விரவன்ச புரமா'க மாறியிருந்ததைக் கண்டதும் பேயறைந்தவன் போல் அதிர்ந்து போனேன்! அதோ... அந்தத் தேயிலைத் தொழிற்சாலையை அடுத்து எங்கள் ஒற்றை வீடு இருந்த இடத்தில் - தோட்டத்துரைக்குரிய பங்களா ஏழடுக்குகளோடு கம்பீரமாய் வீற்றிருந்ததைக் கண்ணுற்ற நான் தட்டுத்தடுமாறினேன்.

நிலையிழந்து அலைக்கழிக்கும் உள்ளத்துடன் வேண்டா வெறுப்போடு அடியெடுத்து வைத்தேன். கலங்கிய கண்களுடனும் குழம்பிய மனத்துடனும் செய்வதறியாது தவித்தேன்!... அதோ!... பழைய லயம் - பலாமரத்து லயத்திலிருந்த அந்தத் தள்ளாத கிழவி, முதுமையின் மேலீட்டால் - நடையில் தள்ளாட்டத்துடனும் கையில் தடியுடனும் மெள்ள மெள்ள நகர்ந்து கொண்டிருக்கக் கண்டு, அவளருகில் ஓட்டமாய் ஓடிச் சென்று; 'பாட்டி...

பாட்டி என்னை தெரியுதா உனக்கு?...நான் காளிமுத்து கணக்கப் பிள்ளையோட மகன் — மூர்த்தி!... என்னோட அம்மா அப்பா எல்லாரும் வீடு மாத்தி போயிட்டாங்களா?' இப்ப எங்கே இருக்காங்க?' என்று உள்ளம் படபடக்க உதடு துடிக்க வினவிய என் தொனியில் அவசரமும் ஆர்வமும் வெடித்தன!......

கிழவியின் குழிவிழுந்த விழிகள், என்னை ஏற இறங்க ஊடுருவின. 'அப்பா நம்ம பழைய கணக்கப் பிள்ளையோட மவனா நீ?... மேல் படிப்புக்காக ஊருக்குப் போன மூர்த்திதானா நீ?... ஐயோ!... ஐயோ!... ஆண்டவனே? பாழாய்ப் போன ஊழ்வினையாரை விட்டுச்சு?... என் மவராசன் பெத்த மவனே உன்னை இந்தக் கோலத்தில் கண்ணார கண்டு உச்சி குளிர வேண்டிய உன்னோட அம்மா அப்பா, மங்கையோட குடும்பம் - இவங்க எல்லாரையும் பிரஜா உரிமை இல்லேனு நாடு கடத்திட்டாங்களே?... உனக்குத் தெரியாத? ஊருக்குத் தெரிவிக்கலியா??' என்று தொண்டை கர கரக்கக் கூறிய கிழவியின் வார்த்தைகளைச் செவி மடுத்ததும் என் உடல் முழுவதும் கிடு கிடுத்தது!...

அம்மம்மா அந்தச் சணம் என் மண்டையை யாரோ சம்மட்டி கொண்டு அடித்துத் தகர்த்துவது போல் துடிதுடித்து மருண்டேன். பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் காண பறந்தோடி வந்த நான் பேசா மௌனியாய் - பித்து பிடித்தவன் போலானேன். என்னுள்ளம் சுக்கு நூறாய் வெடித்துச் சிதறுண்டாற் போல் - துன்ப அலைகளுள் சிக்கித் தவித்த என் உடம்பு நரம்புகளனைத்தும் தளர்ந்து சோர்ந்தன!...

பிறந்த மண்ணை - என்னை வளர்ந்து ஆளாக்கிய பெருமைக்குரிய புண்ணிய பூமியை வெறித்து நோக்கிய என் விழிகளில் கண்ணீர்த் துளிகள் துளிர்த்துச் சிதறின!'

(யாவும் கற்பனை)

## ஒரு சதம்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்தை உடைப்பதற்கென்றே, அவருக்கு செனட்டர் பதவியைக் கொடுத்து" இந்துப் பல்கலைக் கழகக் கோரிக்கையையும் எழுப்புமாறு தூண்டிவிட்டது அப்போதைய சுதந்திரக்கட்சி அரசாங்கம்.

ஆனால் திரு. சு. நடேசனின் இந்துப் பல்கலைக் கழக கோரிக்கை இப்போதே வெறும் புஸ்வானமாகிவிட்டது. அந்த நேரத்தில் அக்கோரிக்கையை ஆதரித்தோ, அன்றி எதிர்த்தோ அப்போதே கருத்து வெளியிட்டிருக்கலாமே.

திரு. பொன்னம்பலத்தின் மனதில் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்ற சிந்தனை அரும்பும் முன்னரே 1955ம் ஆண்டே தமிழ் பல்கலைக்கழக இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கம் 10 ஆண்டுகள் வளர்ந்து வேரூன்றி, கனிதரும் வேளையில், 1965ம் ஆண்டிலிருந்து அதை இந்துப் பல்கலைக்கழகம் என்ற கல்லால் அடிக்க முற்பட்டுள்ளார் திரு. பொன்னம்பலம்.

அரசியல் பொறுமை காரணமாக திரு. பொன்னம்பலம் எழுப்பும் இந்துப் பல்கலைக்கழகக் கோரிக்கைக்கு தமிழ் மக்களிடம் ஆதரவு கிடைக்கவே இல்லை"

தமிழ் பேசும் மக்களுக்கு என தமிழில் போதிக்கப்படும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டுமென கொழும்புத் தமிழ்ச் சங்கமும் சென்ற வாரம் தனது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அரசாங்கத்தை கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்திரனில் உயிர்வாழ்க்கை சாத்தியமாகுமா?

அளப்பரிய பிரபஞ்சத்திலே பூமியானது சூரிய சுணத்தைச் சேர்ந்த ஒரு சிறிய கிரகமேயாகும். இது சூரியனைச் சுற்றிச்சுழன்று கொண்டிருக்கிறது. சூரியனை ஒரு நட்சத்திரம் என்றே கூறவேண்டும். அதற்கப்பால் பல நட்சத்திரக் கணங்களும், நட்சத்திர மண்டலங்களும் உள்ளன.

இவ்வாறு எல்லையற்றதாக வான வெளியின் பரப்பிருக்கும் போது மிக நுண்ணிய பகுதியான பூமியில் மட்டும்தான் உயிர்கள் வாழ்கின்றனவா? அல்லது மற்றக் கிரகங்களிலும் உயிர்கள் உண்டா? இவை போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்க விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள்.

### பூமியில் உயிர் தோன்றிய விதம்

மற்ற உலகங்களில் உயிர்கள் வாழ முடியுமா என்று தெரிந்து கொள்ளு முன்னர், பூமியில் உயிர்கள் தோன்றிய வரலாற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு பூமியில் இருப்பது போன்ற சூழ்நிலை இருந்தால் அக்கிரகங்களிலும் உயிர்கள் காணப்படுமா என்பது பற்றிப் பல கொள்கைகள் உருவாகி உள்ளன. முதலாவதாக, எல்லையற்ற விண்வெளியிலிருந்து பூமிக்கு உயிர் வந்தது அல்லது மற்றொரு கிரகம் அல்லது நட்சத்திரத்திலிருந்து உயிர் வந்தது என்று கூறப்படுகிறது. அடுத்தபடியாக ஆண்டவனே உலகத்தைப் படைத்தார் என்று கொள்கை கூறப்படுகிறது. மூன்றாவதாக பரிணாம வளர்ச்சிக் கொள்கை தெரிவிக்கப்படுகிறது. இதுவே மற்றக் கொள்கைகளை விட பொருத்தமாகக் காணப்படுகிறது.

உயிர் நூலைக் கவனிப்போமாளுல் உயிர் 'செல்'களின் சிக்கலான தன்மையை நாம் நன்கு தெரிந்து கொள்ள முடியும். கார்பன் மூலக் கூறுகளின் அடிப்படையிலேயே அது அமைந்திருக்கிறது. என்பதை நன்கு உணரவேண்டும். கார்பன் அணுக்கள் மற்ற அணுக்களுடன் சேர்ந்து உயிர்த் துடிப்புடன் கூடியமிகவும் சிக்கலான உயிராக காட்சியளிக்கிறது.

உயிர் தோன்றுவதற்கு ஒரு கிரகத்தில் சீரான வெப்பநிலை இருக்க வேண்டும். அதாவது வெப்பம் அதிகமாகவோ அல்லது கடுங்குளிராகவோ சீதோஷ்ண நிலை இருக்கக் கூடாது. மிகவும் வெப்பமாக இருந்தால் எந்த ரசாயன கூட்டுப் பொருளும் சிதைந்துவிடும்.

## விஞ்ஞான உலகம்

உயிர்கள் யாவும் ஓரளவு வெப்பத்தைத்தான் தாங்க முடியும். அதற்கு மேற்பட்டால் அவை உயிரிழக்கும். இது போலவே உயிர்களும் ஓரளவு குளிரைத்தான் தாங்கி நிற்கும் ஆற்றல் உள்ளது. அதற்குக் குறைந்தாலும் உயிர் நிலைத்திருக்காது. மேலும் உயிர்களுக்கு பிராணவாயு (ஆக்சிஜன்) வேண்டும். அடுத்தபடியாக உயிர்கள் வாழுவதற்குத் தண்ணீரும் அவசியம் வேண்டும்.

எந்தக் கிரகத்திலும் உயிர்கள் வாழ அதைச் சுற்றிலும் வாயு மண்டலம் இருக்கவேண்டும். உயிர் பிழைத்திருப்பதற்கு அது வாழும் கிரகத்தைச் சேர்ந்த சூரியன் அல்லது நட்சத்திரத்திலிருந்து ஓரளவு கதிரியக்கம் வரவேண்டும். அதன் சுழல் பாதையும் கிட்டத்தட்ட வட்டவடிவமாகவே இருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் சீரான வெப்பநிலை இருக்கும். இதையெல்லாம் கவனித்துப் பார்க்கும் போது சுக்கிரன், பூமி, செவ்வாய்க் கிரகங்களில்உயிர் வாழமுடியும் என்றும் மற்ற உலகங்களில் உயிர் வாழ முடியாது என்றும் தெரிகிறது.

பூமி தோன்றி 400 கோடி வருஷங்கள் இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. ஆரம்பத்தில் பூமி மிகவும் வெப்பமுள்ளதாக இருந்திருக்க வேண்டும். என்று கருதப்படுகிறது. காலப்போக்கில் பூமி குளிர்ச்சியடையவே நீராவி குளிர்ந்து கடல்கள் தோன்றியிருக்க வேண்டும். வாயு மண்டலத்தில் சிறிதளவு பிராணவாயு உள்ளது. சுவாசத்தில் இயற்கைத் தேய்வு முதலிய காரணங்களினால் அது குறைந்தாலும் கூட அதை ஈடுசெய்வதற்கு தாவரங்கள் கார்பன்-டை-ஆக்ஸைடை உட்கொண்டு. பிராண வாயுவை வெளியிடுகின்றன. இவ்வாறு பிராண வாயு பாதுகாக்கப்படுகிறது.

### சந்திரனில் உயிர்கள் உண்டா

சந்திரனில் வாயு மண்டலம் அல்லது தண்ணீர் எதுவும் இல்லை என்றே தெரிகிறது. அங்கு உயிர்கள் காணப்படுதல் அரிது.

மனிதன் சந்திர மண்டலத்திற்கும், மற்றக் கிரகங்களுக்கும், விண்வெளிக் கப்பல்களில் செல்ல முற்பட்டிருக்கும் இக்காலத்தில் பிற கிரகங்களில் வாழக்கூடிய உயிர்களைப்பற்றி அறிய வேண்டும் என்ற அவா இன்னும் அதிகரித்துள்ளது. 'பிரபஞ்சமெங்கிலும் உயிர்கள் பரவலாக உள்ளன. இது எல்லா 'உலகங்களின் சக்தியாகும்' என்று ஹார்வார்டு சர்வகலாசாலை வானக் கலைஞர் புரொபஸர் ஹார்லோ ஷேப்லி கூறுகிறார். சீரான வெப்பநிலையில் வாயு தண்ணீர் இருக்கும் கிரகங்களில் தகுந்த சூழ்நிலையில் உயிர்கள் தோன்றுகின்றன என்பதை ஏற்றுக் கொள்ளும் போக்கே விஞ்ஞானிகளிடையே காணப்படுகிறது.

உயிர்த் தத்துவம் அகில பிரபஞ்ச சத்தியாக அமைகிறது. மனிதன் மற்ற கிரகங்களுக்குச் செல்லும் போது இந்த உண்மையைக் கண்டறியலாம்.

# குலமும் குருதியும்

"பாண்டியூரன்"

''குருதியின் பெருக்கால் ஆவி
குறைந்துள ததனால் இன்னும்
ஒருசில வினடிக் குள்ளே
உயிர்பிரிந் திடலாம்; மீட்கப்
பொருந்திடும் குருதிக்கோர் ஆள்
போயுடன் கொணர்க' என்று
மருத்துவர் சொன்னார். கேட்டோர்
வாயினுள் நாவை மென்றார்!

மரணத்தின் வாயிற் சிக்கி
மார்க்கண்டன் மடியா வண்ணம்
தருணத்தில் இறைவன் தோன்றித்
தடுத்தனன் யமனை; மேலாம்...?
வருணத்தில் உதித்துக் கோயில்
வழிபடு தொண்டன் ஐயர்
மரணத்தை யணைக்கும் வேளை
வருபவர் யாரோ...? ஐயா!

காதலித் துள்ளம் ஒன்றிக்
கடிமணம் புரிந்து, காம
மோதலில் குருதி ஒன்றி
மூவராய்...மலர்ந்தும்; ஐயர்
சாதலை யணைக்கும் வேளை
சமன் செய வருமோ...? சுற்றம்
ஆதரவென்று செஞ்சும்
அவர் துணைக் குதவுவார் ஆர்?

கோயிலைக் கட்டித் தெய்வம்
குடியமர்த் திட்டோர், 'வாயில்'
நாயினை வளர்த்துத் தானம்
நாவினுற் செய்தோர், தங்கள்
பாயிலே பிறர் அமர்ந்தாற்
பலமுறை கழுவும் மேதார்,
கோயிலிற் பூசை செய்யும்
குருக்களுங் குதவ வில்லை!

இரத்தமோ இயல்பில் ஒன்றாய்
இருப்பினும், ஐயர் மெய்க்குத்
தரதநின்ற் பொருந்தும் ரத்தத்
தடியுடல் தேடிப் பார்த்தார்!
கரத்தையில் சீமான் விட்டுக்
குரிவினை யகற்றிக் 'கக்கூஸ்'
திருத்திடுஞ் செம்மல் அன்றிச்
சேய்தனும இணைந்தா ரில்லை!

[illegible]யிலுக் கிழாய் நம்மோர்
நடத்துவோன் தானம் செய்தான்!
கோயிலுட் குருக்கள் சென்றார்
குருதியுஞ் சென்ற தங்கே!
தாய்மையும் துணைவிக் கிந்தார்
தவழ்ந்தது குருதி சேயாய்!
தூய்மையை உணர்ந்தார் ஈசன்
தோட்டியாய்த் தோன்றி நின்றான்!

ஐயரைக் காக்க வந்த
அரனிவன் செய்த தானம்
பொய்யுடல் தாங்கிப் பேதம்
புழுகுவோர் புரிந்தா ராமோ...?
மெய்மையை அறிந்தார் ஐயர்
விழித்தபின், அன்றோர் போழ்து
வைத்தும் நினைவில் வந்து
மடிந்தது! மடிந்த துள்ளே!

# காங்கேசன்துறையில் சிரமதானம்

## வாலிபர்கள் காட்டிய முன்மாதிரி

❋ காங்கேசன்துறை எம். ஜி. ஆர். மன்ற வாலிபர்கள் காங்கேசன்துறை வெளிச்சவீட்டிற்குச் செல்லும் வீதியையும், காங்கேசன்துறை குளத்தடியில் 250 யார் நீளமுள்ள வீதியையும், பஸ் தரிப்பு மேடையையும் சிரமதானம் மூலம் செப்பனிட்டனர்.

❋ யாழ்ப்பாணம் — கோதீவு விலையிலிருந்து மறவன் புலவிற்குசெல்லும் கலையாபரணம் கோட்டை வீதி திருத்தப்படாததால் பொதுமக்கள் கஷ்டப்படுகின்றனர்.

❋ வடக்கில் பெய்த அடைமழை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

❋ பருத்தித்துறையிலிருந்து தம்பசிட்டிக்கும் முல்லைத்தீவுக்குமிடையே பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

❋ யாழ்ப்பாணம் இ. போ. ச. அலுவலகத்துக்கு தமிழில் எழுதப்படும் கடிதத்துக்கு ஆங்கிலத்திலேயே பதில் எழுதப்பட்டுவருவதாக பொதுமக்களிடையே குமுறல் ஏற்பட்டுள்ளது.

❋ மயிலிட்டிப் பகுதியில் மீன் விலை அதிகரித்துள்ளது.

❋ தம்பிலுவில் 2ம் குறிச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முயற்சியால் புதிய நெசவு நிலையமொன்று தம்பிலுவிலில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

❋ சாய்ந்தமருது ஆஸ்பத்திரி வீதியில் சேதடைந்த நிலையிலுள்ள பாலமொன்று நீண்ட காலமாக திருத்தப்படாததால் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர்.

❋ கூனித்தீவு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க நடவடிக்கை யெடுக்குமாறு அப்பகுதி மக்கள் சார்பில் அமைச்சர் திரு. திருச்செல்வத்திடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❋ அனலைதீவு விவசாயிகள் இவ்வருடம் நெல் உற்பத்தியிலீடுபட்டுள்ளனர். இதுவரை காலமும் புகையிலை உற்பத்தி செய்தவர்கள் இவர்கள்.

❋ அனலைதீவு விவசாயிகளுக்கு அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவு சங்கம் கடனுதவி அளித்துள்ளது.

❋ மன்னார் — முருங்கன் பஸ் சேவை சீர்கேடடைந்துள்ளது. இதனால் மக்கள் தொல்லையடைகிறார்கள்.

❋ யாழ்ப்பாணத்திலுள்ள 'ஈழச்சாக்' விற்பனவு நிலையத்தில் பனம்பொருள் உற்பத்திப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

[illegible] ராயன்குளம் தமிழ்ப்பாடசாலையும் சனவரி முதல் தரமுயர்த்தப்படும்.

❋ காங்கேசன்துறைப் பகுதியிலுள்ள வர்த்தகர்களின் கொள்ளை லாபத்தைக் கண்டுபிடிப்பதற்கு திடீர் சோதனைக் குழுவை அனுப்புமாறு மயிலிட்டி கண்ணகி படிப்பகத்தினர் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியைக் கோரியுள்ளனர்.

❋ காத்தான்குடி 6-ம் குறிச்சி பகுதியில் புதிய பள்ளி

## தமிழ் பகுதிகளிலே..

❋ முல்லைத்தீவு மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் குழந்தைகளின் பால்மாவை பால் சபையினர் திடீரென நிறுத்தியுள்ளனர். இதனால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடைகிறார்கள்.

❋ கெருடாவிலில் ரூபா 5000 செலவில் மீன் சந்தையொன்றை நிறுவ உடுப்பிட்டி கிராம சபை முடிவு செய்துள்ளது.

❋ [illegible]

வாசலொன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

❋ தம்புலுவில் மகா வித்தியாலயம், விபுலானந்த மகா வித்தியாலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

❋ திருமலை மாவட்டத்திலுள்ள ஒன்பது கிராம சபைகளின் பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கிறது.

❋ கல்முனைக்கும் சவளக்கடைக்குமிடையேயுள்ள கிட்டங்கி ஆற்றுக்கு இன்னும்பாலமமைக்கப்படாததனால், பொதுமக்கள போக்குவரத்துக்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

❋ சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி அரசாங்க அச்சகப் பகுதியினருக்கு எழுதிய கடிதமொன்றில், அரசாங்க வர்த்தமானி உரிய நேரத்தில் கிடைப்பதில்லையென்று புகார் செய்துள்ளார்.

❋ கோப்பாய் — யாழ்ப்பாணம் பஸ் சேவை மீண்டும் சீர்கேடடைந்ததால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக இ. போ. ச. அதிகாரிகளுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

### காவல் முதல்வன்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

நான் உன்னைக் கொல்லப் போகிறேன். உன்னை யார் காப்பாற்றுவார்கள்? என்று கேட்டான். உடனே பூதன் வெலவெலத்துப்போய் "ஐயோ என்னைக் கொல்லாதீர்கள் உங்களை விட்டால் என்னைக் காப்பாற்ற யாருமில்லை" என்று கதறினன். அப்போது பெருமானர் புன்முறுவலுடன் "அப்பனே, உன்னையும் அந்த ஆண்டவனேகாப்பாற்றுவான். நம்பிக்கைதான் வேண்டும்" என்றார். பூதன் மனம் மாறி அது முதல் இறைவனிடம் பக்தி செலுத்தலானான்.

தொகுப்பு: இரா.கைலைநாதன் மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காட்சியளிக்கிறது

கெயிட்டி (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) வின்சர் (யாழ்ப்பாணம்) நெல்சன் (திருமலை)

ஸ்ரீ முருகன் (வவுனியா) இம்பீரியல் (மட்டுநகர்)

★ எஸ். எஸ். ராஜேந்திரன், ★ விஜயகுமாரி, ★ எஸ். வி. ரங்கராவ் ★ ரவிச்சந்திரன், ★ காஞ்சனா, ★ நாகேஷ் ★ எஸ்.கே.ராமசாமி ★ சுந்தரிபாய், ★ வித்தியாவதி நடித்த



# தேடிவந்த திருமகள்

## சிலோன் தியேட்டர்ஸ் அளிக்கும் கிறிஸ்மஸ் திரைவிருந்து

ஜெமினி கணேசன், சாவித்திரி டி. எஸ். பாலையா எம். ஆர். ராதா

# ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்!



வெற்றிகரமான 2வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்)

ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (அட்டன்)

சந்திரபாபு சாவித்திரி விஜயா மனோகர் நடிக்கும்

# தட்டுங்கள் திறக்கப்படும்

## 2வது ஜனத்திரள் வாரம்

சபயர் (வெள்ளவத்தை)

மைலன் (கொழும்பு)

நியூசினிமா (குருநாகல்) சென்ட்ரல் (மாத்தளை)

அசோகன் கே. ஆர். விஜயா நடிக்கும்



தேவரின்

# காட்டு ராணி

## விரைவில் எதிர்பாருங்கள்!

ரவிச்சந்திரன், நாகேஷ், கல்பனா நடிக்கும்

# மெட்ராஸ் டு பாண்டிச்சேரி

# மூன்றாவது மகிழ்ச்சி பொங்கும் வாரம்!!

'மங்கையர் திலகம்' 'மாதர்குல மாணிக்கம்' என்பதெல்லாம் பொருந்தாது அவற்றினும் உயர்ந்தவள் 'பவானி'

கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி முரசு கொட்டிய 'சாரதா' 'சித்தி' ஆகிய சிறந்த படங்களை உங்களுக்கு அளித்த இயக்குநர் திலகத்தின் மற்றும் ஓர் அதி உன்னத படைப்பு!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்)

ராஜேஸ்வரா (மட்டுநகர்) லிபர்ட்டி (ஹட்டன்)

ஆனந்தா (கம்பளை) சிகிரி (பண்டாரவளை)



ஜெய்சங்கர் அசோகன் நாகேஷ் விஜயகுமாரி எல். விஜயலட்சுமி ராஜஸ்ரீ வாணிஸ்ரீ நடித்த

அண்ணா புரொடக்ஷன்ஸ்

# பவானி

கதை - வசனம்: இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

## எமது அடுத்த வெளியீடு

இயக்குநர் திலகத்தின் உயரியபடைப்பு கே. எஸ். கோபாலகிருஷ்ணன் இதுவரை உருவாக்கிய படங்களில் எல்லாம் சிறந்த படம்

★ எஸ். வி. சுப்பையா ★ ரங்கராவ் ★ பத்மினி ★ நாகேஷ் நடித்த

# கண் கண்ட தெய்வம்


இப்பத்திரிகை இலோன் நியூஸ்பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1967-ம் வருடம் [illegible] அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org